விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Sri Lanka

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2044 மார்கழி 19 வெள்ளிக்கிழமை (03.01.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 015

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# ஜனாதிபதியுடன் நேற்று முதலமைச்சர் சந்திப்பு!

## வடக்கு மாகாணசபை குறித்து விளக்கமளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனும் நேற்றுச் சந்தித்துப் பேசியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் இடம்பெறும் நிர்வாகப்பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. இச் சந்திப்பு நேற்று அலரி மாளிகையில் இடம்பெற்றுள்ளது.

~ 19ஆம் பக்கம் பார்க்க...

# புலிகளுக்கு எதிராக போராடியவர் இந். துணைப் படைத்தளபதியானார்



(டெல்லி)

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டிருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் முக்கிய பங்காற்றிய லெப்.ஜெனரல் தல்பீர்சிங் சுகக் இந்தியாவின் புதிய துணை படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

1987ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதி காக்கும் படையினரால் முன்னெடுக்கப்பட்ட ஒப்பரேசன் பவான் படை நடவடிக்கையில் இவர் பங்கேற்றிருந்தார்.

இதன்போது இந்திய படைத் தரப்பின் 53-வது காலால் படைப் பிரிவின் கீழ் செயற்பட்ட கூர்க்கா படைப்பிரிவு ஒன்றின் கட்டளை அதிகாரியாக இவர் பணியாற்றியிருந்தார்.

புலனாய்வு மற்றும் தீவிரவாத கிளர்ச்சி முறியடிப்பு நடவடிக்கைகளில் நிபுணரான தல்பீர்சிங் சுகக், காஷ்மீர் மற்றும் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஆயுதப் போராட்

20ம் பக்கம் பார்க்க

# மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மீண்டும் முல்லைத்தீவில்!

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டு இறுதிக் கட்ட போரின் போது கடுமையான போர் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படும் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் மீண்டும் இறுதிப் போர் இடம்பெற்ற பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.



கடந்த வாரம் இராணுவத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்ற நடவடிக்கையில், மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், விடுதலைப் புலிகளின் முன்னாள் கோட்டையான முல்லைத்தீவு மாவட்ட கட்டளைத் தளபதியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த மாவட்டத்தில் போரின் இறுதிக்கட்ட மோதல்களில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு மதிப்பிட்டுள்ளதுடன் அங்கு மிக மோசமான போர் குற்றங்களை மேற்கொண்டதாக இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் வெலிவேரிய பிரதேசத்தில் இடம்பெற்ற பொதுமக்களின் ஆர்ப்பாட்டம் மீது இராணுவம் தாக்கிய சர்ச்சைக்குரிய சம்பவம் தொடர்பான இராணுவ விசாரணை பொறுப்பதிகாரியாக ஜகத் டயஸ் நியமிக்கப்பட்டிருந்தார்.

19ம் பக்கம் பார்க்க



புத்தாண்டு வாழ்த்துக்களைப் பரிமாறும் ஜனாதிபதியும் வட மாகாண முதலமைச்சரும்...

# அவுஸ்திரேலியாவில் தமிழர்கள் அவதி

(கொழும்பு)

இலங்கை தமிழ் அகதிகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் ஹிட்லரை போல நடத்துவதாக ஓய்வு பெற்ற ராஜதந்திரி புருஸ் ஹெயக் குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹிட்லர் காலத்தில் யூதர்களின் கருத்துக்கள் கேட்கப்படாமல், அவர்கள் அழிக்கப்பட்டனர்.

அதேபோன்று தற்போது அவுஸ்தி

20ம் பக்கம் பார்க்க

# 19 வருடங்களில் 6,500 பேரை காணவில்லை என முறையீடு

## ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் 6,500 பேர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

1990 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இவர்கள் காணாமற் போயுள்ளதாக உறவினர்கள் முன்வைத்த முறைப்பாடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் மேல் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி மெக்ஸ்வல் பரணகம கூறினார்.

இந்த காலப்பகுதியில் 4,500 இராணுவத்தினர் காணாமற் போயுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் கடந்த டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவுபெற்றதாக ஆணைக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகள் மீதான விசாரணைகள் இம்மாதம் 17 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிரகாரம் எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகளை விசாரிக்க திட்டமிட்டுள்ளதாக காணாமற்போனோர் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவிக்கின்றது.

இதேவேளை வன்னி இறுதி யுத்தத்தில் மாத்திரம் சுமார் 15ஆயிரம் பேர் வரையில் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# கனேடிய எம்.பி வீட்டுக்காவலில்?

## இலங்கை மறுப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினரான ராதிகா சிற்சபேசன் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை இலங்கை மறுத்துள்ளது. அவர், தன்னுடைய நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப தான் விரும்பிய இடங்களுக்கு சென்றுவருகின்றார் என்றும் தெரிவித்துள்ளது.

அவரை வீட்டுக்காவலில் வைப்பதற்கு பொலிஸாருக்கோ அல்லது இராணுவத்தினருக்கோ எவ்விதமான அதிகாரங்களும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கு உத்தியோகபூர்வமற்ற விஜயமொன்றை மேற்கொண்டுள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசன் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளதாக கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ராதிகா சிற்சபேசனை குடிவரவு திணைக்கள அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-11)

# எரிபொருள் இறக்க அமெரிக்கா தடை

(கொழும்பு)

ஈரானிடமிருந்து எரிபொருள் இறக்குமதி செய்ய முடியாது என இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்கா அறிவித்துள்ளது.

ஈரானிற்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளது.

எவ்வாறெனினும், ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு சலுகை வழங்கியிருந்தது.

எனினும், ஈரானி

19ம் பக்கம் பார்க்க

# சிறப்பாக செயற்படும் வடக்கு மாகாண சபை

## ஆளுநர் புகழாரம்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் சிறப்பாகவுள்ளதாக பாராட்டு தெரிவித்துள்ள ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தன்னுடைய ஒத்துழைப்பு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு தொடர்ந்து கிடைக்கும் எனவும் பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

இதேவேளை வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் உட்பட சகல அரசாங்க அதிகாரிகளும் மாகாண சபைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த வருடம் வெளியான கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் மாகாண மட்டத்தில் முன்னிலை பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம் பெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய அவர்மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 மாதங்களுக்கு மேலாக செயற்பட்டு வரும் வடக்கு மாகாண சபையின் சேவைகள் சிறப்பாக அமைந்துள்ளது.

19ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனித உரிமை மீறல் குறித்து சர்வதேச விசாரணை அவசியம்

## மீண்டும் வலியுறுத்தினார் அனந்தி

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ள வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் காணாமல் போனோர் விவகாரத்தை விசாரணைசெய்ய அரசாங்கத்தினால் விசாரணைக்குழு அமைக்கப்படுவது ஏமாற்று நாடகம் எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த காலத்தில் காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணைக்குழு அமைக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு கூறி வருவது ஏமாற்றும் செயற்பாடாகும்.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவை மாநாடு இடம்பெறவுள்ளது. இதனை முன்னிட்டு காணாமல் போனவர்கள் தொடர்பாக இலங்கை அரசு விசாரணைக்குழு அமைப்பதாக கூறுகின்றது. இது கண்துடைப்பு வேலையாகவுள்ளது. இவ்வாறான பல விசாரணைக்குழுக்கள் முன்னர் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இதுவரையில் எதுவித தீர்வுகளும் வழங்கப்படவில்லை.

எனவே சர்வதேசம் இதில் நேரடியாக தலையிட்டு இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் அதன் மூலம் மக்கள் அச்சமின்றி சாட்சியமளிக்க வேண்டும். கனேடியநாட்டு பாராளுமன்ற உறுப்பினர் ராதிகாவை நான் நட்பு ரீதியாக சந்தித்தேன். இலங்கையில் நடத்தவற்றினை கனடாவில் அவர் எடுத்துரைப்பார் என நம்புகின்றேன்.



இன அழிப்பு என்ற விடயம் ஒரு மைல் கல். போர்குற்றம் என்று கூறி சிறுவட்டத்திற்குள் இருந்த நாம், இன அழிப்பு என்ற விடயத்தை வலியுறுத்தி எமது எதிர்கால செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்.

நான் சில கொள்கைகளுடன் அரசியலுக்கு வந்திருக்கின்றேன். கொள்கைகளிலிருந்து மாறாது எனது கடமைகளை செய்யும் போது, பல விமர்சனங்கள், பல குறைகள் வரலாம். இதற்காக நான் பின்னோக்கி செல்ல மாட்டேன். முன்வைத்த் கொள்கைகளை நடைமுறைப்படுத்தியே தீருவேன்.

அரசியலில் நான் நீண்டகால உறுப்பினராக இருப்பதற்கு சிந்திக்கவில்லையெனவும் நான் முன்வைத்த கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் அரசியலில் இருந்து ஒதுங்கி விடுவேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

# ஹிருணிகா கொழும்பில் போட்டி

(கொழும்பு)

சுட்டுக்கொல்லப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் ஆலோசகருமான பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மகள் ஹிருணிகா பிரேமச்சந்திர எதிர்வரும் மாகாண சபைத தேர்தலில் போட்டியிட உள்ளார்.

அவர் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல் மேல் மாகாண சபைத் தேர்தலில கொழும்பு மாவட்டத்தில் அமைச்சர் தினேஷ் குணவர்தனவின் மகன் சாதாமினி குணவர்தன: களுத்துறையில் அமைச்சர் குமார வெல்கமவின் மகன சேனால் வெல்கம ஆகியோரும் போட்டியிட உள்ளனர்.

அதேவேளை ஊழல். மோசடி. ஒழுக்க சீர்கேடாக நடந்து கொண்ட எந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கு மீண்டும் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்குவதில்லை என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது. (எ-11)

# ஜெனிவாவில் சிங்கள மக்கள் மார்ச்சில் ஆர்ப்பாட்டம்

(நியூயோர்க்)

ஜெனீவாவில்புலம்பெயர் தமிழர்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் உலகளாவிய ரீதியில் வாழும் சிங்களவர்களும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச மாதம் ஜெனீவாவிலுள்ள மனித உரிமைகள் அலுவலகம் முன்பாக இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த திட்டமிட்டுள்ளனர். இத்தாலி, பிரான்ஸ், பிரித்தானியா உட்படலான பல்வேறு நாடுகளில் வாழும் இலங்கை சிங்களவர்கள் ஒன்றிணைந்து புலி ஆதரவு புலம்பெயர் தமிழர்களுக்கு எதிராக இந்த பாரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தவுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை பிரான்ஸின் தலைநகரான பரிஸில் இடம்பெற்றுள்ளது என்றும் திவயின அச்செய்தியில் தெரிவித்துள்ளது. (எ-11)

# ஹெரோயின் உரிமையாளருடன் ஒன்றாக உணவு உட்கொண்டேன்

## வேறு எதுவும் தெரியாது என்கிறார் பிரதமர்



(கொழும்பு)

கடந்த வருடத்தின் இறுதிக் கட்டத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த ஹெரோயின் கொள்கலனின் உரிமையாளர தன்னுடன் ஒரு மேசையில் உணவை உட்கொண்டதாக பிரதமர டி.எம். ஜயரத்ன தெரிவித்தார். கம்பளையில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், நான் வீட்டில் உணவை உட்கொண்டிருந்த போது எனது செயலாளர் விட்டச்சி அங்கு வந்து தன்னுடன் அழைத்து வந்த நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தார். நான் அவரையும் சாப்பிடவருமாறு அழைத்தேன். அவரும் எங்களுடன் இணைந்து சாப்பிட்டார். அவரது சில பொருட்கள் பல மாதங்களாக சுங்க திணைக்களத்தில் இருப்பதாகவும் அதனை வெளியில் கொண்டுவர உதவுமாறும் எனது செயலாளர் என்னிடம் கேட்டார்.

இதனையடுத்து எனது மகன் அந்த விடயத்தில் தலையிட்டார். கொள்கலனை விடுவிக்க உதவியை செய்யுமாறு எனது மற்றுமொரு செயலாளரான கீர்த்தியிடம் எனது மகன் கூறியுள்ளார். இதனையடுத்து கொள்கலன் அறவிடப்படும் தாமத கட்டணத்தில் இருந்து விலக்கமளிக்குமாறு கோரி எனது செயலாளர் நிறுவனத்திற்கு கடிதம் வழங்கியுள்ளார்.

எனினும் அந்த நபர் கொண்டு வந்திருந்தது ஹெரோயின் போதைப் பொருள் என்பது எனக்கும் தெரியாது. எனது மகனுக்கும் தெரியாது. ஹெரோயின் போதைப் பொருள் தொடர்பில் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் ஓமல்பே சோபித என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து கைது செய்ய வேண்டும், பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கூறுகிறார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கம்பளை நகர சபையின் வேட்பாளராக ஒருவரை நிறுத்த ஓமல்பே சோபித முன்வைத்த யோசனையை நான் நிராகரித்து விட்டேன். இதன் காரணமாகவே கொண்ட கோபத்தினால் அவர் என் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வருகிறார் என்றார். (எ-11)

# அரச தரப்பு உறுப்பினர்கள் ஐ.தே.கவுடன் இணைவு?

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆட்சி அதிகாரத்தில் இருககும் தென் மாகாண சபையின் ஆளும் கட்சியின் கொறடாவான ஜஸ்டின் கலப்பத்தி ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய தீர்மானித்துள்ளார்.

கலப்பத்தி, ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்த போதும்எதிர்வரும்தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட மாட்டார் எனவும் அதற்கு பதிலாக அவரது சகோதரரும் மாத்தறை மாநகர சபையின் உறுப்பினருமான சத்துர கலப்பத்தி, ஐக்கிய தேசியக் கட்சியின் கீழ் தேர்தலில் போட்டியிடுவார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய மாகாண சபை உறுப்பினர் ஒருவர் ஐக்கிய தேசியக கட்சியில் இணைய உள்ளதாக அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பனர் அஜித் பீ.பெரேரா கூறியிருந்தார்.

அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் கிறிஷ்சாந்த புஷ்பகுமார நேற்று முன்தினம் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார்.

இதேவேளை நாட்டின் உச்சியில் இடி வழுந்து விட்டதாக ஜே.வி.பியின்மேல்மாகாண முதலமைச்சர் வேட்பாளர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

மொறட்டுமுல்ல மோல்பே சந்தியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்பொழுதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் உச்சியின் மீது இடி விழுந்துவிட்டது. நாட்டின் எதிர் காலம்என்னவாக இருக்குமோ' என்பதை எண்ணிப்பார்க்க முடியாது.

ரணில் விக்ரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை பொது வேட்பாளராக நிறுத்த முயற்சித்து வருகிறார். இது அர்த்தமிலலாத முட்டாள் தனமான வேலை.

சந்திரிகா, அரசாங்கத்தில் இருக்கும் தனக்கு ஆதரவான அமைச்சர்கள் பிரித்து கொண்டு வந்து எதிர்க்கட்சிக்கு ஆதரவளிக்க வேணடும். இதன் மூலம் எதிர்க் கட்சியை மேலும் பலப்படுத்திக் கொள்ள முடியும் என்றார். (எ-11)

# சுகாதார வைத்திய அதிகாரியை தாக்க முற்பட்ட இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியை பொலிஸாருக்கு முன்பாகத் தாக்குவதற்கு முற்பட்ட இளைஞர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் சுகாதார நடைமுறைகளைப் பார்வையிடுவதற்காகச் சென்றபோது நேற்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த வலி.வடக்கைச் சேர்ந்த மக்கள் வசிக்கின்ற மல்லாகம் கோணப்புலம் நலன்புரி முகாமில் 10 குடும்பங்களுக்கு ஒன்று என்ற ரீதியில் 18 வரையான பொது மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த இளைஞர் ஒரு மலசலகூடத்தை பூட்டி வைத்துவிட்டு தங்கள் நெருங்கிய உறவினர்களான இரு குடும்பங்கள் மட்டும் பாவிக்க அனுமதித்துள்ளார். இதனால் ஏனைய எட்டு வரையான குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. இதேவேளை நேற்று அந்த முகாமுக்குச் சென்ற சுகாதார வைத்திய அதிகாரியிடம் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் இந்த விடயத்தை எடுதது கூறியுள்ளனர்.

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி ப.நந்தகுமார், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பொலிஸார் ஆகியோர் கோணப்புலம் நலன்புரி நிலையத்திற்குச் சென்று மாணவர்களுககான விழிப்புணர்வுக் கூட்டத்தை நடத்தினர்.

இதன் பின்னர் மலசலகூடத்தை மூடி வைத்திருந்தவருடன் உரையாடி மலசலகூடத்தை ஏனையவர்களின் பாவனைக்காக திறந்துவிடுமாறு கூறினார். ஆனால், சுகாதார வைத்திய அதிகாரியுடன் முரண்பட்ட குறித்த இளைஞர் பொலிஸாருக்கு முன்பாக சுகாதார வைத்திய அதிகாரியைத்தாக்க முற்பட்டுள்ளார். இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அந்த இளைஞர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)


## காணி விற்பனைக்கு

கோப்பாய் முருகன் கோவில் பிரதான வீதிக்கு சமீபமாக வீட்டுடன் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு: 0776758131, 0776740836

(5202)


# 26 தமிழக மீனவர்கள் கைது

(கொழும்பு)

தமிழகத்தை சேர்ந்த மேலும் 26 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 29-ம் திகதி புதுக்கோட்டை ஜெகதாபட்டிணம், கோட்டைபட்டிணம் பகுதிகளில் இருந்து மீன்பிடிக்க சென்ற தமிழக மீனவர்கள் 22 பேரை இலங்கை கடற்படையினர் கைதுசெய்ததோடு, 6 படகுகளையும் இழுத்து சென்றனர்.

அதற்கு மறுநாள் 30-ம் திகதி பாம்பன் மீனவர்கள் 18 பேரை கைதுசெய்தனர்.

இந்த பரபரப்பு சம்பவம் அடங்குவதற்குள் மண்டபத்தைச் சேர்ந்த 26 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்துள்ளதாக தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நான்கு படகுகளில் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த அவர்களை, இலங்கை கடற்படையினர் சிறைபிடித்து சென்றதுடன், படகுகளையும் பறிமுதல் செய்ததாக தமிழக செய்திகள் குறிப்பிடுகின்றன.

இதன்படி கடந்த ஒரு வாரத்திற்குள் 3 தடவை இலங்கை கடற்படையினர், தமிழக மீனவர்களை கைதுசெய்துள்ளமை மீனவர்களை கவலையடையச் செய்துள்ளதாக தெரிகிறது. (எ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## வியாபார மேன்மை

அவர் ஒரு வித்தியாசமான மனிதர்.

பாக்தாத் நகரத்திலே அவர் ஒரு துணிக்கடை வைத்திருந்தார். அவரிடம் பெரும்பாலானவர்கள் துணிமணிகள் வாங்கவருவார்கள். நீண்ட தூரத்திலே இருந்தும் அந்தக் கடையைத் தேடி வருவார்கள்.

கிராமத்து மக்கள் எல்லோரும் வருவார்கள். அதனாலே எப்போதும் அந்தக் கடையிலே கூட்டம் நிரம்பி இருக்கும்.

அவரது முகம் எப்போதும் புன்னகையுடன் காணப்படும்.....

நியாயமான விலை..... தரமான துணிகள்...

துணியிலே ஏதாவது குறை இருந்தால் அதை மறைக்க மாட்டார்..., வெளிப்படையாக சொல்லி விடுவார்...

இதிலே இன்னது குறை என்று சொல்லித்தான் விற்பனை செய்வார்.

அதே மாதிரி... வாங்கிக் கொண்டு போனவர்கள்... ஏதாவது குறை சொல்லி வாங்கிய துணியைத் திருப்பிக் கொண்டு வந்தால் அதை முகம் சுளிக்காமல் வாங்குவார். வாங்கிக் கொண்டு அதற்குரிய பணத்தை கொடுத்திடுவார். அல்லது வேற துணி வேண்டுமென்றாலும் வாங்கிக் கொள்ளலாம் என்றும் கூறுவார்.

வேறு கடைக்கு ஒருவர் 30 பண்டல்கள் துணி அனுப்பி வைக்குமாறு அவரிடம் ஓடர் கொடுத்திருந்தார். உடனே இவர் 30 பண்டல்கள் தயார் பண்ணினார்.

கடையிலேயிருந்த தன்னுடைய உதவியாளர் மூலமாக அதைக் கொடுத்தனுப்பினார்.

அதை... குறிப்பிட்ட வாடிக்கையாளரிடம் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு மூன்று இலட்சம் ரூபாய் பணத்தை வாங்கிக் கொண்டு வரும்படியாக சொல்லி அனுப்பினார். அத்தோடு இன்னொரு செய்தியையும் சொல்லி அனுப்பினார்.

"ஒரு சில பண்டல்களிலே சில குறைகள் இருந்தது.

அதை மறக்காமல் வாடிக்கையாளரிடம் கூறிவிட்டு அதற்கு பின்புதான் துணிகளை அவரிடம் கொடுத்துப் பணம் வாங்க வேண்டும்.!" என்று சொல்லி அனுப்பினார்.

உதவியாளர் போனார். மூன்று இலட்சம் ரூபாவோடு திரும்பி வந்தார். "இதோ பணம்!" என்றார்.

இவர் அதைத் தொட்டுக்கூட பார்க்கவில்லை...

அதற்கு முன்னாடி "துணியிலே இருந்த குறைபாடுகளை அவரிடம் சொன்னாயா?" என்று கேட்டார்.

உதவியாளர் தலையை சொறிஞ்சுகொண்டே... "அதை மறந்து விட்டேன்!" என்று இழுத்தார்.

அவ்வளவு தான். துணிக்கடை அதிபர் முகம் இறுக்கமாய்ப் போய்விட்டது!

"இப்போது என்ன செய்வது?" என்று ஒரு கணம் யோசனை செய்தார். ஒரு முடிவுக்கு வந்தார்.

அந்தப் பணத்தை ஏழை எளிய மக்களுக்குத் தானம் கொடுத்து விட்டார்.

இன்னொருநாள். அதே கடைக்கு ஒருபெண்மணி வந்தார். விலை உயர்ந்த பட்டுத்துணி ஒன்றை விற்பனை செய்வதாக வந்தார்.

"என்ன விலை சொல்கிறீர்கள்?" என்று இவர் கேட்டார்.

அந்த அம்மா தயங்கித் தயங்கி "ஆயிரம் திர்ஹம்கள்" என்றார்.

இவர் அந்தத் துணியை பார்த்துவிட்டு சொன்னார்;

"இது அதைவிட விலை உயர்வாக இருக்கும் போல தெரிகிறது!" என்றார்.

அந்த அம்மாவுக்கு சற்று வியப்பாக இருந்தது.

புன்னகையோடு "இரண்டாயிரம்?" என்றார்.

"இல்லை... இல்லை... இதுக்கு நான் ஐயாயிரம் திர்ஹம் தாறேன்!" என்று சொல்லிவிட்டு கல்லாப்பெட்டியை திறந்தார். பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

"இப்படியும் ஒரு வியாபாரியா?" என்று ஆச்சரியமாகப் பார்த்தார் அந்த அம்மா.

அந்த துணி வியாபாரியின் பெயர் என்ன தெரியுமா?

நுஃமான் பின் ஸாபித் இமாம் அபூஹனீஃபா எனப் பெயர் பெற்று இஸ்லாமிய வரலாற்றிலே ஒரு தனியிடத்தைப் பெற்றவர். இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களையெல்லாம் வகுத்துத் தந்தவர். வணிகத்திலே எந்த அளவுக்கு நேர்மையாக இருக்க வேண்டும் என்கிறதுக்கு அவர் ஓர் உதாரணம்.

ஒரு நபர் இருந்தான்.

ஒரு நகைக் கடைக்குப் போனான்.

"கைவசம் ஒரு நல்ல நகை வைத்திருக்கிறேன். அதை விலைக்கு எடுக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"சரி கொடுங்கள் பார்க்கலாம்!" என்றார் கடைக்காரர்.

கொடுத்தான்.

வாங்கிப் பார்த்தார்.

பார்த்துவிட்டு, "இது சரியில்லே!" என்றார்.

"என்னாங்க...? ஒரு நல்ல நகையை உங்கள் கடையிலேயே விற்கிறது சரியில்லையா?" என்றான்.

"அப்படி இல்லை... என்னுடைய கடையிலே திருட்டுப் போன நகையை என்னுடைய கடையிலேயே கொண்டுவந்து விற்கிறது சரியில்லை!" என்றார்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஐ.நா. உயர்மட்ட பார்வையாளர் குழுவை விரைவில் இலங்கைக்கு அனுப்புங்கள்

## பழ.நெடுமாறன் வலியுறுத்து

இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தும் அதிகரித்துவருவதால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறும் ஜெனீவா மாநாட்டிற்கு முன் ஐ.நாவின் உயரமட்டப் பார்வையாளர் குழுவொன்றை இலங்கைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கவேண்டும் என உலகத் தமிழர் பேரமைப்புத் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் இதனை வலியுறுத்தி மனித உரிமைகள் சபையிடம் உலகத் தமிழர் பேரவை மனு ஒன்றைக் கையளிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிகையில்,

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கையில் நாளுக்கு நாள் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றன. இலங்கை அரசினதும் அதன் படைகளினதும அராஜகங்கள் தலைவிரித்தாடுகின்றன இலங்கையின் உண்மை நிலவரங்கள் வெளியுலகத்திற்குத் தெரிந்து விடும் என்ற அச்சத்தால் இலங்கைக்கு செல்லும் வெளிநாட்டு ஊடக வியலாளர்கள் இலங்கை அரசால் விரட்டப்படுகின்றனர் கைதுசெயயப்படுகின்றனர் நாடு கடத்தப்படுகின்றனர்.

ஐ.நாவில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இரண்டு தீர்மானங்களையும் நிறைவேற்றாமல்காலத்தைக்கடத்தி வரும் இலங்கை அரசுக்கு இறுதியில் பேராபதது ஏற்படும். இதை உணர்ந்தும் இலங்கை அரசு தான் தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருகின்றது. எனவே ஐ.நாவின் உயர மட்ட பார்வை யாளர் குழுவொன்றை இலஙகைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனித உரிமைகள் பேரவை யிடம் உலகத் தமிழர் பேரமைப்பு மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் புதிய கல்வி முறை அறிமுகம்

இவ்வருடம் தொடக்கம் பல்கலைக்கழக மாணவர்களுக்கு மத்திய கல்விமுறை ஒன்றை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் கலை, சமூகக்கல்வி மற்றும் முகாமைத்துவ பீடங்களில் முதலில் இந்த கல்விமுறை மாற்றம் அறிமுகம் செய்யப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார். அதற்கு ஏற்றவாறு பாடப்புத்தகங்கள் அச்சிடவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விரிவுரைகளுக்கு பதிலாக மாணவர்களின் பங்களிப்பில் கல்வி கற்பிக்கும் முறையை அறிமுகம் செய்வதே நோக்கமென உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிக்கின்றார்.

படைப்புத்திறன்மிக்க மாணவர் சந்ததி ஒன்றை உருவாக்கி குழுவாக இயங்கும் வகையில் மாணவர் மத்திய கல்விமுறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

## வள்ளுவன் ச.ச.நிலைய நிர்வாக தெரிவு

வள்ளுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 25 ஆம் திகதி நடைபெற்றது.

இக்கூட்டத்தில்இவ் ஆண்டுக்கானபுதியநிர்வாகசபைஉறுப்பினர் தெரிவு இடம் பெற்றது. இதில் தலைவராக பொ.குமாரசாமி, செயலாளராக கனகராசா, பொருளாளராக செ.தேவராசா உப தலைவராக ஞா.உதயசங்கர், உப செயலாளராக மு.ரவிச்சந்திரன் ஆகியோரும் தெரிவாகினர். நிர்வாக உறுப்பினர்களாக மு.இந்திரன், தி.நந்தகுமார், தே.ரதீஸ்வரன், சு.மதிகரன், து.அயந்தன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (அ-2)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 90 | 70 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 50-80 | 70 | 90 | 100 |
| தக்காளி | 70 | 60 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 30 | 40 | 40 |
| கோவா | 20 | 20 | 30 | 40 |
| கரட் | 40 | 40 | 60 | 80 |
| பூசணி | 30 | 30 | 25 | 40 |
| புடோல் | 30 | 40 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 100-160 | 180 | 190 | 140 |
| பெரிய வெங்காயம் | 60-90 | 100 | 150 | 90 |
| பாகற்காய் | 80-100 | 140 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 30 | 35 | 50 |
| பயற்றங்காய் | 50-70 | 80 | 80 | 80 |
| லீக்ஸ் | 70 | 70 | 70 | 100 |
| பீற்றூட் | - | 60 | 60 | 80 |
| கறிமிளகாய் | 100 | 150 | 150 | 160 |
| முருங்கைக்காய் | - | 400 | - | - |
| போஞ்சி | 80 | 60 | 160 | 80 |
| கத்தரி தம்புள்ள | 50 | - | 90 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 30 | 35 |
| தேசிக்காய் | 50 | 40 | 70 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 50 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 120 | 120 | 120 |

## இராசி பலன்

03.01.2014
(மார்கழி 19, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
துதியை பிற்பகல் 12.59 மணிவரை
உத்தராடம் முற்பகல் 8.30 மணிவரை
இராகுகாலம் 11.00-12.30 மணிவரை
சுபநேரம் 6.30-8.00 மணிவரை

**மேடம்** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், கனவு பலிதமுண்டு, வெளியூர் தொடர்புகள் அதிகரிக்கும்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுணங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும்.

**மிதுனம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், செய்தொழில் மேன்மையுண்டு, தெய்வீக சிந்தை மேலோங்கும், வருமானம் திருப்திதரும், போசன சுகமுண்டு.

**சிங்கம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், அரசியல் ஈடுபாடு கூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்.

**கன்னி** சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் பெருகும், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றிதரும், பிள்ளைகள் வழியில் பெருமையானசெய்திகள்வந்து சேரலாம்.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு கை கொடுத்து உதவுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

**விருச்சிகம்** உடன் பிறப்புகள் உதவி செய்ய முன்வரலாம், வருமானம் திருப்தி தரும், பாராட்டும் புகழும் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** நீண்டநாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், பூர்வீகச் சொத்துகளால் ஆதாயம் கிடைக்கும், தொலைபேசி மூலம் சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், வேலையில் கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை உருவாகும், சிந்தனை மிகுதியான நாள்.

**கும்பம்** தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும், சுப செலவுகள் கூடும்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும், தொலைபேசித்தகவல் மகிழ்ச்சி தரும், நட்பு வட்டம் விரிவடையும், ஊக்கத்தோடும் உற்சாகத் தோடும் பணிபுரிவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கில் சட்டவிரோத மதுப்பாவனை அதிகரித்துள்ளது

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கில் மதுவிற்பனை, உற்பத்தி என்பன கட்டுப்பாடின்றி அதிகரித்துள்ளதால் இளம் சமுதாயம் சீரழிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள புத்திஜீவிகள், இதற்கு உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இப் பிரதேசத்திலுள்ள பல கிராமங்களில் சட்டவிரோத மது விற்பனை கசிப்பு உற்பத்தி ஆகியவற்றில் ஈடுபடுபவர்களை அண்மைக் காலங்களில் பொலிஸார் கைது செய்து சட்ட நடவடிக்கையின் பின்னர் விடுவித்துள்ள நிலையிலும் அவர்கள் மீண்டும் அச் செயற்பாடுகளை முன்னெடுத்துவருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவற்றை விட வடமராட்சி கிழக்கிலுள்ள பதனீர் உற்பத்தி செய்பவர்கள் அதனை விற்பனை செய்வதற்கு நிலையமொன்றை அமைக்க வேண்டுமெனவும் இவ்வாறாக விற்பனை நிலையம் இன்மையால் தாம் பதனீரை எல்லா இடங்களிலும் வைத்து விற்பனை செய்வதால், வயது வெறுபாடின்றி அனைவரும் வாங்கி அருந்துவதாக தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான நடவடிக்கைகளினால் இளைஞர்கள் அதிகமாக மதுவுக்கு அடிமையாகி வருகின்றனர்.

அத்தோடு கிராம மட்ட அமைப்புக்களும் பொதுமக்களும் ஒன்றாக செயற்பட்டால் சட்டவிரோதமான மது விற்பனையையும் கசிப்பு உற்பத்தியையும் கட்டுப்படுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்டோர் இதற்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறு புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-64)



நன்றி:-ஐலண்ட்

# 150 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மல்லாகம் பகுதியில் அமைந்துள்ள கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் வசிக்கும் 75 குடும்பங்களைச் சேர்ந்த 150 கல்வி கற்கும் மாணவர்களுக்கு வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களின் நிதி பங்களிப்பில் கல்வி உபகரணங்கள் புதுவருடமான நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன.

வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தலைமையில் நடைபெற்ற மேற்படி கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வுக்கு வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினர்களான சி.ஹரிகரன், வ.முருகேசு ஆகியோருடன் சமூக சேவகர் இராஜதுரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற மக்கள் 24 வருட காலமாகத் தமது சொந்த ஊர்களான மயிலிட்டி, தையிட்டி, பலாலி போன்றவற்றிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது ஜீவனோபாயத் தொழிலைக் கூட மேற்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையில் வாழ்கின்றனர்.

வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர்களான லயன் சி.ஹரிகரன், வ.முருகேசு மற்றும் சமூக சேவகர் இராஜதுரை ஆகியோரே இந்தக் கல்வி உபகரணங்களுக்கான நிதிப் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

மேற்படி நிகழ்வில் தலைமையுரையாற்றிய வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் மாணவர்களுக்கு கல்வியின் முக்கியத்துவம் தொடர்பாக அறிவுரை கூறியதுடன், மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு தனது கல்வி நிலையமாகிய மல்லாகம் ஸ்ரேசன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரார் கல்வி நிலையத்தில் தந்தை, தாய் இருவரையும் இழந்த முகாம் பிள்ளைகளுக்கும் தந்தையை மட்டும் இழந்த பிள்ளைகளுக்கும் இலவசமாகக் கற்பித் தலை மேற்கொள்ளவுள்ளோம் என்றும் நலன்புரி நிலையத்தில் வசிக்கின்ற பிள்ளைகள் அனைவரும் அரைவாசிக் கட்டணம் அறிவிட இருப்பதாகவும் குறிப்பிட்டார்.



அத்தோடு சிறப்புரையாற்றிய வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் நாம் நாமாக வாழ்வதற்கு கல்வி அவசியம். எமது அறிவின்மையைக் கொண்டு பிறர் தங்களது அரசியல் சுயலாபத்துக்கு எம்மைப் பயன்படுத்துவதற்கு நாம் என்றைக்கும் இடமளிக்காமல் சுதாகரித்துக் கொள்வதற்குக் கல்வி அவசியம்.

இன்றைக்குத் தமிழ் மக்களாகிய எமது கலை, கலாசாரம், பண்பாடு அனைத்தும் திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நிலையில், எமது இருப்பை நிர்ணயிக்கின்ற பெரும் சொத்தாகக் கல்வி அமைந்துள்ளது. இன்றைய இந்தச் சிறார்கள் இந்த நாட்டின் நாளைய தலைவர்கள் நீங்கள் சிறப்பான கல்வி கற்று நல் ஒழுக்க சீலர்களாகத் திகழ வேண்டும் என்றார். (அ-9)

## ஓய்வு பெறுகிறார் பேராசிரியர் மா.சின்னத்தம்பி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கல்வியியல்துறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி தனது பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இவர் 1990 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத்தில் தனது பணியைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் 2006 ஆம் ஆண்டு பேராசிரியராகத் தெரிவானார்.புதிய விரிவுரையாளர்களைப் பயிற்றுவிக்கும் துறையின் பணிப்பாளராக விளங்கியதுடன் தற்போது தேசிய கல்வி ஆணைக் குழுவின் ஆய்வுக் குழுவில் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை தலைவர் இ.கு.சிவஞானம்(ஜே.பி) தலைமையில் நடைபெறவுள்ளது.

கணக்காய்வு அறிக்கையினைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நாட்களில் காலை 9மணி தொடக்கம்12 மணிவரையும் பிற்பகல் 2 மணி தொடக்கம் 5 மணிவரையும் சங்கத்தில் பார்வையிடலாம் என செயலாளர் வே.சிவலிங்கம் அறிவித்துள்ளார். (அ)




# ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் அடையாள அட்டைகள்,ஆவணங்கள் என்பன கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் S.Diluxini, 14 A, Ward Place Colombo-07, Certis Home Nursing & Swiftcare (Pvt)Ltd, திருமதி க. சகுந்தலாதேவி, ஏழாலை மத்தி, ஏழாலை என்பவரது 557234870 V எனும் இலக்கமுடைய அடையாள அட்டை, மற்றும் மக்கள் வங்கிப் புத்தகம், கு. கிருபாகரன், பாடசாலை வீதி, கோண்டாவில் என்பவரது சாரதி அனுமதி பத்திரம் ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ், சம்பத் வங்கியின் காசோலை கைப்பை, 720803887 V எனும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை ஆகியவை கண்டெடுக்கப்பட்டு போதனா வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே உரியவர்கள் ஆவணங்களை தகுந்த ஆதாரம்காட்டி மேற்குறித்த காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாமென அவர் குறிப்பிட்டார். (அ-2)

# இழுவைப் படகுகளை பயன்படுத்திய ஆறு மீனவர்கள் கைதாகினர்

(கரவெட்டி)

வடமராட்சி தொண்டைமானாறு கடற்பரப்பில் தடைசெய்யப்பட்ட இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்ட 6 மீனவர்களை அப் பகுதி மீனவர்கள் பிடித்து யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் தொண்டைமானாறு பெரிய கடற்பரப்பில் 6 ஆம் பாகப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்களத்தினால் தடை செய்யப்பட்ட இழுவைப் படகுகளைப் பயன்படுத்தி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஆறு மீனவர்கள் தொண்டைமானாறு பெரிய கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வேளை அப் பகுதி மீனவர்கள் இந் நடவடிக்கையை தடுக்க முற்பட்டவேளை வல்வெட்டித்துறை மீனவர்கள் கற்கள், பொல்லுகள் என்பனவற்றால் தாக்கியுள்ளனர்.

ஆயினும் அப் பகுதி மீனவர்கள் அவர்களை விடாது சுற்றிவளைத்து ஆறு பேரையும் பிடித்து யாழ்.மாவட்ட நீரியல்வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இழுவைப் படகினால் அப் பகுதி மீனவர்களின் ஒரு லட்சம் பெறுமதியான வலைகள் சேதமடைந்துள்ளதாகவும் இவ்வாறான நடவடிக்கைகளால் மீனினத்தின் பெருக்கம் அழிவடைந்து வருவதாகவும் அப் பகுதி மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பிடிக்கப்பட்ட மீனவர்களை நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் யாழ். மாவட்ட நீரியல் வளத்துறை திணைக்களத்தினரால் ஆஜர்ப்படுத்தினர். (அ-9-24)

# கௌரவிப்பு விழா

யாழ்.மாவட்ட பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தினரால் **சிரேஷ்ட ஓய்வூதியக் குடிமகன்** எனும் விருது பெற்ற வி.ஸ்ரீசக்தி வேலை கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் சங்கத்தின் உபதலைவர் வி.எஸ்.வீரசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத் தலைவர் ஆறு திருமுருகன், யாழ்.மத்தியஸ்தர் சபை உபதவிசாளர் வே.ஞானகாந்தன், சைவபரிபாலன சபைத் தலைவர் எஸ்.பத்மநாதன், அறவழி போராட்டக்குழு செயலாளர் வி.ஜி.தங்கவேல், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிய செயலாளர் து.ரமணதாஸ், யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் எம்.மகேந்திரன், பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் ஆர்.எம்.வி. ஜே.ரணதுங்க, இந்து அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளர் எஸ்.பரமநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-9)

# மத்திய கல்லூரியாக பெயர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத் தின் பெயரினை அதன் தமிழ்ப் பிரயோகத்தில் திருத்தம் செய்து யா/ நெல்லியடி மத்திய கல்லூரி என மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கான கோரிக்கையினை கல்லூரிச் சமூகம் முறைப்படி சமர்ப்பித்ததின்பேரில் கல்வியமைச்சின் 2013.11.06 ஆம் திகதிய கட்டமைப்புக் குழுவின் தீர்மானத்திற்கமைய இவ்வாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக கல்வியமைச்சினால் 2014.01.01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் கல்லூரி அதிபருக்கும் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அதிபர் சேதுராஜா அறிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானம் திடீர் தரையிறக்கம்; பயணிகள் மயிரிழையில் தப்பினர்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து லண்டன் நோக்கிப் புறப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்'க்குச் சொந்தமான விமானத்தின் முன் கண்ணாடியில் ஏற்பட்ட வெடிப்பு காரணமாக அந்த விமானம் மீண்டும் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது. இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதன் மூலம் விமானத்தில் இருந்த நூற்றுக்கணக்கான பயணிகள் மயிரிழையில் உயிர் தப்பினர். இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்'க்கு சொந்தமான யூ.எல்.503 என்ற விமானம் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் லண்டன் நோக்கி பயணிப்பதாக இருநதது.

எனினும் ஒரு மணி நேர தாமதத்தின் பின்னர் குறித்த விமானம் 3 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்தது.

பயணத்தை ஆரம்பித்து அரை மணி நேரத்துக்குள் அந்த விமானம் கட்டுப்பாட்டறையுடன் தொடர்பு கொண்டு மீண்டும் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலேயே தரையிறக்கப்பட்டது.

விமானத்தின் முன் கண்ணாடியில் ஏற்பட்ட வெடிப்பே இதற்கு காரணமாகும். இந்தவெடிப்பையடுத்து விமானத்திற்குள் அமுக்கம் அதிகரித்துள்ளது.

இதனையடுத்து அனைத்து பயணிகளுக்கும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதனையடுத்து பயணிகளை ஒக்ஸிசன் வாயுக் கருவிகளை பொருத்திக் கொள்ளுமாறு விமானக் கப்டன் அறிவித்துள்ளார்.

இதனால் அதில் பணித்த 250 பயணிகள் பெரும் அச்சத்திற்குள்ளாகினர். விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டமையினால், பாரிய விமான விபத்து தவிர்க்கப்பட்டுள்ளதுடன் விமானத்திலிருந்த நூற்றுக்கணககான பயணிகள் மயிரிழையில் உயிர்தப்பினர். (அ-2)

# சீனிப்பாவனையை குறைக்க வேண்டும்

## உலக சுகாதார ஸ்தாபனம் கோரிக்கை

புது வருடப் பிறப்புடன் சீனிப் பாவனையை அரைவாசியாகக் குறைத்து தொடர்ந்தும் அதனைப் பேணி வரவேண்டும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

ஆகக்குறைந்தது ஒரு நாளைக்கு ஐந்து தேக்கரண்டிளவு சீனிப் பாவனையை மட்டுப்படுத்த முடியுமாயின் அது உடல் நலத்திற்கு மிக்க் பயனுடையதாக இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

பொதுவாக 10 தேக்கரண்டிய ளவு பாவனையில இருப்பதாகவும் அதுவும் அதிகமெனத் தெரிவித்துள்ளது. ஏனெனில் அதிகரித்த சீனிப் பாவனை காரணமாக நீரிழிவு நோய், இருதயக் கோளாறுகள், அதிக உடற் பருமன், பற்கள் சிதைவடைதல் முதலான பல நோயகள் ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கல்விப் பிரிவொன்றின் தலைவர் பிலிப் ஜேம்ஸ் வெளியிட்ட தகவல் ஒன்றின் படி ஒருநாளைக்கு சராசரியாக ஒருவர் 46 கரண்டிகளுக்கு மேல் சீனிப்பாவனையுடன் வாழ்வதாக ஒரு இணையச் செய்தி தெரிவிக்கின்றது. இது கைத் தொழில் நாடுகளில பரவலாகக் காணப்படும் ஒரு பிரச்சினையாகும். (அ-2)

## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து (PA)
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 17 செவ் 12 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்: O/L / Cable TV
தொ.இ: B/806

பிறப்பு: 1975 இந்து (V)
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 16 செவ் 8 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: CCNAIT Suport / Computerised Security System (UK Citizen)
தொ.இ: B/887

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை 1
கி.பா: 47 ¼ செவ் 7 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L / மேற்பார்வையாளர் (அரசு)
தொ.இ: B/889

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 12 ½ உயரம்: 5'9"
தகைமை/தொழில்: O/L / சாரதி (சொந்தம்)
தொ.இ: B/891

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1978 இந்து (V)
நட்சத்திரம்: கேட்டை 1
கி.பா: 2 ½ உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L, Dip. in Library Science / நூலகர் (அரச)
தொ.இ: G/1274

பிறப்பு: 1983 றோ.க. (NA)
நட்சத்திரம்: கேட்டை
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1277

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: மகம் 2
கி.பா: 108 சூரி செவ் 2 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: வகுப்பு 8
தொ.இ: G/1279

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: அனுஷம் 2
கி.பா: 47 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1282

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

உதயமாகும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி(திவிநெகும) திணைக்களத்தை மகிழ்வுடன் வரவேற்கின்றோம்.-03.01.2014







மஹிந்த சிந்தனை மூலம் நிலையான அபிவிருத்தி நோக்கிப் பயணிக்கப் பாதை காட்டிய அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நன்றி கலந்த வாழ்த்துக்களை உரித்தாக்கி உவகையடைகின்றோம்.
பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில்ராஜபக்ஷ அவர்களின் அர்ப்பணிப்பினை அகமகிழ்ந்து போற்றுகின்றோம்.
பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஓயாத பங்களிப்பினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம் வாழ்வின் எழுச்சித் திட்டமாக மாற்றமடையும் இத்தருணத்தில் வேளாண்மை சிறந்திடவும் கைத்தொழில்கள் உயர்ந்திடவும் கடற்றொழில் மிளிர்ந்திடவும் கைகொடுத்திடுவோம்.
வாழ்வின் எழுச்சி சமுதாய மட்ட வங்கிகள் மூலம் அனைத்துத் துறைசார் தொழில் முயற்சி விருத்திக்கும் உறுதுணை நின்றிடுவோம்.
சமுதாய மட்ட அமைப்புக்கள் சக்தி கொண்டு எழுந்திட உழைத்திடுவோம்.
வாழ்வாதார அபிவிருத்தி பெருகிட சேவை நல்கிடுவோம்.
வளமான வீடும் வியத்தகு நாடும் ஏற்றிடுவோம்.
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் (திவிநெகும) திணைக்களத்தை மக்கள் பணியில் இணைத்திடுவோம்.

முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்,
சமுர்த்தி வங்கிச் சங்கங்கள் (33) யாழ். மாவட்டம்
முகாமைத்துவப் பணிப்பாளர்கள்,
உத்தியோகத்தர்கள்
சமுர்த்தி மகாசங்கங்கள் (15) யாழ். மாவட்டம்.

முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகங்கள், யாழ்.மாவட்டம்
மாவட்ட பணிப்பாளர், உதவி ஆணையாளர்,
இணைப்பாளர், முகாமையாளர்கள்,
உத்தியோகத்தர்கள்.
மாவட்ட சமுர்த்தி அலுவலகம், யாழ்ப்பாணம்.

(5207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கைப் தொழில் நுட்பத்தினூடாக பயணிகள் முறையிடலாம்

**பயணிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்து சேவையை வழங்கும் நோக்குடன் பயணிகள் முகங்கெடுக்கும் பிரச்சினைகள் "ஸ்கைப்" தொழில்நுட்பத்தினூடாக முறையீடு செய்வதற்கான வலைத்தளத்தை தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி.பி.ரட்நாயக்க ஆரம்பித்து வைத்தார்.**

குறித்த சேவையானது நாவலயில் அமைந்துள்ள தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இச்சேவையினூடாக பயணிகள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வு பெற்றுக் கொடுக்கப்படும். குறித்த சேவையினூடாக வார நாட்களில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை பயணிகள் தனது பிரச்சினைகளை "Private transport services" என்ற ஸ்கைப் வலைத்தளத்தினூடாக முறையீடு செய்ய முடியும். அத்தோடு குறித்த சேவையை 24 மணித்தியா லங்கள் வரை நீடிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் தெரிவித்தார். இதன்போது தனியார் போக்குவரத்து சேவைகள் அமைச்சர் சி. பீ. ரத்நாயக்க ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்,

2014 ஆம் ஆண்டு புதுவருடப் பிறப்பின் போது "ஸ்கைப்" தொழில் நுட்பத்தினூடாக பயணிகள் தமது பிரச்சினைகளை முறையீடு செய்ய முடியும். வரலாற்றில் முதற்தடவையாக இவ்வாறான செயற்திட்டத்தை இவ் அரசாங்கமே மேற்கொண்டுள்ளது. இவ்வாறான செயற்றிட்டத்தினூடாக பயணிகள் அன்றாடம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளை இலகுவாக தீர்க்க முடியும். இதன் மூலம் பயணிகளுக்கு பாதுகாப்பான போக்குவரத்துச் சேவையினை வழங்க முடியும்.

தற்போது பொது மக்கள் தனியார் போக்குவரத்து துறையின் மீது வெறுப்படைந்துள்ளனர். ஆகையால் தரமிக்க போக்குவரத்து சேவையை பொது மக்களுக்கு வழங்க வேண்டிய தேவை அரசிற்கு உள்ளது. இதேவேளை, எதிர்வரும் 16 ஆம் திகதியிலிருந்து தனியார் மற்றும் அரச பேருந்து போக்குவரத்து சேவைகளுக்கு ஒன்றிணைந்த கால அட்டவணை தயாரிக்கப்படவுள்ளது. இதனூடாக போட்டிகளற்ற போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி திட்டங்களுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அனுமதியளித்திருப்பதுடன், அமைச்சரவையிலும் பூரண ஆதரவு கிடைக்கப் பெற்றுள்ளது. அதன் பிரகாரமே ஸ்கைப் தொழில்நுட்பத்தினூடாக முறையீடு செய்யும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது போன்றே எதிர்வரும் 15 ஆம் திகதியிலிருந்து ஒன்றிணைந்த கால அட்டவணை என்ற திட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கு போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம பூரண ஆதரவளித்து வருகின்றார். தற்போது நடைமுறையிலுள்ள சாதாரண பஸ் வண்டி, அதிசொகுசு வண்டி என்ற வேறுபாட்டிலும் மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

இதன் பிரகாரம் லக்ஸ்றி என்ற சொகுசு பேருந்து சேவையால் எவ்வித பயனுமில்லை என பல்வேறு இடங்களிலிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தற்போது நாடளாவிய ரீதியில் 3ஆயிரத்து 100 இற்கும் மேற்பட்ட பேருந்து சேவையில் ஈடு படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் அதிசொகுசு பேருந்து சேவைகள் தொடர்பில் மாற்றமொன்றை அரசு ஏற்படுத்தவுள்ளது. இந்நிலையில் இவ்வருடத்தி லிருந்து சிறப்பான போக்குவரத்துச்சேவைகளை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது என்றார். (அ-2)



நாடளாவிய ரீதியில் கொமர்ஷல் வங்கியில் வெளிநாட்டு பண பரிமாற்றல் ஊடாக பணத்தை பெற்றுக் கொண்ட வாடிக்கையாளர்களில் ஆயிரம் அதிர்ஷ்ட சாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதில் மானிப்பாய் கிளையின் அதிர்ஷ்டசாலியின் பிள்ளைக்கான பாடசாலை புத்தகத்தை வங்கி முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் வழங்குவதையும் அருகில் ஏனைய வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.

## ஹெரோயின் கடத்தல் விவ்காரம்; இன்டர்போலை நாடுகிறது இலங்கை

(கொழும்பு)

ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியான பாகிஸ்தான் பிரஜையை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு பொலிஸ் திணைக்களம் இன்டர்போலின் உதவியை நாடியிருப்பதாக பொலிஸ் பேச்சாளர், அத்தியட்சகர் அஜித் ரோஹன கூறியுள்ளார்.

இலங்கைக்குள் அண்மையில் கடத்தப்பட்ட 150 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்ட பல கடத்தல் சம்பவங்களை குறித்த பாகிஸ்தான் பிரஜையே அவரது தாய்நாட்டிலிருந்து இயக்கி வருவது சாட்சியங்களுடன் உறுதியாகியிருப்பதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஹெரோயின் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரியை மேலதிக விசாரணைகளுக்காக இலங்கைக்குள் கொண்டு வருவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளையும் பொலிஸ் திணைக்களம் முன்னெடுத்து வருகிறதெனவும் அவர் கூறியுள்ளார்.

இவ்விடயத்தினை பாகிஸ்தான் அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் வகையில் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கூடாக சந்தேக நபரை நாடு கடத்துமாறு கோரிக்கை விடுப்பது தொடர்பில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இவரை இலங்கைக்குப் பெற்றுத்தர வேண்டுமென ஏற்கனவே இன்டர்போலிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைய பாகிஸ்தான், பிரதான சூத்திரதாரி குறித்து விரிவான விசாரணைகளை முன்னெடுத்து வரும்அதேநேரம்இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் பேச்சு நடத்தும் முகமாக இரு பாகிஸ்தான் அதிகாரிகள் கொழும்பு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அனைத்து இராணுவ தரப்பும் ஒழுக்கத்தை பின்பற்ற வேண்டும் இராணுவ தளபதி தெரிவிப்பு

இலங்கை இராணுவத்தின் அனைதது தரப்பினரும் உயரிய ஒழுக்கத்தை பின்பற்றவேண்டும் என்று இராணுவ தளபதி லெப்டினனட் ஜெனரல் தயா ரட்நாயக்க கோரியுள்ளார்.

இராணுவத்தலைமையக புதுவருட நிகழ்வில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், இராணுவத்தினரின் அர்ப்பணிப்புக்கும் சீரான கடமைகளுக்கும் ஏற்கனவே ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளரிடம் இருந்து உரிய மரியாதை வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில் தற்போது இராணுவத்துக்குள் புதிதான நிர்வாக அமைப்புக்கள் கொண்டு வரப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார.

இதேவேளை நேற்று முன்தினம் நடைபெற்ற மற்றுமொரு ஒரு நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, படையினர் சமூக பொருளாதார அபிவி ருத்திக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். (அ-2)

## 50 ஆயிரம் யாழ்.மீனவர்கள் இந்திய மீனவர்களால் பாதிப்பு

இந்தியமீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறிய தொழில் நடவடிக்கையினால் யாழ்.மாவட்டத்தில் மட்டும் சுமார் 50 ஆயிரம் மீனவர்கள் பாதிக்கப்படுவதோடு அந்தக் குடும்பங்களின் நிலைமை மிக மோசமாக இருப்பதுடன் பரிதாபமாக இருப்பதாகவும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை- இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து இரு தரப்பினர்களிடமும் பல தடவைகள் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. ஆனால் அந்த கலந்துரையாடல்களின் மூலம் எந்தவிதமான முடிவுகளும் எட்டப்படவில்லை.

மேலும் இந்திய- இலங்கை மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டும் போது கைது செய்யப்படுகின்றார்கள். அவ்வாறான நிலையில் கூட அங்கத்துவ சமாசங்களிடம் இந்த விடயம் தொடர்பில் அதிகாரிகள் கலந்துரையாடுவதில்லை. இது பெரும் ஆச்சரியமான விடயம்.

இதேவேளை எதிர்வரும் 20 ஆம் திகதி சென்னையில் நடைபெறவுள்ள பேச்சு வார்த்தைக்கு வடபகுதி மீனவச் சங்கங்களுக்குத் தகவல்கள் தெரிவிக்கப்படவில்லை. இவ்வாறான நிலைமைகள் வேதனை தருகின்றதாகவுள்ளது எனத் தெரிவித்த அவர் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின்அத்துமீறியதொழில் நடவடிக்கையினால் யாழ்.மாவட்டத்தில் மட்டும் சுமார் 50 ஆயிரம் மீனவர்கள் பாதிக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். [illegible]

## மின்னஞ்சல் மூலம் வழக்குத் தொடரலாம்

(கொழும்பு)

இலங்கையில் மின்னஞ்சல் மூலம் வழக்குத் தொடர சந்தர்ப்பம் ஏற்படுத்திகொடுக்கப்பட உள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக உச்ச நீதிமன்றின் பதிவாளர் நாயகம் மஹேசி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஏதிர்வரும் மார்ச் மாதமளவில் மின்னஞ்சல் மூலம் உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர மக்களுக்கு சந்தர்ப்பம் கிட்டும் என குறிப்பிடப்படுகிறது.

தூரப் பிரதேசங்களில் இருப்பவர்கள் உரிய நேரத்தில் நலன்களைப் பெற்றுக்கொ ள்ள இந்த வழி உதவும்.

முதல் கட்டமாக அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்பில் மின்னஞ்சல் ஊடாக முறைப்பாடு செய்து வழக்குத் தொடர முடி யும்.

நாளின் எந்த நேரத்திலும் அதாவது நள்ளிரவு கூட மின்னஞ்சல் மூலம் வழக்குத் தொடரலாம்.

பயண செலவுகள் கிடையாது. வழக்கு தொடர்பான மூல ஆவணங்களை பின்னர் நீதிமன்றிடம் ஒப்படைக்க முடியும்.

நிலுவையில் உள்ள வழக்குகளை விசாரணை செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூர்த்தி வாழ்வின் எழுச்சியாக மலர்கிறது...

இலங்கையின் அபிவிருத்திப் பாதை ஆசிய ஆபிரிக்க நாடுகளுக்கு முன்னுதாரணமாகக் கூடியது. வறுமைத் தணிப்பிலும் மேம்பட்ட அபிவிருத்திச் சுட்டிகளிலும் காணப்படும் சாதகமான வளர்போக்கு பொருளாதார ஆய்வாளர்களால் மெச்சப்படுகிறது.

1995 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சமூர்த்தி நிகழ்ச்சித் திட்டம் முன்சொன்ன மேம்பாடுகளுக்கு வித்திட்டது என்று சொல்லப்படுகிறது. சில பத்துகளுடன் தென்பட்ட வறுமைவீதம் இன்று 6.5 என்ற வீத நிலைக்குக் கீழ் செல்வதன் உட்பரிமாணம் புழுகுமொழியல்ல இவ்வழி வளம் மிகு மனை அலகுகளை விருத்தி செய்து வியத்தகு தேசத்தினை கட்டியெழுப்ப பொருளாதார வல்லுநர்களால் முன்மொழியப்பட்ட மாற்றீட்டுத் திட்டமே "திவிநெகும" என்ற வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திட்டமாகும்.

"திவிநெகும" ஒரு நிகழ்ச்சித்திட்டமாக விவசாயத் திணைக்களம், கால்நடை உற்பத்தித் திணைக்களம், கடற்றொழில் திணைக்களம், கைத்தொழில் திணைக்களம் போன்ற தொடர்புடைய திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இணைவுடன் பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சு, பொருளாதார அபிவிருத்தி அமைச்சு போன்ற அமைச்சுகளின் வழிகாட்டுதலுடன் மாவட்ட செயலகம் தோறும் உள்ள திட்டமிடல் செயலகத்தின் இணைப்பு மற்றும் ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களால் கிராமங்கள் தோறும், நகரங்கள் தோறும், முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதிமேதகு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மஹிந்த சிந்தனை வழி இன்று இத்திட்டம் சக்தி மிக்க திணைக்களமாக மாற்றமுறுகின்றது. சாதாரண மக்களின் அறிவுக்கு பழமரங்கள் நாட்டுதல், மரக்கறி விதைகள் விதைத்தல், வாழ்வாதார உபகரணங்கள் பெற்றுக்கொள்ளல், எனபதே "திவிநெகும" (வாழ்வின் எழுச்சித் திட்டம) என நம்பப்படுகின்றது. ஆனால் உண்மை விசாலமானது: ஆழமானது: அற்புதமானது.

வறுமையை ஒழித்தலும், சமூக ஒப்புரவை உத்தரவாதப்படுத்தலும், வாழ்வாதார அபிவிருத்தியை மேம்படுத்தல்,தனியாள் மற்றும் குடும்பத்திற்கு உணவுப்பாதுகாப்புவழங்கல்,மக்களின் தொழில் விருத்திக்கு சிற்றளவு நிதி வசதி வழங்குதல், பௌதீக சமூக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தல், தேசிய அபிவிருத்தியை துரிதப்படுத்தும் நோக்கில் மக்களைத் திரட்டுதலும் வலுவூட்டுதலும் உற்பத்திகளுக்குத் தேவைப்படும் களஞ்சிய மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை ஏற்படுத்தல் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் உற்பத்தியாளர்களின் வாண்மை விருத்திக்கு வேண்டிய பயிற்சிகள் பட்டறைகள், என்பனவற்றை நடாத்தல் ,மேற்சொன்ன முறைமைகளின் கீழ் நாட்டிற்கு நிலையான அபிருத்தியினை (Sustianable development) உருவாக்குவதே மஹிந்த சிந்தனையின் வழி " திவிநெகும". ( வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி) திணைக்கள உருவாக்கமாகும்.

**வாழ்வெழுச்சியின் கீழ்வரும் நிறுவனங் கள்/ திணைக்களங்கள் வருமாறு,**

இலங்கை சமுர்த்தி அதிகாரசபை, இலங்கை தெற்கு அதிகாரசபை, இலங்கை உடறட்ட (மலைநாட்டு) அபிவிருத்தி அதிகாரசபை, சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,மலைநாட்டு கமத்தொழில் மறுசீரமைப்புத் திணைக்களம்,

இந்த நிறுவன இணைப்புகளின் ஊடாக 25ஆயிரத்திற்கும் மேற் பட்ட உத்தியோகத்தர்கள் திவிநெகும திணைக்களத்தின் கீழ் உள்வாங்கப்படுகின்றனர். இதன் போது உத்தியோகத்தர் களின் விருப்புக்கும் தெரிவுகளுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுளளது. அதாவது சேவை யில் இருந்து நட்ட ஈடு பெற்று விருப்புடன் விலகிச் செல்லல், திணைக்களமாகும் திகதியில் இருந்து புதிய நியமனமாக இணைந்து கொள்ளல், முன்னைய சேவையோடு தொடர்ந்தும் திணைக்களத்தில் இருத்தல் போன்றவையே அவையாகும்.

**வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்கள அமுலாக்கம்**

03.01. 2014ஆம் திகதி வெளிவருகின்ற வர்த்தகமானிப் பத்திரிகை அறிவித்தலின் ஊடாக இத்திணைக்களத்தின் அமுலாக்கம் தொடங்க இருக்கின்றது.

ஒவ்வொரு மாவட்டத்தினதும் அரசாங்க அதிபர்கள் மேலதிக பணிப்பாளர் நாயகமாக செயற்படவுள்ளனர். மேலும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தொடர்புடைய அமைச்சின் செயலாளர் திணைக்களத்திற்கு வேண்டிய தலைமை, வலய, மாவட்ட பிராந்திய, அலுவலகங்களுக்கு வேண்டிய அதிகாரிகளையும், அலுவலர்களையும் நியமிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் பணியில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தித் திணைக்களம் . இணைகின்ற பொன்னான தருணம் கை கூடியுள்ளது.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கும் கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அவர்களுக்கும், சமுர்த்தி தொழிற்படை நன்றி கூறி நிற்கின்றது.

நாடு பூராவும் 10 இலட்சம் குடும்பங்களை விசேட மேம்படுத்தலுக்கு உட்படுத்த அர்ப்பணிப்பான சேவையினை வழங்குதற்கு உத்தியோகத்தர்கள் வழிமேல் விழிவைத்துக் காத்திருக்கிறார்கள்.

ஆ. ரகுநாதன்
மாவட்ட சமுர்த்தி
இணைப்பாளர்,
யாழ்ப்பாணம்.

### சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டமும் திவிநெகும கட்டமைப்பும்

| சமுர்த்தி | | திவிநெகும | |
|---|---|---|---|
| அலுவலகம்/ அமைப்பு<br>கிராம சமுர். அலுவலகம் | மக்கள் கட்டமைப்பு<br>சமுர். சிறுகுழு- 5பேர் | அலுவலகம்/ ஒழுங்கமைப்பு<br>கிராமம், கிராமியம் கி.அ.பி ஒன்று அல்லது பல | சமுதாய மட்ட ஒழுங்கமைப்பு<br>சமுதாய மட்ட ஒழுங்கமைப்பு |
| நிர்வாக சபை | சமுர். சங்கம்- 7-10 குழு( 50 பேர்) | .......... | சமுதாய மட்ட ஒழுங்கமைப்பு |
| கட்டுப்பாட்டுச் சபை வங்கி அலுவலகம் | சமுர் வங்கி சங் (50-75) – 2000-3000) பேர்உத்தேச நிலை | சமுதாய மட்ட ஒழுங்கமைப்பு | திவிநெகும சமுதாய மட்ட வங்கி |
| நிறைவேற்றுக் குழுமகாசங்க அலுவலகம் | சமுர்த்தி மகாசங்கம் ( 200-300) சமுர்.சங் ( 10000 பேர்) உத்தேசம் | சமுதாய மட்ட ஒழுங்கமைப்பு | திவிநெகும சமுதாய மட்ட வங்கித் தொழிற்சங்கம் |
| பிரதேச செயலக சமுர். கிளை (HQ) | இல்லை | திவிநெகும பிராந்திய அலுவலகம் பி.செ ஒன்று அல்லது பல | பிராந்திய ஒழுங்கமைப்பு |
| மாவட்ட சமுர்த்தி அலுவலகம் | இல்லை | திவிநெகும மாவட்ட மட்ட அலுவலகம் | திவிநெகும மாவட்ட மட்டக்குழு |
| ............... | ..................... | திவிநெகும வலய அலுவலகம் - பெரியது பல மாவட்டங்கள் அடங்கியது | ..................... |
| இலங்கை சமுர்த்தி அதிகாரசபை | ..................... | 1.திவிநெகும தேசியப் பேரவை<br>2. திவிநெகும தேசிய சம்மேளனம்<br>3. முகாமைச் சபை | அதிகாரிகள் நிலை, அமைச்சின் செயலர்<br>அனைத்து சமுதாய மட்ட ஒழுங்கமைப்புகளின் பிரதிநிதிகள்<br>வங்கி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் உயர்பீடம் அதிகாரிகள் நிலை, அமைச்சுச் செயலர் |

# அரசின் வேலைத் திட்டங்கள் வடக்கு மக்களை பாதிக்குமாயின் நிச்சயம் அதனை தடுப்பேன்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

வடக்கில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன். அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள் வடக்கிற்கு சாதகமாக அமைந்தால் மட்டுமே அமைச்சரவையில் ஆதரிப்பேன் என்று பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மக்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்கள் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கவேண்டுமே தவிர பிரச்சினைகளை உருவாக்கிவிடக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார். வடக்கில் கரும்புச் செய்கைக்கென பெருமளவு காணிகளை சுவீகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்க ஏற்பாடாகியுள்ளது. இது குறித்து கருத்துக் கேட்டபோதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் உற்பத்தி திட்டங்களும் வடக்கு மக்களின் நன்மைக்காக மட்டுமேயாகும். இதில் எந்தவொரு உள் நோக்கமோ அல்லது அடக்கு முறைகளோ இல்லை.

வடக்கில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி வடக்குத் தமிழர்களை கட்டுப்படுத்துவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். விடுதலைப் புலிகளிடம் அடிமைப்பட்டிருந்த தமிழர்கள் இனிமேலும் சுதந்திரமாக வாழ வேண்டும். அடிமைத் தனத்தால் இருந்து விடுபட வேண்டும் என்பதற்காகவே நாம் போராடுகின்றோம். அரசாங்கம் அவ்வாறான தொரு செயலை செய்யமாட்டாது என்பதில் எமக்கு நம்பிக்கை இருக்கின்றது.

அரசாங்கத்தின் வேலைத் திட்டங்கள் வடக்கு மக்களை பாதிக்கும் வகையில் அமைநதால் நிச்சயம் அவற்றை தடுத்து நிறுத்துவேன். அது மட்டுமன்றி இவ் விடயம் தொடர்பில் அரசாங்கத்திடம் பேசி உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுப்பேன்.

இவ் விடயத்தில் வடக்கு மக்கள் அச்சமடைய வேண்டிய அவசியமில்லை. மக்களை மீறி எவற்றையும் யாரும் செய்ய முடியாது.

மக்களின் உரிமைகள், சுதந்திரம் பற்றி பேசுபவர்கள் மக்களின் பிரச்சினைகளை தீர்க்க வேண்டுமே தவிர இனப்பிரச்சினைகளை தூண்டி நாட்டில் பிரச்சினை களை ஏற்படுத்தி விடக் கூடாது. வட மாகாண மக்களுக்காக குரல் கொடுப்போர் மக்களின் உரிமைகளை பெற வேண்டுமாயின அரசாங்கத்துடன் இணங்கியே பெற முடியும்.

சர்வதேச ரீதியில் சென்று உரிமைகளை பெற்றுக்கொள்ள முயல்வது முட்டாள் தனமாகும்.

சர்வதேச நாடுகளினால் இலங்கையில் சமாதானத்தினை பெற்றுத்தர முடியாது. அவ்வாறு நடப்பதாகக் கூறி உள்நாட்டுப் பிரச்சினைகளை அதிகரித்துக் கொண்டே செல்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

# புலமைப்பரிசில் பரீட்சையை நடத்த மாற்றுவழியை சிந்தியுங்கள்

## மேல்மாகான அமைச்சர் உதயகம்மன்பில

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையினை தடை செய்வது இலங்கையின் எதிர்காலத்தினை அழிப்பதற்கு சமமாகும். மாணவர்களின் அறிவினை பரிசீலனை செய்யும் பரீட்சையினை தடைசெய்யவிட மாட்டோம் என ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

ஹெல உறுமய கட்சியினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையை தடைசெய்வதானது மாணவர்களின் எதிர்காலத்தினை பறிப்பதுடன் இலங்கையின் எதிர்காலத்தை யும் அபிவிருத்தியினையும் முற்றாக அழிக்கும் செயற்பாடாகும். கல்வி அமைச்சரின் எண்ணமும் சிந்தனைகளும் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டவையாகவேயுள்ளன.

மாணவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தினையும் முன்னேற்றத்தினையும் ஏற்படுத்தும் முதற்கட்டம் தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் பரீட்சையே. அதனை தடை செய்தால் சிறந்த மாணவர்களின் தகுதியும் அறிவு மட்டமும் தெரியாமல் போய்விடும்.

கல்வி மட்டத்திலும் பரீட்சையிலும் உள்ள சிக்கல்களை நீக்குவதற்கு புலமைப் பரிசில் பரீட்சையினை இல்லாது செய்வது தீர்வாகாது. அரசாங்கம் இவ் விடயத்தில் கூடுதல் கவனமெடுத்து மாணவர்களின் எதிர்காலத்தினை பாதுகாக்க வேண்டும். (அ-2)

# மேல் மாகாண தேர்தலில் கூட்டமைப்பு போட்டியிடும்

## தே.சு.முன்னணி தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது மேல்மாகாணசபைத் தேர்தலில் போட்டி யிடும் என தேசிய சுதந்திர முன்னணியின ஊடகப்பேச்சாளர் மொஹமட் முஸ்ஸாமில் தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனோ கணேசனுடன் இணைந்து கொழும்பில் போட்டியிடவுள்ளதாக செய்திகள்வெளியாகியுள்ளன. மனோ கணேசனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.

கொள்கை அடிப்படையிலும இந்த கட்சிகளுக்கு இடையில் எந்த வேறுபாடுகளும் கிடையாது. இந்த கட்சிகள் பிரிவினைவாதத்திற்கு உதவி செய்யும் விடுதலைப் புலிகளுக்கு சார்பான கட்சிகள்.

மேல் மாகாணத்திலும் பிரிவினைவாதத்தை போஷிப்பதற்காக புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுடன் மனோ கணேசனும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் இணைநதுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

678

# மூன்று மீன்கள்


ஒரு பெரிய ஏரியில் அனாகதவிதாதா (வருமுன் காப்போன்) பிரத்யுத்பன்னமதி (சமயோசிதபுத்தியுடைவன்) யத்பவிஷ்யன் (வருவது வந்தே தீரும் என்று நினைக்கிறவன் என்று மூன்று மீன்கள் இருந்துவந்தன. அவை மிகவும் பெரிய மீன்கள்.

ஒருநாள் சில செம்படவர்கள் கரையோரத்தில் நடந்தபடியே, இந்த ஏரியில் மீன்கள் நிறைய இருக்கின்றன. நாளைய தினம் இங்கு வந்து மீன்பிடிக்கலாம் என்று பேசிக்கொண்டு போனார்கள். இந்தப் பேச்சு அனாகதவிதாதா காதில் விழுந்தது.

அதைக்கேட்டதும் இது நமது நன்மைக்கு இல்லை. கட்டாயம் அவர்கள் நாளைக்கோ மறுநாளோ இங்கு வருவார்கள். அதற்குள் மற்ற இரண்டு மீன்களையும் அழைத்துக்கொண்டு தொந்தரவுகள் எதுவுமில்லாத வேறு ஏரிக்குப் போய்விடவேண்டியதுதான் என்று அது யோசித்து முடிவு செய்தது. இரு மீன்களிடமும் சென்று விடயத்தைச் சொல்லிற்று.

அதற்குப் பிரத்யுத்பன்னமதி இந்த ஏரியில் ரொம்ப நாளாக நான் இருந்து வருகிறேன். திடீரென்று இதை விட்டுச் செல்ல என்னால் முடியாது. செம்படவர்கள் வரும்போது பார்த்துக் கொள்ளலாம். அந்தநேரத்தில் ஏதாவது உபாயம் செய்து எப்படியாவது தப்பித்துக் கொள்வேன் என்று சொல்லிற்று.

சாவு நெருங்கிவிட்ட யத்பவிஷ்யன் இதைப்போல எத்தனையோ ஏரிகள் மற்ற இடங்களிலும் இருக்கின்ற



போது இங்கேதான் வருவார்கள் என்று யார் நிச்சயமாகச் சொல்ல முடியும்? வம்பு வதந்திகளைக் கேட்டுவிட்டு தான் பிறந்த ஏரியை ஒருவன் விட்டுச்செல்வது சரியல்ல.

பாம்புகளும், போக்கிரிகளும், பிறரை அண்டிப் பிழைக்கிறவர்களும் போடுகிற திட்டங்கள் காரியத்தில் நடப்பதில்லை. அதனால்தான் உலகமும் வாழ்ந்து வளர்கிறது என்ற பழமொழியைக் கேட்டதில்லையா? நான் உங்களோடு வரப் போகிறதில்லை. தீர்மானமாகச் சொல்லிவிட்டேன் என்றது.

அவற்றின் முடிவைக் கேட்டதும் வருமுன் காப்போன் அன்றைய தினமே வேறொரு ஏரிக்குச்சென்றுவிட்டது. மறுநாள் செப்டெம்பர் வேலையாட்களோடு அங்கு வந்தார்கள். ஏரியின் அடியாளத்தை வளைத்துத் துழாவுகிறமாதிரி வலை வீசினர். ஒரு மீன்கூ பாக்கி விடாமல் பிடித்துவிட்டனர். தண்ணீருக்குள் இருக்கும்போதே சமயோசிதபுத்தியுள்ள இரண்டாவது மீன் வலையில் செத்துவிட்டதுபோல் நடித்தது. மீன் பெரியது. தானாகவே செத்துவிட்டிருக்கும் என்று எண்ணிச் செம்படையர்கள் அதை வலையிலிருந்து எடுத்துக் கரையில் போட்டனர். உடனே அது துள்ளிச் சென்று தண்ணீரில் மூழ்கி மறைந்துபோயிற்று.

வலையின் துவாரங்களில் மூன்றாவது மீன் (யத்பவிஷ்யன்) வாய் மாட்டிக்கொண்டு அதிலிருந்து விடுபடத் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது. செம்படையர்கள் அதைத் தடியால் அடித்தார்கள். உடம்பு பஞ்சு போல் ஆகி உயிர் போகிறவரைக்கும் அது துள்ளிக்கொண்டேயிருந்தது.

அதனால்தான் வரும்முன் காப்போனும் சமயோசிதபுத்தியுள்ளவனும் சுகம் பெறுவார்கள். விதியை நொந்து கொள்கிறவன் நாசமடைகிறான் என்று சொன்னேன் என்றது பெண் குருவி.



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

➢1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் கைது செய்யப்பட்டு பியேர் கவுச்சோன் ஆயரிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

➢1496 - லியொனார்டோ டா வின்சி தனது பறக்கும் இயந்திரம் ஒன்றை சோதனையிட்டது வெற்றியளிக்கவில்லை.

➢1815 - ஆஸ்திரியா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகியன இணைந்து புரூசியா, மற்றும் ரஷ்யாவை எதிர்த்து இரகசிய கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்தின.

➢1833 - போக்லாந்து தீவுகளை பிரித்தானியா கைப்பற்றியது.

➢1859 - தமிழகத்தில் போளூர் பகுதியில் நிலநடுக்கம் பதியப்பட்டது.

➢1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஐக்கிய அமெரிக்காவில் இருந்து பிரிவதில்லை என டெலவெயர் வாக்களித்தது.

➢1888 - 91 சமீ முறிவுத் தொலைநோக்கி முதன்முறையாக கலிபோர்னியாவில் உபயோகிக்கப்பட்டது. இதுவே அந்நேரத்தில் உலகின் மிகப் பெரும் தொலைநோக்கி ஆகும்.

➢1921 - துருக்கி ஆர்மேனியாவுடன் அமைதி உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டது.

➢1925 - இத்தாலியின் ஆட்சி அதிகாரம் முழுவதும் தன்னிடம் உள்ளதாக முசோலினி அறிவித்தார்.

➢1932 - பிரித்தானியர் மகாத்மா காந்தி மற்றும் வல்லபாய் பட்டேல் ஆகியோரைக் கைது செய்தனர்.

➢1956 - ஈபெல் கோபுரத்தில் ஏற்பட்ட தீயினால் கோபுரத்தின் மேற்பகுதி சேதமடைந்தது.

➢1957 - முதலாவது மின்கடிகாரத்தை ஹமில்ட்டன் வாட்ச் கம்பனி அறிமுகப்படுத்தியது.

➢1958 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது.

➢1959 - அலாஸ்கா ஐக்கிய அமெரிக்காவின் 49வது மாநிலமானது.

➢1961 - அமெரிக்க அரசு கியூபாவுடனான ராஜதந்திர உறவுகளை முறித்துக்கொண்டது.

➢1961 - இடாகோவில் அணுக்கரு உலை ஒன்றில் ஏற்பட்ட கசிவின் காரணமாக மூன்று தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

➢1974 - யாழ்ப்பாணத்தில் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆரம்பமானது.

➢1977 - ஆப்பிள் கணினி நிறுவனமயப்படுத்தப்பட்டது.

➢1995 - விடுதலைப் புலிகள் - இலங்கை அரசு பேச்சுக்களின் இரண்டாம் கட்டம் ஆரம்பமானது.

➢2004 - எகிப்திய விமானம் ஒன்று செங்கடலில் வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 148 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்புகள்

➢1740 - கட்டபொம்மன், ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட மன்னன் (இ. 1799)

➢1925 - டி. கே. புஷ்பவல்லி, திரைப்பட நடிகை

➢1956 - அருளம்பலம் அருள்பவான் - வல்வையைச் சேர்ந்த அகில இலங்கை மெய்வல்லுனர் விளையாட்டுவீரன்

### இறப்புகள்

➢2005 - ஜே. என். டிக்சித், இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (பி. 1936)

## கட்டபொம்மன்



வீரபாண்டிய கட்டபொம்மன், 1760 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3 ஆம் திகதி பொம்மு மரபில் வந்த திக்குவிசய கட்டபொம்மு- ஆறுமுகத்தம்மாள் தம்பதியருக்கு, பாஞ்சாலங்குறிச்சியில் பிறந்தார் .

பெப்ரவரி 2, 1790 அன்று 47 வது பாளையக்காரராகப் பொறுப்பு ஏற்றுக்கொண்டார். இவரது துணைவியார் வீரசக்கம்மாள்.

அழகிய வீரபாண்டியபுரம் எனும் ஊரில் (இன்றைய ஒட்டபிடாரம்) ஆட்சிபுரிந்து வந்த ஜெகவீரபாண்டியனின் (நாயக்க வம்சம்) அவையில் அமைச்சராக பொம்மு என்கிற கெட்டி பொம்மு பதவியேற்றிருந்தார். இவரது பூர்வீகம் ஆந்திர மாநிலம், பெல்லாரி ஆகும். வீரமிகுந்தவர் என்ற பொருளை தெலுங்கில் உணர்த்தும் கெட்டி பொம்மு எனும் சொல் நாளடைவில் கட்டபொம்மு என்று மாறி பின் தமிழில் கட்டபொம்மன் என்ற சொல்லாயிற்று

ஜெகவீரபாண்டியனின் மறைவிற்குப்பின் அரசகட்டிலில் ஏறிய கட்டபொம்மு பின் ஆதி கட்டபொம்மன் என்று மக்களால் அழைக்கப்பட்டார். இவரே பொம்மு மரபினரின் முதல் கட்டபொம்மன்.

கம்பனியார் (கிழக்கிந்திய கம்பெனி) கி.பி. 1793 இல் கப்பம் (திறை) கேட்டனர். கி.பி. 1797 இல் முதன் முதலாக ஆங்கிலேய அலன் துரை பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டைக்கு வந்தார். அப்போது வீரபாண்டிய கட்டபொம்மனைக் கைதுசெய்ய முயன்றார். அதை முறியடித்து வீரபாண்டியக் கட்டபொம்மன் பாஞ்சாலங் குறிச்சியை வந்தடைந்தார். செப்டம்பர் 5, 1799 இல் பேனர்மென் என்ற ஆங்கிலேயத் தளபதியால் பாஞ்சாலங்குறிச்சி கோட்டை முற்றுகையிடப்பட்டது. அங்கு கடும் போர் நடைபெற்றது. போரில் பல ஆங்கிலேயர்கள் உயிரிழந்தனர். இருப்பினும் கோட்டை வீழ்ந்துவிடும் என்ற நிலையில் வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையை விட்டு வெளியேறினார். 1799 ஆம் ஆண்டு, செப்டம்பர், 9 இல் ஆங்கிலேயர்களால பாஞ்சாலங்குறிச்சி கோட்டை கைப்பற்றப்பட்டது. 1799 ஆம் ஆண்டு அக்டோபர், 1 இல் புதுக்கோட்டை மன்னர் விஜயரகுநாத தொண்டமானால் வீரபாண்டிய கட்டபொம்மன் கைது செய்யப்பட்டு கம்பனியாரிடம் ஒப்படைக்கப்பட்டார். 1799 ஆம் ஆண்டு அக்டோபர், 16 ஆம் திகதி ஆங்கிலேயத் தளபதி பேனர்மென் ஆணைப்படி கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலையின் மன்னர்...!




ஆன்மீகம் 82

மனித அனுபவத்தின் இயல்பு எப்படியென்றால், ஒருவர், தம்முடைய புலனறிவு, எண்ணம், உணர்வு, நம்பிக்கை இவற்றின் அடிப்படையில் சுலபமாக ஏமாந்துவிடுகிறார். நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அல்லது என்ன உணர்ச்சியை வெளிப்படுத்துகிறீர்களோ அது, இந்த படைப்பைவிட மிகப்பெரிதாகவும் முக்கியமானதாகவும் உங்களுக்கு ஆகிவிடக்கூடும்.

ஒரு நிகழ்ச்சியில் ஒருவர், "சத்குரு, கடவுள் என்னை ஏன் இங்கு அனுப்பி வைக்க வேண்டும்? இப்பொழுது நான் முக்தி, மோட்சம் அடைய பாடுபட வேண்டியிருக்கிறதே?" என்று கேட்டார்.

"உங்களை கடவுள்தான் இங்கு அனுப்பி வைத்தார் என்று ஏன் நம்புகிறீர்கள்? உங்களைப் பார்த்தால் எனக்கு அப்படி தோன்றவில்லையே" என்று அவரை கேட்டேன். இப்படித்தான் முடிவில்லாமல் போய்க்கொண்டிருக்கிறது.

மக்கள் ஏதோ ஒன்றில் முதலீடு செய்கிறார்கள், அதிலிருந்து ஓர் உலகமே வளர்ந்து விடுகிறது. ஒரு எண்ணம், ஒரு சிந்தனை, ஒரு உணர்ச்சி, ஒரு பற்றுதல்; இவற்றிலிருந்து ஒரு பிரபஞ்சமே உருவாகிவிடும். எனவேதான், வழிவழியாக இந்த அனுபவங்களை எல்லாம் மாயை என்று ஒரு



வார்த்தையைக் கூறி, தள்ளுபடி செய்து வந்தார்கள்.

உங்களுடைய அடையாளத்திலிருந்து உங்கள் எண்ணத்திலிருந்து உணர்ச்சியிலிருந்து பற்றுதலிலிருந்து உருவாகும் எதுவும் மாயைதான்- அது ஒன்றே போதும். ஓர் உலகம் உருவாகும்- அதிலிருந்து பிரபஞ்சமே வெளிவந்துவிடும். அவரவர்க்கென்று தனிப் பிரபஞ்சம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படித்தான் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இதுவே, நிஜத்தைக் காட்டிலும் நிஜமானதாக தோன்றும்பொழுது அந்த மெய்யானதை அறிந்துகொள்ள நேரமேது?

நீங்கள் சிறுவராய் இருந்தபோது விளையாடிய விளையாட்டுக்கள் இந்த பிரபஞ்சத்தை விட பெரிதாகத் தோன்றியது. எல்லாமே விளையாட்டுதான். சிறிது வளர்ந்தவுடன் உங்கள் அறிவை ஹார்மோன்கள் கடத்திவிட்டன. எதிர்ப்பாலினம்தான் எல்லாம் என்றாகி விட்டது. எல்லாவற்றையும் அதுவே ஆட்சி செய்தது. எல்லாம் நிஜம் என்று நினைத்தீர்கள். வயதானவுடன் அந்த விளையாட்டுக்கள், எதிர்பாலினம், எல்லாம் பின்னுக்கு தள்ளப்பட்டு கவலைகளின் சுழற்சியில் சிக்கிக் கொண்டுவிடுகிறீர்கள். உங்களுக்கு தேவைப்படாத பணத்தைப் பற்றியும் இல்லாத எதிர்காலத்தைப் பற்றியும் மீட்க முடியாத கடந்த காலத்தைப் பற்றியும் சதாசர்வகாலமும் கவலைப்பட்டு, கவலைப் படுவதில் மன்னராகிவிட்டீர்கள்.

வயது ஆக, ஆக ஒரு காரணமும் இல்லாமலேயே கவலைப்படுகிற அளவிற்கு தேர்ச்சி பெற்றுவிடுவீர்கள். நீங்கள் ஒரு போலிப் பிரபஞ்சத்தை உருவாக்கிவிட்டதால், இது முடிவில்லாமல் போய்க் கொண்டிருக்கும். நீங்கள் இறந்தால் அதுவும் உடைந்து வீழ்ந்துவிடும் என்பதால், அது ஒரு நிலையில்லாமல் செயற்பட ஆரம் பித்துவிடும். தன்னுடைய இருப்பு நிரந்தரமனது அல்ல என்று அது உணர்ந்துவிடும். எனவே, பதற்றத் தால் உங்களுக்கு எல்லா விதமான போலி கண்ணோட்டங்களையும் அது கொடுக்கும்.

(தொடரும்)


சத்குரு ஜக்கி வாசுதேவ்



ஈழத்தமிழர் விடுதலைக்கு இதயம் தந்த இமயம்!

# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்

என்னை உள்ளே அழைத்தார்கள். நான் எழுதிய காட்சியை பெரியவரிடம் கொடுத்தேன். படித்தார்கள். பிறகு தன் தம்பியிடம் கொடுத்தார். அவர் படித்தார் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.



எம்.ஜி.ஆரின் தாயார் சத்தியபாமா

எனக்குச் சற்றுப் பயமாக இருந்தது. பெரியவர், இளங்கோவனின் நடை இருப்பதாகச் சொன்னார். என்னுடைய எழுத்துக்குக் கிடைத்த பெரும் நற்சாட்சி!

"எழுதுவதற்கு உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"இருநூறு கொடுங்கள்" என்று கேட்டேன்.

"என்ன?" என்று அதட்டலாகப் பெரியவர் கேட்டார்.

நான் பயந்து போய் "சரி நூறு கொடுங்கள்" என்று சொன்னேன்.

உடனே சின்னவர் சிரித்துவிட்டு "அட பைத்தியக்காரா ஒரு நாடகம் எழுத நூறு ரூபாய்தான் வேண்டுமா? சரி...சரி இனி நீங்கள் கேட்க வேண்டாம் நாங்களே தருகிறோம்" என்று சொன்னார்.

இதையே வேதவாக்காகக் கொண்டு நான் வாழ்ந்தேன். அவர்களிடம் இறுதி வரை எதுவுமே கேட்டதில்லை. எனக்கு எல்லாமே கிடைத்தது.

அடுத்த நாள், என்னை வெளியே இருக்கச் சொல்லாமல் வீட்டின் உள்ளேயே இருக்குமாறு சொன்னார்கள். பகலுணவும் தங்களுடன் சாப்பிடும்படி சொன்னார்கள்.

ஒரு எழுத்தாளனுக்கு அறிவு மட்டும் இல்லை வயிறும் இருக்கிறது என்பதை உணர்ந்தவர்கள் அந்த அபூர்வ சகோதரர்கள்.

பெரியவர்களின் குழந்தைகள் ஓடி விளையாடிக் கொண்டிருப்பர். அந்த பிஞ்சு முகங்களைப் [illegible] சமும் அலுப்பு [illegible]


எழுதி முடித்தேன். இன்பக் கனவு நாடகத்தின் ஆரம்பப் பெயர் இடிந்த கோயில்.

பாழடைந்த கோயில்களை பள்ளிக் கூடங்களாக மாற்றினால், நாட்டில் அறிவு வளரும் என்பதைச் சொல்லவே, அந்த நாடகம்.

"இஸ்லாமியர்கள் ஆங்கிலம் கற்கலாம் அதில் தவறில்லை" என்று அலிகாரில் சர்வகலாசாலை அமைத்தவர், சேர். செய்யது அகமதுகான்.

# 03 அறிவுக்கு உண்டி!

-கலைமாமணி கே.ரவீந்தர்-



எம்.ஜி.இராமச்சந்திரனின் தாய்வீடு

அவர், ஒரு குழு அமைத்து நிதி வசூலித்தார். அதன் பெயர் நிஜா ஜூல் உலூம் என்பது.

அதாவது, கல்விக்கு காணிக்கை என்று பெயர். அப்படி வள்ளலின் வீட்டிலும் ஒரு உண்டியல் இருந்தது. அது குறள் உண்டியல்.

தாய் வீடு முத்தமிழ் கூடும் இடமாகவும் முக்கடலும் கூடும் குமரிபோல் முத்தமிழ்க் கூடமாகவும் இருந்தது.

காரணம் தினமும் கலைஞர் (இயல்), கண்ணதாசன் (இசை), செம்மல் (நாடகம்) கூடிப் பேசுவர். அப்போது மனோகரா படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தது. படப்பிடிப்பு முடிந்ததும் சிவாஜி கணேசன் அவர்களும் அங்கு வருவார்.

சத்தியத் தாயின் தவப்புத்திரர்களாகவே மூவரும் இருந்தனர்.

செம்மல், கவிஞர், கலைஞர் மூவருக்குள்ளும் ஒரு பந்தயம் இருந்தது. ஒரு நாளைக்கு பத்துக் குறள் வீதம் மூவரும் மனப்பாடமாக ஒப்புவிக்கவேண்டும். எவர் தவறினாலும் ஒரு குறளுக்கு ஒரு ரூபாய் வீதம் கொடுக்க வேண்டும். இந்தப் பணத்தைப் போடு வதற்கு ஒரு உண்டியலும் தயார் செய்து வைத்திருந்தனர்.

செம்மல் தினமும் மனப்பாடம் செய்யாமல் பணம் போடுவார்.

ஒரு பக்க வசனத்தையும் ஒரு மணி நேரத்தில் மனப்பாடம் செய்யும் இவரால், இது முடியாமல் போனது எனக்கு வியப்பாக இருந்தது.

ஒரு நாள் கேட்டுவிட்டேன்.

"சும்மா இருமய்யா நீர் கண்டுக்காதீர். அந்தப் பணத்தில் தமிழ்க் கலைக் கழஞ்சியம் வாங்க இருக்கிறோம். அதுக்குப் பணம் வேணாமா? அதுக்காக நான் விட்டுக்கொடுக்கிறேன்" என்றார்.

முஸ்லீம் மதத்தில் நான்கு வேதங்களில் தௌராத் என்பதும் ஒன்று. முஸாநபி (மோஸஸ்) காலத்தில் தோன்றியது. அதுதான் இன்று யூதர்களுக்காக நோரா என்றிருக்கிறது.

அதில் ஒரு பகுதியில் இறைவனுடன் நேருக்கு நேர் பேசும் வல்லமை படைத்த மோஸஸ், "இறைவா, உன்னோடு பேசுகிறேன். உன்னருகில் இருக்கவும் விரும்புகிறேன். அனுமதிப்பாயா?" என்று கேட்டார். "தேவையில்லை நல்லவர்கள், பக்கத்தில் இருந்தால் போதும்" என்றான்.

"நல்லவர் யாரென்று எப்படித் தெரிந்து கொள்வது?" என்று கேட்ட போது, "எவர் ஒருவர் தனக்கென்று இருப்பதை பிறருக்காக விட்டுக்கொடுக்கிறார்களோ அவர்களே நல்லவர்" என்று சொன்னாராம் இறைவன்.

இந்த மறைச் சொல்லை நினைவு படுத்திக்கொண்டு நானும் மௌனமாவேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம் மனிதவள முகாமைத்துவம் டிப்ளோமாக் கற்றை நெறிக்கான பரீட்சை 2014 எதிர்வரும் 18, 19, 25, 26 ஆம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

இப் பரீட்சைகளுக்குரிய நேர சூசியை பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிட முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தங்கம் கடத்தமுயன்ற பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு தங்கக் கட்டிகளை கடத்த முயன்ற பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பம்பலப்பிட்டியை சேர்ந்த 33 வயதுடைய பெண்ணொருவர் நேற்றையதினம் காலை இவ்வாறு தங்கக்கட்டிகளை கடத்த முயன்றுள்ளார்.

குறித்த பெண் தனது தோல் பையினுள் மிகவும் சூட்சுமமாக மறைத்து வைத்து கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் கட்டுநாயக்க பொலிஸ் அதிகாரிகள் குறித்த பெண்ணை கைது செய்துள்ளனர்.

கைப்பற்றப்பட்ட தங்கக் கட்டிகள் 4 கிலோ 500 கிராம் நிறையை கொண்டுள்ளதாகவும் அவை 22 மில்லியன் ரூபா பெறுமதியுடையன எனவும் சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

## போர்க்குற்ற ஆதாரங்கள் தொடர்ந்து வெளிவரும்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமை மாநாட்டில் போர்க்குற்ற ஆதாரங்களை வெளியிடுவேன் பிரித்தானிய ஊடகவியலாளர் கெல்லம் மக்ரே தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய செவ்வியிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடந்த கால நிகழ் கால இலங்கை அரசாங்கம் நியாயமான விசாரணைகளை நடத்துவதற்கு தயாரான நிலையில் இல்லை.

விசாரணை நடைபெற்றால் அங்கு நடந்த போர்க்குற்றம் தெரிய வந்து விடும் என அஞ்சுகின்றது இலங்கை அரசாங்கம் எனவும் அத்தோடு பல திடுக்கிடும் தகவல்களை தெரிவித்துள்ளார். (அ-2)

### வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின்

# கிழக்கு தீமோர், சூடான் நாடுகளுக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும்-கிரியெல்ல

(கொழும்பு)



**அரசியலமைப்பின் 13 ஆவது திருச்சட்டம் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் கிழக்கு தீமோர் மற்றும் சூடான் நாடுகளுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கு ஏற்படும் அபாயமுள்ளது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

மான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் இந்த விடயம் குறித்து மேலும் குறிப்பிடுகையில்,

இனப் பிரச்சினை தீர்வாக அரசாங்கம் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தினாலோ அல்லது 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்றாலோ அதற்கு முழுமையான ஆதரவினை வழங்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தயாராகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

தேசிய பிரச்சினை தீர்வு விடயத்தில் அரசாங்கம் உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றினாலே அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும்.

அதாவது அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதாகவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதாகவும் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் சபைக்கும் சர்வதேசத்துக்கும் வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அந்த வாக்குறுதிகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும்.

யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அரசாங்கம் இவ்வாறு சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருக்கின்றது.

உள்நாட்டில் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை போன்று சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் சர்வதேசம் மறந்து விடும் என்று அரசாங்கம் கருதக்கூடாது. எத்தனை வருடங்கள் சென்றாலும் சர்வதேசம் வாக்குறுதிகளை மறக்கப்போவதில்லை. கேள்விகளை எழுப்பும்.

எனவே இந்த விடயத்தில் அரசாங்கமும் குழம்பி ஏனைய தரப்புக்களையும் குழப்பியுள்ளது. சர்வதேசத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டால் அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். தேசிய பிரச்சினை தீர்வு முயற்சிக்கு ஐக்கிய தேசிய கட்சி ஆதரவு வழங்கும்.

யுத்தம் முடிந்துவிட்டது. ஆனால பிரச்சினை இன்னும் தீரவில்லை. பிரச்சினை இருந்ததைவிட தீவிரமடைந்துள்ளது.

இவ்வாறே பயணித் தால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய நெருககடிகள் ஏற்படலாம்.

இந்தோனேஷியாவுக்கு எதிராக ஒரு காலத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சிறிய குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டன. ஆனால் இறுதியில் கிழக்குத் தீமோர் உருவாகியது.

அதேபோன்று சூடானுக்கு எதிராக ஒரு காலத்தில் ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் சிறிய குற்றச்சாட்டுக்களே முன்வைக்கப்பட்டன. இறுதியில் தென் சூடான் உருவானது.

தற்போது இலங்கைக்கு எதிராகவும் மனித உரிமைப் பேரவையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

எனவே பிரச்சினைகளை சர்வதேச சமூகத்துடன் பேசித் தீர்த்துக் கொள்வது அவசியமாகும். இது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த நாட்டுக்கு ஜெனீவா மனித உரிமைப் பேரவையை ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷவே 1989ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார்.

எனவே பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் சர்வதேச சமூகத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேணடும். வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றார். (அ-2)



கோண்டாவில் ஸ்ரீஅற்புதநர்த்தன சனசமூக நிலையம் மற்றும் கோண்டாவில் குமரன் விளையாட்டுக்கழகம் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் அண்மையில் இடம்பெற்ற போது... (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

# கடத்தலுடன் தொடர்புடைய நபரை நாடு கடத்துங்கள்

## பாக்.கிடம் இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை நாடு கடத்துமாறு இலங்கை அரசாங்கம் பாகிஸ்தானிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக பாகிஸ்தானிடம் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. 150 கிலோ கிராம் எடையுடைய ஹெரோயின் போதைப் பொருள் இவ்வாறு கடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விரிவான விசாரணைகளுக்கு குறித்த கடத்தல்காரரை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பான முயற்சிகள் எடுக்கப்பட்டுவருவதாக காவல்துறை ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தெற்காசிய பிராந்திய வலய உறுப்பு நாடுகளான இலங்கையும் பாகிஸ்தானும் போதைப்பொருள் வர்த்தகத்தை தடுத்து நிறுத்த முயற்சி எடுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொள்கலன் மூலம் இலங்கைக்கு போதைப் பொருள் கடத்திய பிரதான சந்தேக நபரை பாகிஸ்தான் அதிகாரிகள் கைது செய்துள்ளனர். (அ-2)

## உணவு விஷமாகியதில் 170 பேருக்கு சுகவீனம்

ஹொரணை மற்றும் ஹோமாகம பிரதேசங்களில் அமைந்துள்ள இரு வேறு ஆடைத் தொழிற்சாலைகளைச் சேர்ந்த 170 பேர் திடீரென சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஹொரணை,போருவதண்ட பிரதேசத்திலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்றைச் சேர்ந்த ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொழிற்சாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விருந்தொன்றில் கலந்து கொண்டிருந்த போதே இவர்கள் திடீரென சுகவீனமுற்றுள்ளனர்.

அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உணவு விஷமாகியதன் காரணமாகவே இவர்கள் சுகவீனமுற்றதாகவும் இவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## ஐ.நா. அங்கத்துவ நாடுகளின் தயவை நாடுகிறது இலங்கை

(கொழும்பு)

ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும் யோசனையின் மூலம் ஏற்படப் போகும் சர்வதேச அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க அரசாங்கம் திட்டங்களை வகுத்து வருவதாக தெரியவருகிறது.

சர்வதேச சமூகத்தின் ஆதரவை பெறுவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு பயணங்களை மேற்கொண்டு ஆதரவை திரட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளின் அமைச்சர் மட்ட சந்திப்புகளுக்கான நேர அட்டவணையை அரசாங்கம் தயாரித்துள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கு பயணம் மேற்கொள்ள உள்ள இலங்கை இராஜதந்திரிகள், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பல பரிந்துரைகளை அமுல்ப்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்ட உள்ளதுடன், ஏனைய வற்றை அமுல்ப்படுத்த கால அவகாசம் தேவை என்ற கோரிக்கையை முன்வைக்க உள்ளதாக தெரியவருகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி கிராஸ் ஆவதற்கான காரணங்கள்



கம்ப்யூட்டர் கிராஷ் ஆகி நீல வண்ணத்தில் திரை மாறிவிடும். அல்லது அப்படியே திரைக் காட்சி முடங்கிப் போய்விடும். சில வேளைகளில் திரையில் (Fatal error: the system has become unstable or is busy,' it says. 'Enter to return to Windows or press Control Alt Delete to restart your computer. If you do this you will lose any unsaved information in all open applications.) என்ற செய்தி கிடைக்கும். இதைத்தான் Blue Screen of Death என்று கம்ப்யூட்டர் மொழியில் சொல்வார்கள். ஏன் இவ்வாறு ஏற்படுகிறது என்று இங்கு காணலாம்.

### ஹார்ட்வெயர் பிரச்சினை

கம்ப்யூட்டரில் பல பாகங்கள் ஒன்றிணைந்து இயங்குகின்றன. சில வேளைகளில் இவற்றுக்குள் பிரச்சினை வந்தால் இயங்கு வது நின்று போகும். ஒவ்வொரு சாதனமும் ஒரு வழியை மேற்கொண்டு அதன் மூலம் தன் இயக்கத்தை மேற்கொள்ளும். பொதுவாக ஒரு கம்ப்யூட்டரில் இத்தகைய வழிகள் குறைந்த பட்சம் 16 இருக்கும். இதில் ஒரே வழியை இரு சாதனங்கள் (பிரிண்டர், கீ போர்டு, மவுஸ்) எடுத்துக் கொள்ளும்போது இயக்கம் நின்று போகும். இவ்வாறு ஏற்படு கையில் Start ▸ Settings ▸ Control pannel ▸ System ▸ Device Manager எனச் சென்று பார்த்தால், பிரச்சினை ஏற்பட்ட சாதனத்தின் பெயர் முன்னால் ஒரு மஞ்சள் நிற ஆச்சரியக் குறி தோன்றும். டிவைஸ் மேனேஜரில், கம்ப்யூட்டர் என்பதில் கிளிக் செய்து பார்த்தால், இந்த சனல் வழிகளுக்கான ஐ.ஆர்.கியூ எண் காட்டப்படும். ஒரே எண் இருமுறை இருப்பின் பிரச்சினை அங்குதான் உள்ளது என்று பொருள். இதற்குத் தீர்வு என்ன? பிரச்னைக்குரிய சாதனத்தை அன் இன்ஸ்டோல் செய்து மீண்டும் இன்ஸ்டோல் செய்தால் போதும்.

### ரம் மெமரி சிப்ஸ்

ரம் மெமரியை உயர்த்துவதற்காகப் புதிய ரம் சிப் ஒன்றை இணைத்திருப் போம். ஆனால் ஒன்றுக்கொன்று வேறுபாடான வேகம் உள்ளவையாக அவை இருக்கலாம். அவற்றிற்கிடையே இணைந்து செல்லும் நிலை ஏற்படாத போது Fatal Exception Error ஏற்படலாம். இதனை கம்ப்யூட்டர் பாகங்களின் இயக்கம் தெரிந்தவர்கள் மூலம், பயாஸ் செட்டிங்ஸ் திறந்து, ரம் wait state நிலையைச் சற்று உயர்த்தலாம். அல்லது ஒரே மாதிரியான வேகத்தில் இயங்கும் சிப்களை அமைக்கலாம்.

### ஹார்ட் டிஸ்க் டிரைவ்

பயன்படுத்தத் தொடங்கிய சில வாரங்களில் ஹார்ட் டிஸ்க்கின் ஒழுங்கு நிலை கலையத்தொடங்கும். தேவையற்ற தற்காலிக பைல்கள் தேங்கும். பைல்கள் சிதறியபடி சேமிக்கப்படும். இதனால் இயக்க வேகத்திற்கு ஹார்ட் டிஸ்க் இணையாக இயங்க முடியாமல் போகும். அப்போது கிராஷ் ஆக வாய்ப்பு உண்டு. எனவே அடிக்கடி ஹார்ட் டிஸ்க்கினைச் சுத்தப்படுத்த வேண்டும். இதற்கு டிபிராக்மென்ட் செய்திட வேண்டும். சி டிரைவில் தங்கும் தேவையற்ற பைல்களை அதற்கான புரோகிராம்கள் கொண்டு நீக்கலாம்.

### வீடியோ கார்ட்

சில வேளைகளில் கிராஷ் ஆகும் போது Fatal OE exceptions and VXD errors என்ற செய்தி கிடைக்கும். இது வீடியோ கார்டினால் ஏற்படுவது. இதனைத் தவிர்க்க வீடியோ டிஸ்பிளேயின் ரெசல்யூசனைக் குறைக்கவும். StartSettingsControl PanelDisplaySettings எனச் சென்று ஸ்கிரீன் ஏரியா பாரினை இடது மூலையில் நிறுத்தவும். அதே போல கலர் செட்டிங்ஸ் சென்று 16 பிட் என்ற அளவில் அமைக்கவும்.

### வைரஸ்

பெரும்பாலான கம்ப்யூட்டர் கிராஷ்களுக்கு வைரஸ்களே காரணம். சரியான அண்ட்டி வைரஸ் புரோகிராம் ஒன்றை நிறுவி, அவ்வப்போது அதனை அப்டேட் செய்வது மட்டுமே இதனைத் தடுக்கும். பல வைரஸ்கள் பூட் செக்டாரைக் கெடுத்து வைக்கும். இதனால் கம்ப்யூட்டரை இயக்கவே முடியாது. எனவே இது போன்ற நிலையில் கை கொடுக்க விண்டோஸ் ஸ்டார்ட் அப் டிஸ்க் ஒன்றை உருவாக்கி கைவசம் வைத்துக் கொள்ளுங்கள்.

### பிரிண்டர்

பல வேளைகளில் கம்ப்யூட்டர்கள் பிரிண்ட் எடுக்கையில் கிராஷ் ஆவதை நீங்கள் கவனித்திருக்கலாம். இதற்குக் காரணம் பிரிண்டர்களில் மிகவும் குறைந்த அளவில் பபர் மெமரி இருப்பதே ஆகும். மேலும் கம்ப்யூட்டரின் சிபியு சக்தியை பிரிண்டர்கள் சற்று அதிகமாகவே பயன்படுத்தும். எனவே பல வேலைகளுடன் பிரிண்டிங் வேலையை மேற்கொள்கையில், அல்லது அதிகமான அளவில் பிரிண்டருக்கு டேட்டாவினை அனுப்புகையில் கிராஷ் ஏற்படும். நாம் சாதாரணமாகக் காணாத கரக்டர்களை பிரிண்டர் அச்சிட்டால் இந்த பிரச்னை தலை தூக்குகிறது என்று பொருள். உடனே பிரிண்டருக்குச் செல்லும் மின்சாரத்தை 10 விநாடிகளுக்கு நிறுத்திப் பின் மீண்டும் இயக்கவும்.

### சொப்ட்வெயர்

முழுமையாக இல்லாமல் அல்லது மோசமாக இன்ஸ்டால் செய்யப்பட்ட சொப்ட்வெயர் தொகுப்புகளால், கம்ப்யூட்டர் கிராஷ் ஆகலாம். இவற்றைச் சரியாக அன் இன்ஸ்டோல் செய்திட வேண்டும். இல்லையேல் இவை தொடர்பான வரிகள், ரெஜிஸ்ட்ரி யில் இருந்து கொண்டு, இந்த சொப்ட் வேயரினை இயக்குகையில் கம்ப்யூட்டரை கிராஷ் ஆகும் நிலைக்குக் கொண்டு வரலாம். ரெஜிஸ்ட்ரியைச் சுத்தம் செய்திட வென வடிவமைக்கப்பட்ட புரோகிராம் களைக் கொண்டு அதனைச் சரி செய்திட வேண்டும். இல்லையேல் மீண்டும் விண்டோஸ் இயக்கத்தினை இன்ஸ்டால் செய்திட வேண்டியதிருக்கும்.

### அதிக வெப்பம்

இப்போது வருகின்ற சிபியுக்கள் மீது சிறிய மின் விசிறிகள் பொருத்தப்பட்டு சிபியு இயக்கத்தின் போது உருவாகும் வெப்பம் வெளிக்கடத்தப்படுகிறது. சிபியு அதிக சூடானாலும், அதிக குளிர்ச்சியினால் பாதிக்கப்பட்டாலும், கெர்னல எர்ரர் (Kernel Error) என்று ஒரு பிரச்சினை ஏற்படும். பொதுவாக எந்த வேகத்தில் ஒரு சிபியு இயங்க வேண்டுமோ அதனைக் காட்டிலும் அதிக வேகத்தில் இயங்கும் வகையில், சிபியு செட் செய்யப்பட்டிருந்தாலும் அதிக வெப்ப பிரச்சினை ஏற்படும். எனவே சிபியு வின் வேகத்தினை பயாஸ் செட்டிங்ஸ் சென்று குறைக்க வேண்டும்.

# பெண்களுக்காக புதிய மென்பொருள்




பணி இடங்கள் மற்றும் பயணங்களின் போது பெண்கள் தங்களுக்கு எதிராக நடத்தப்படும் பாலியல் வன்முறைகளிலிருந்து பாதுகாத்து கொள்வதற்காக முன்னணி மென்பொருள் நிறுவனமான மைக்ரோ சொப்ட் புதிய தொழில்நுட்பத்தை வடிவமைத்துள்ளது. உடனடி தகவல் இந்தியாவுக்கான மைக்ரோசொப்ட் நிறுவன இயக்குநர் ராஜ் பியானி கூறியதாவது - பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் அதிகரித்துள்ளன. இதிலிருந்து பெண்கள் தங்களை காத்துக் கொள்ள மைக்ரோசொப்ட் புதிய தொழில்நுட்பத்தை வடிவமைத்து உள்ளது.

கையடக்க தொலைபேசிகளில் இந்த் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் பெண்கள் பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு உள்ளாகும்போது அவர்களின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்படும். ஆபத்து காலத்தில் கையடக்க தொலைபேசியில் உள்ள ஒரு பட்டனை அழுத்தினால் கையடக்க தொலைபேசியில் உள்ள அனைத்து தொடர்பு எண்கள், பொலிஸ், பாதுகாப்பு நிறுவனங்கள், பேஸ்புக் நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் தகவல் அனுப்பப்படும்.

### டிராக்கிங் சிஸ்டம்:

இதில் உள்ள தொடுதிரை வசதியின் மூலம் நடக்கும் காட்சிகள் பதிவு செய்யப்படும். இதன் மூலம், குற்றவாளிகளை எளிதாக கண்டறிய முடியும். அதுமட்டுமின்றி, இணையத்தள வசதி இல்லாமலும் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்த முடியும். இதில் உள்ள டிராக்கிங் சிஸ்டம் மொபைல் போனை பயன்படுத்தும் நபர் எங்கு உள்ளார் என்பதை அனைவருக்கும் காண்பிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

# ஒரு நேரத்தில் பல சாதனங்களை மின்னேற்ற



டேப்லட், ஸ்மார்ட் கைபேசிகள் போன்ற ஒன்றிற்கு மேற்பட்ட சாதனங்களை ஒரே நேரத்தில் சார்ஜ் செய்யக்கூடிய சாதனம் ஒன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. Octafire எனப்படும் இச்சாதனம் 100-240V, 47-63Hz மின்சாரத்தில் செயற்படக் கூடியதாகவும், 2.1A / 5V வெளியிடக்கூடிய தாகவும் காணப்படுகின்றது. இதன் மூலம் அதிகபட்சமாக 8 வெவ்வேறு வகையான மொபைல்களை சார்ஜ் செய்ய முடியும்.

# மனித ஆரோக்கியத்திற்கு கைப்பட்டி தயாரிப்பு




ஸ்மார்ட் கைப்பேசிகளின் உதவியுடன் பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தக்கூடிய இலத்திரனியல் கைப்பட்டிகளை பல்வேறு நிறுவனங்கள் அறிமுகம் செய்து வருகின்றன.

இவற்றின் வரிசையில் LG நிறுவனமும் "டச்" தொழில்நுட்பத்தினைக் கொண்ட Lifeband எனும் கைப்பட்டியினை அறிமுகம் செய்து வைத்துள்ளது.

இதன் மூலம் உடலின் ஆரோக்கியம் தொடர்பான தகவல்களையும், உடலிலுள்ள உணவுக் கலோரிகள் தொடர்பான தகவல்களையும் அறிந்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின் நிலை மாறுகால நீதியும் தமிழினப் படுகொலையும்

**அமரர் ஜோசப் பரராஜசிங்கத்தின் நினைவு நிகழ்வில், அருட்தந்தை எழில் றஜன் நினைவுப் பேருரையிலிருந்து,**



கிழக்கு ஐரோப்பியாவில், கம்யூனிச ஆட்சியின் இரும்புக் கரங்களிலிருந்து பெருபாலான நாடுகள் மக்களாட்சி அரசியலில் இணைந்து கொண்டன. இரண்டாம் உலகப் போரின் பின் நிலைமாறுகால வரலாற்று ஆய்வாளர்கள், மிகக் குறைவான போர்க்குற்றவாளிகளே சர்வதேச சட்டத்திற்கு அமைய தண்டிக்கப் பட்டுள்ளனர் எனக் குறிப்பிடுகிறார்கள். ஆனால், பிரதேசத்திற்குப் பிரதேசம் நிலைமாறுகால நீதியின் அணுகுமுறை மாறுபட்டதாக காணப்பட்டது. கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் விவசாய நில மீளளிப்பு பற்றி நிலைமாறுகால நீதிக் கட்டமைப்பில் அதிகூடிய கவனம் செலுத்தப்பட்டது.

ஆபிரிக்க நாடுகளிலும் நிலைமாறுகால நீதியின் பொறிமுறைகள் பயன்படுத்தப்பட்டன. இரண்டு மிக முக்கிய நாடுகளாக தென்னாபிரிக்காவையும், றொடிசியாவையும் குறிப்பிடலாம். றொடிசியாவில் நீதி வழிமுறை செயலமைவுத் திட்டம் வெற்றி பெறவில்லை. காரணம், அப்போது ஆளுநராக இருந்த கிரிஸ்ரோவ் சோமேஸ் போர்க்குற்றத்தில் ஈடுபட்ட அதிகாரிகள் எவருமே தண்டிக்கப்படக் கூடாது என உடன்படிக்கை பொறிமுறை ஒன்றை உருவாக்கினார்.

தென்னாபிரிக்க அரசியல் நிலைமாறு மாதிரியும் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை முற்று முழுதாக வழங்கியது எனக் கூற முடியாது.

தென்னாபிரிக்காவில் நிறவெறி ஆட்சி முடிவுக்கு வந்த போது ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் அரசாங்கம், ஆட்சியைக் கைப்பற்றியது. கறுப்பித்தவர் சார்பாக ஆட்சிபீடமேறிய ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அதனுடைய போர்க்குற்றம் செய்த தலைமையும் உறுப்பினர்களையும் காத்துக்கொள்வதற்காக தேசிய கட்சியுடன் விட்டுக்கொடுப்புக்கு உடன்படவேண்டியதாயிற்று. தேசிய கட்சி மன்னிப்பு வழங்க வேண்டும் என்பதில் மிகத் தீவிரமாக இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்துவந்தது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சி அக்கொள்கைக்கு உடன்படாது, போர்க்குற்றவாளிகள் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடித்தது. இச்சந்தர்ப்பத்தில் தேசிய கட்சி, ஆபிரிக்க தேசிய காங்கிரஸை பொறிக்குள் சிக்கவைக்க சந்தர்ப்பத்தை தேடிக் கொண்டிருந்தது. கைக்கெட்டும் தூரத்தில் கிடைத் சந்தர்ப்பத்தை மிகச் சாதுரியமாக தேசியக் கட்சி பயன்படுத்தி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைமையையும், உறுப்பினர்களையும் அவர்கள் செய்த போர்க்குற்றங்களுக்காக தண்டிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தது. ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தனது தலைமையையும், உறுப்பினர்களையும் காத்துக்கொள்வதற்காக விட்டுக்கொடுப்பு அரசியலுக்கு இணங்கியது.

இவ்வாறு உண்மை கண்டறியும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை மக்கள் சார்பாக ஆட்சிக் கதிரையேறிய கறுப்பினத்தவர்களாலே முடக்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் பாதிக்கப்பட்டார்கள். சாதாரணமானவர்கள் இரட்டைச்சுரண்டல் அரசியல் பொறிக்குள் சிக்க வைக்கப் பட்டனர். பெரும்பாலான மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை.

உண்மைகண்டறியும் ஆணையங்களின் பங்களிப்பு நிலைமாறுகால நீதிக் கருத்தியலுக்கும், செயன் முறைக்கும் மிக அவசியமானது. உண்மையைக் கண்டறிவதன் மூலம் குற்றவாளிகளாகக் கணிக் கப்பட்ட பாதிக்கப்பட்டவர்கள், குற்ற வாளிகள் அல்ல என நிரூபிக்கப்பட்டு சமூக நீரோட்டத்தில், சமூக வாழ்விற்குதிரும்ப முடியும். குற்றவாளிகளாக இனங் காணப்பட்டவர்கள் குற்றமற்றவர் கள் என அடையாளப்படுத்தப்படு தல் இன்றியமையாதது. அதன் மூலம் பாதக்கப்பட்டவவர்களின் விடுதலைக்கான, நீதிக்கான போராட்டம் சர்வதேச ஏற்புடைமைத் தன்மையையும் அங்கீகாரத்தையும் பெறுகின்றது. போர்க்குற்றம் செய்தவர்களை இனங் காணுதலும் உண்மை கண்டறியும் ஆணையங்களின் பொறுப்பிலேயே உள்ளன.

இனங்காணப்பட்டவர்களை தண்டிக்கும் பொறுப்பு பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட நீதிக்குழுக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எர்வின் டலி உண்மை கண்டறியும் ஆணையங்களின் ஊடாக வெளிப்படுத்தப்படும் உண்மையை கேள்விக்குட்படுத்துகிறார். ஆணையங்கள் போர் நடந்த நாடுகளில் நல்லிணக்கம் ஏற்படவேண்டும் என்கிற காரணத்திற்காக கட்டமைக்கப்படும் உண்மையின் உண்மைத் தன்மையை மீள் வாசிப்புச் செய்தல் அவசியமாகின்றது என்கிறார்.

நேர்மையுடன் உண்மையை, ஏற்றுக்கொள்ள அச இயந்திரங்கள் தயாராக இருக்கின்றதா என்றால் அது சந்தேகத்திறகுரியது. இதற்குச் சிறந்த உதாரணமாக தென்னாபிரிக்க மாதிரியை குறிப்பிடலாம். உண்ஷம கண்டறியும் ஆணையங்கள் எப்பேற்பட்ட நிதியங்களினால் வழிநடத்தப்படுகின்றன என்பதையும் கருத்தில்எடுக்க வேண்டியது கட்டாயமாகின்றது. சத்தியோலின்சின் கருத்துப்படி பெரும்பாலான ஆணையங்கள் போர்க்குற்றவாளிகளின் பெயர்களைப் பதிவு செய்யவில்லை. உண்மை கண்டறிவது நல்லிணக்கத்திற்கு இடடுச் செல்லும் என்ற வாதம் கேள்விக்குட்படுத்தப் படலாம். காரணம், தேசத்தையும் மக்ளையும் சமயத்தையும் சங்கத்தையும் காப்தற்காக அரச நிறுவனங்களினால் அரச ஆதரவுடன் சண்டையிட்டவர்கள் ஒரே இரவில் உண்மையைக் கண்டறியும் ஆணையங்களினால் போர்க்குற்றவாளிகளாக அறிவிக்கப்படுகின்றார்கள். மக்களை பாதுகாப்பதற்கு பதில் அவர்களை கொன்று குவித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் கைது செய்யப்படுகின்றார்கள்.

இலங்கையில் நான்கு சந்தர்ப்பங்களில் உண்மையைக் கண்டறிவதற்கான முயற்சிகள மேற்கொள்ளப் பட்டன.

2001 இல் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இன வன்முறை தொடர்பில் உண்மை கண்டறியும் ஆணையம்.

இது, 1981 இலிருந்து 1984 ஆம் ஆண்டவரையிலான வன்முறைச் சம்பவங்களுக்கான காரணிகளைக் கண்டறிந்து மீள் நிலைப் படுத்தல் தொடர்பில் ஆலோசனை வழங்க ஏற்படுத்தப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் இதன் மூலம் நன்மையடைந்ததாக ஆதாரங்கள் கிடைக்கப் பெறவில்லை. ஆனால், 1983 நடைபெற்ற இன அழிப்பில் பாதிக்கப்பட்டவர்களிடம் மன்னிப்புக் கோரப்பட்டது.

1995 இல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரினால்- கடத்தப்பட்டவர்கள், காணாமற்போனவர்கள் தொடர்பில் ஆராய ஆணைக் குழு அமைக்கப்பட்டது. இது 1988 இலிருந்து நடந்த சம்பவங்களை ஆவணப்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இக்குழு 30ஆயிரம் சம்பவங்களை ஆவணப்படுத்தியது. இது தவிர, இவ்வாணைக்குழுவின் கொள்கைப் பரப்புக்குள் வராத 16 ஆயிரம் சம்பவங்களும் ஆவணப்படத்தப் பட்டு தேசிய மனித் உரிமைகள் ஆணைக் குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

இக்குழு மனிதஉரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்று பரிந்துரைத்தது. அதற்கமைய கண்துடைப்பு நோக்கத்திற்காக ஓரிரு குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டனர். பெரும்பாலானோர், தண்டனையிலிருந்து தப்பித்தனர். ஆனால், இக்குழவின் பரிந்துரைகள் செயன்முறைப்படுத்தப் படவில்லை என இக்குழுவின் முன்னாள் செயலாளர் ஆ.ஊ.இக்பால் குறிப்பிடுகின்றார். அப்போதைய இராணுவத் தளபதியின் தலையீட்டினால் பரிந்துரைகள் எல்லாம் கிடப்பில் போடப்பட்டன. குற்றவாளிகள் அரச நிறுவனங்களினால் பாதுகாக்கப்பட்டு மீண்டும் அதே பணிக்காக அமர்த்தப்பட்டனர். ஆ.ஊ. இக்பாலின் கருத்துப்படி தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள், கடத்தலையும் காணாமல் போகச் செய்தலையும் நிறுவனமயப்படுத்தி ஏற்புடைமைத் தன்மை கொடுத்து அரசுக்கு எதிரான குரல்களை அடக்க பயன்படுத்திக் கொண்டது.

2006 இல் அரசு, ஜனாதிபதி விசாரணைக்கான ஆணையத்தை உருவாக்கியது. இவ்வாணையம் 15 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பணிக்கப்பட்டிருந்தது. இவ் வாணையத்தை மேற்பார்வை செய்வதற்கென சர்வதேச மூத்தோர் நிபுணர் குழு சுயாதீனமாக இயங்க அனுமதிக்கப் பட்டது. ஆனால், அதன் அறிக்கை இதுவரைக்கும் வெளிப்படவில்லை. மூத்தோர் நிபுணர்குழு, விசாரணை ஆணையம் தொடர்பாகவும், அதன் நேர்மைத் தன்மை, சாட்சிகள் பாதுகாக்கப்படுதல் தொடர்பில் தமது அதிருப்தியை தெரிவித்தது. ஆணையத்தின் வெளிப்படைத் தன்மை இன்மை, அரசியல் தலையீடுகள் காரணமாக தனது சேவைகளை நிபுணர்குழு இடையிலேயே நிறுத்தி பின்வாங்கிக் கொண்டது. வாசுகி நேசையாவின் கருத்துப்படி இலங்கை அரசாங்கங்களினால் உருவாக்கப்படும் இவ் ஆணையங்களின் வரலாறு, அந்தந்தக் காலங்களில் பதவியில் இருந்த அரசும் அரசாங்கங்களும், அதன் நிறுவனங்களும் இவ் ஆணையங்களை தங்களின் அரசியல் இலாபம் கருதி கையாண்டுள்ளதுடன் அரசுக்கு எதிராக எழும் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் அடக்குவதற்கும் பயன்படுத்தியுள்ளது.

மே 2010 இல் இலங்கை அரசு கற்றுக்கொண்ட பாடங்கள், நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. இவ் ஆணைக்குழு இனப்பிரச்சினைக்கான, 2002 போர் நிறுத்தம் முறிவடைந்ததற்கான காரணங்களை அறிய ஜனாதிபதியினால் விதந்துரைக்கப்பட்டிருந்தது. இவ் ஆணைக் குழுவின் செயற்பாடுகள் முற்றிலும் பிழையானவை என பல்வேறு மனித உரிமை அமைப்புக்கள் தங்களது கண்டனத்தை தெரிவித்திருந்தன. அவற்றுள் அம்நெஷ்ரி இன்ரநஷனல், மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகிய அமைப்புக்கள் இலங்கை அரசின் அழைப்பையும் நிராகரித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

போர்க்குற்றம் தொடர்பில் குற்றவாளிகளை விசாரிக்க இவ் ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. மாறாக குற்றவாளிகளை பாதுகாத்துக் கொள்வதற்காக இதன் செயற்பாடுகள் அமைந்ததாக அரசியல் அவதானிகள் குறிப்பிட்டனர். சர்வதேச நெருக்கடிக் குழுமம், இலங்கை அரச நிலைமாறுகால நீதிச் செயற்பாட்டுக்கு தயாரில்லை என பகிரங்கமாக அறிவித்தது. பின், முள்ளிவாய்க்கால் அரசியல் வெளியில் ராஜபக்ச அரசு அதிகாரத்தை குவிவுபடுத்தி மையத்தை நோக்கி நகர்த்தி, ஒன்றுபட்ட இலங்கை என்ற பரப்புரைக்கூடாக சிங்கள பௌத்த தேசிய வாதத்தை முன்னிறுத்தியது. தமிழர்களின் விடுதலைக்கான பிரச்சினையை சிறுபான்மை பிரச்சினையாக மட்டுமே அணுக முயற்சித்தது. அதை ஒரு தமிழ்த் தேசியம் சார்ந்த பிரச்சினையாக நோக்கவில்லை. இலங்கை அரசு போரில் ஒருவரும் இறக்கவில்லை என்று மறுதலிப்பை-மறுப்பை ஒரு பொறிமுறையாக பயன்படுத்தி வருகின்றது.

மே 2009 இற்குப் பின்னர் அரசு மிக முனைப்பாக செயற்படுத்தி வரும் அரசியல் திட்டங்கள், தமிழ் மக்களின் நிலப்பறிப்பு, அரசியல் கைதிகளின் தொடர் தடுத்துவைப்பு, இன்றும் நடைபெற்று வரும் காணாமற்போதல்கள், வன்னிப் பெருநிலப் பரப்பில் கணவர் இன்றி வாழும் பெண்களின் அவல நிலை, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிராகரிக்கப் படும் உளவியல் ஆற்றுப்படுத்தல், வடக்குக் கிழக்கில் இடம்பெற்று வரும் இராணுவ குவிப்பு, சாதாரண வாழ்வில் இடம்பெறும் இராணுவத் தலையீடுகள், நிரந்தர உயர் பாதுகாப்பு வலயங்கள், தமிழ்பெண்களுக்கு இழைக்கப்படும் பாலியல் துன்புறுத்தல்கள் இவை எல்லாமே, இலங்கை நிலைமாறுகால நீதிக்கான வெளி, மூடப்பட்டுள்ள நிலையை எடுத்துக் காட்டுகிறது.

இவ் அரசியல் வெளியில் நான் பின்- நிலைமாறுகால நீதிக் கருத்தியலை முனைவைக்கின்றேன்.

நிலைமாறு கால கட்டமைப்பு ஓரிரு நாடுகளில் மட்டுமே மிகச் சொற்ப பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுத்தது. நீதியைப் பெற்றுக் கொடுத்ததை விட குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கொடுத்தது எனலாம். நிலைமாறு கால நீதிச் செயற்பாடுகளில் பெரும்பாலான முதிர்ச்சி பெறாமலேயே கிடப்பில் போடப்பட்டன, முடக்கப் பட்டன. அத்துடன் தொடர்ச்சியாக நீதி மீளப் பெறுமுறை நிலைமாறுகாலநீதியில் மிகக் குறைவாக காணப் படுவதாக கேத் கொலின்ஸ் கூறுகின்றார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி அடுத்து வரும் அரசாங்கங்களிலேயே தங்கி உள்ளது. இதனால் பாதிக்கப்பட்டவர்களின் நீதி அரசாங்கத்தின் கைகளிலேயே தங்கியுள்ளது. இவ் நிலை மாற வேண்டுமாயின் இன்னொரு நீதிப்பொறி முறை அவசியமாகின்றது. அவ் மாற்றீடான நீதிப் பொறிமுறைக் கருத்தியலாக பின்- நிலைமாறுகால நீதி உருவாகின்றது. இக் கருத்தியல், செயன்முறைக் கட்டமைப்பு இலங்கைக்கு மிகப் பொருத்தமாக உள்ளது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2014

# புதுவருட பலன்கள்

# சிம்மம்

# கன்னி இராகு எண்ணியதை முடித்து வைக்கும்!



**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**கன்னி இராகு எண்ணியதை முடித்து வைக்கும்! கரும்பின் சுவை போன்ற பேச்சும், எறும்பின் சுறுசுறுப்பும் கொண்டு இயங்கும் சிம்ம இராசி நேயர்களே!**

புதிய வருடம் பிறந்திருக்கிறது. பொன்னான வாய்ப்புகள் உங்களுக்கு வந்து சேரப்போகிறது. புதிய முயற்சிகளில் எல்லாம் வெற்றி கிடைக்கும் விதத்தில் கிரக நிலைகள் உலா வருகின்றன. புகழேணியின் உச்சிக்கு செல்ல இருக்கிறீர்கள்.

இந்தப் புதுவருடத்தின் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் 5-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு தனாதிபதி புதனும், விரயாதிபதி சந்திரனும் இணைந்திருக்கிறார்கள். அந்த ஸ்தானத்தைக் குரு பார்க்கிறார். எனவே வருடத் தொடக்கத்திலேயே வருமானம் அதிகரிக்கும். என்றாலும் வந்த மறுநிமிடமே செலவாகிவிடலாம்.

யோகம் தரும் செவ்வாய் 2-ல் சஞ்சரிப்பதால் இடம், பூமியால் லாபம் கிடைக்கும். மறைமுகப் பகை மாறி மகிழ்ச்சியை விளைவிக்கும். அரசியல் மற்றும் பொது

**சிவல்புரி சிங்காரம்**

நலத்தில் இருப்பவர்களுக்கு அதிகப் பொறுப்புகள் வந்து ஆட்கொள்ளும்.

நினைத்தால் நினைத்த காரியத்தை உடனடியாக செய்ய வேண்டுமென்று சொல்வீர்கள். முன்கோபம், உங்கள் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாகவும் இருக்கும்.

இப்படிப்பட்ட குணாதிசயங்களைக் கொண்ட உங்களுக்கு சுய ஜாதகத்திலுள்ள கட்டங்களையும், 2014-ம் ஆண்டு புத்தாண்டு கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து பலன்களை துல்லியமாக அறிந்துகொள்ளலாம்.

**1.1.2014 முதல் 12.6.2014 வரை**

வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன், தனாதிபதி புதனுடன் இணைந்து 5-ம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். தொழிலில் மேன்மை உண்டு. தொல்லை தரும் எதிரிகள் விலகுவர். பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் பெருகும்.

விரயாதிபதியாக விளங்கும் சந்திரன் வருடத்தொடக்க நாளில் 5-ம் இடத்தில் சஞ்சரித்து குருவால் பார்க்கப்படுகிறார். எனவே, நீண்டநாட்களாக முடிவடையாத சுபகாரியப் பேச்சுக்கள் இப்பொழுது திடீரென முடிவாகும்.

தொழில் ஸ்தானாதிபதி வக்ரம் பெற்றிருப்பதால் தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். இதுவரை ஏமாற்றத்தையே அறிந்திராத நீங்கள் இப்பொழுது ஏமாற்றம் காண நேரிடும். பெண் வழிப் பிரச்சினைகள் தலை தூக்கும்.

உடன்பிறப்புகள் ஏறுக்கு மாறாகப் பேசி இதயத்தை வாட வைக்கலாம். தொழில் கூட்டாளிகளை விலக்கிவிட்டு, புதியவர்களைச் சேர்க்க முன்வருவீர்கள். சொத்துக்களால் ஆதாயம் கிடைக்கும் நேரமிது.

வருடத்தொடக்கத்திலேயே சகாய ஸ்தானத்தில் ராகுவும், பிதுரார்ஜித ஸ்தானத்தில் கேதுவும் இருப்பதால் ஏற்றமும், இறக்கமும் இருக்கும்.

உங்கள் வாழ்க்கை எப்பொழுதும் ஒரே மாதிரியாக உயர்நிலையில் இருக்க அனுகூலம் தரும் அரவுகிரக கோவில்களைத் தேர்ந்தெடுத்து, எண்ணங்களை நிறைவேற வைக்கும் இனிய நாட்களில், பரிகாரங்களைச் செய்து வந்தால் பலன் கிடைக்கும்.

**விருச்சிக சனியின் சஞ்சாரம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 3-ம் இடத்தில் சஞ்சரித்து வந்த சனிபகவான் இந்தப் புதுவருடத்தில் அர்த்தாஷ்டம சனியாக அடியெடுத்து வைக்கிறார். 6-க்கு அதிபதி மற்றும் 7-க்கு அதிபதியாக விளங்கும் சனி நான்கில் சஞ்சரிக்கும்பொழுது, கொஞ்சம் கூடுதலாக கவனத்துடன் செயற்படுவது நல்லது. ஆரோக்கியத்தில் அதிக தொல்லைகள் உருவாகும். வருமானப் பற்றாக்குறை அதிகரிக்கும்.

தொழிலில் நண்பர்களால் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். குடும்ப பிரச்சினைகள் அதிகரித்து மனநிம்மதியின்மை ஏற்படுகிறதே என்று நினைத்து கவலைப்படுவீர்கள். பொருளாதாரத்தில் சரளமானநிலை இருந்தபோதும், வாங்கிப்போட்ட சொத்துக்களை எல்லாம் இப்பொழுது விற்பனை செய்ய முன்வருவீர்கள். வரவைக் காட்டிலும், செலவு கூடும் இந்த நேரததில் வாகனங்களையும் மாற்றிக்கொள்வது நல்லது. வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் நிலையங்களை வேறு இடத்திற்கு மாற்ற முன்வருவீர்கள்.



**குரு மற்றும் சனியின் வக்ர காலங்கள்!**

புத்தாண்டில் குருவும் வக்ரமாகிறார், சனியும் வக்ரமாகிறார். இந்த வக்ர இயக்கத்தால் நன்மையும், தீமையும் கலந்தே நடைபெறும். இரண்டு கிரகங்களும் இரண்டு இடத்து ஆதிபத்தியங்களையும் கொண்டிருப்பதால் ஒன்றின் மூலம் நற்பலன்கள் கிடைக்கும். மற்றொரு ஆதிபத்யம் சிறப்பாக இயங்க வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். பொதுவாக குடும்ப ஒற்றுமை குறையலாம். குடியிருக்கும் வீட்டால் பிரச்சினைகள் உருவாகலாம். பிள்ளைகள் உங்கள் சொல்லை மீறி எதுவும் செய்யலாம். தொழிலில் புதிய பங்குதாரரர்களை இணைத்துக் கொள்வீர்கள்.

**சிம்ம இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்தப் புதுவருடம் உங்களுக்கு எல்லா வகையிலும் வளர்ச்சியைக் கொடுக்கும். நல்ல வாய்ப்புகள் நாளும் வந்து சேரும். குழந்தைச் செல்வங்களால் பெருமை ஏற்படும். கொடுக்கல்-வாங்கல்கள் திருப்திகரமாக இருக்கும். உச்ச குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 4-ம் இடமான சுக ஸ்தானத்தில் பதிவதால் ஜூன் 13 முதல் சுகங்களும், சந்தோஷங்களும் அதிகரிக்கும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். தடைகள் அகலும். உங்கள் சொல்லுக்கும், செயலுக்கும் மரியாதை கிடைக்கும். தலைமைப் பதவிகள் முதல் தக்கவிதத்தில் பொது நல வாழ்வில் புகழ்கூடும்.

ஆண்டின் கடைசியில் சனிப் பெயர்ச்சிக்குப் பின்னால் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய நேரமாக அமைகிறது. எதிர்பாராத விரயங்கள் அதிகரிக்கும். எடுத்த காரியத்தில் எதிரிகளின் குறுக்கீட்டால் தடைகள் உருவாகும். வருடத் தொடக்கத்தில் குடும்ப ஒற்றுமை பலப்பட்டாலும், வருடக்கடைசியில் விட்டுக் கொடுத்துச செல்வதன் மூலம் உங்கள விருப்பங்கள் நிறைவேறும். கணவன-மனைவிக்குள் கருத்து வேறுபாடு ஏற்படாமலிருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. வைரவர் வழிபாடு, முறையான சர்ப்ப சாந்தியும் செய்தால் உங்கள் வளர்ச்சிக்கு வழிகாட்டும்.

**நலம் தரும் ராகு-கேது பெயர்ச்சி!**

இதுவரை 3-ம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு, இந்த புதுவருடத்தில் தன ஸ்தானம் எனப்படும் 2-ம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். எனவே ஜூன் 21-ம் தேதிக்கு மேல் சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள். சுற்றத்தார் போற்றுமளவு முன்னேற்றம் வந்து சேரும். செல்வந்தர்களின் வரிசையில் இடம்பிடிப்பீர்கள். செல்வாக்கும் அதிகரிக்கும்.

கடன்களை எல்லாம் கொடுத்துவிட்டு கண்ணியமாக வாழ வேண்டுமென்று விரும்புவீர்கள். நாளும், பொழுதும் நல்ல தகவல்கள் வந்து கொண்டேயிருக்கும். படிப்பிற்கேற்ற வேலை கிடைக்கவில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு திட்டமிட்டபடியே வேலை கிடைக்கும்.

கேதுவின் பலத்தால் அலைச்சல் அதிகரிக்கலாம். அஷ்டமத்து கேது என்பதால் ஆதாயம் கொஞ்சம் குறைவாகவே இருக்கும். மனதில் இனம் புரியாத கவலை மேலோங்கும். தெய்வத் திருப்பணிகளுக்கு அள்ளிக் கொடுப்பீர்கள். கடல் தாண்டும் முயற்சிகளை ஒத்தி வைப்பது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகாரிகளின் தொல்லையால் அடிக்கடி இடமாற்றம் ஏற்படும். முன்னேற்றத்தை முறையாக வரவழைத்துக் கொள்ள ராகு-கேதுக்களுக்கு பரிகாரம் செய்வது நல்லது.

**குருப் பெயர்ச்சிப் பலன்கள்!**

புதுவருடத்தில் குரு உங்கள் ராசிக்கு 12-ம் இடத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கப் போகிறார். விரய ஸ்தானத்தில் உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வரவைக் காட்டிலும் செலவு கூடும்.

பஞ்சம, அஷ்டமாதிபதியான குரு உச்சம் பெறும் பொழுது பிள்ளைகளுக்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. எனவே, அவர்களின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். அயல்நாடு சென்று படிப்பைத் தொடர விரும்பும் பிள்ளைகளுக்கு பெரும் தொகையொன்று செலவிட வேண்டிய சூழ்நிலை சிலருக்கு ஏற்படும். திருமண வயதடைந்த பெண் பிள்ளைகளுக்கான கல்யாணப் பேச்சுக்கள் கைகூடும்.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவ



தால் குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். மக்கட் செல்வங்களால் உதிரி வருமானங்கள் பெருகும். அந்நிய தேசத்திலிருந்து அனுகூலச் செய்திகள் வந்து சேரும். இடம், பூமி வாங்கியதில் இருந்த பத்திரப் பதிவில் ஏற்பட்ட தடைகள் அகலும்

கடைதிறப்பு விழாக்களும், கட்டடத் திறப்பு விழாக்களும் செய்து மகிழ்வீர்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் முறையாக வந்து சேரும்.

சென்ற சில மாதங்களாக செயற்பாடுகளில் கிடைக்காத வெற்றி இப்பொழுது கிடைக்கத் தொடங்கும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். உற்சாகத்தோடு ஒவ்வொரு நாளும் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**செல்வவளம் தரும் சிறப்பு வழிபாடு!**

ராசிநாதன் சூரியன் என்பதால் ஞாயிறு தோறும் உமாமகேஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பௌர்ணமியன்று கிரிவலம் வருவதும் நன்மை தரும். பிறந்த திகதி அடிப்படையில் சிறப்பு வழிபாட்டை மேற்கொள்வதோடு வைரவரையும், வளரொளி நாதர், வடிவுடையம்மனையும் வழிபட்டு வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

நாளை கன்னி....


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசு மக்களின் பணத்தை முறைகேடாக பெறுகின்றது

## அனுரகுமார எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

வரி மற்றும் அபராதங்களை விதித்து மக்களின் பணத்தை முறைகேடாக பெறும் இந்த அரசாங்கம், ஆட்சியாளர்களின் புதல்வர்களின் ஆடம்பர வாழ்க்கைக்காக சில வற்றுவரி விலக்களிப்பதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.



மாத்தறை பொல்ஹேன பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் ஆட்சியை மாற்ற வேண்டிய காலம் வந்துள்ளது. இம்முறை கொண்டு வரப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் வரி அறவீடுகள் அதிகரிக்கப்பட்டுளன. தொலைபேசி கட்டணங்கள், கொத்தமல்லி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு வரி அறவிடப்பட்டுள்ளது. உலக நாடுகளில் இப்படி உணவுப் பொருட்களுக்கு எந்த நாடுகளும் வரி விதிப்பதில்லை.

மக்களுக்கு இவ்வாறு வரிகள் விதிக்கப்படும் போது, சிலவற்றுக்கு வரி விலக்கு வழங்கின்றனர். நவம்பர் மாதம் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட போது, 19 பந்தயக் கார்கள் கொழும்பு துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டன.

இந்த பந்தயக்கார்கள் துறை முகத்திற்கு வந்த பின்னர் தந்தை, மகனின் பந்தயக்கார்களுக்கு வரி விலக்கு வழங்கினார்.

சாதாரண மக்கள் அனுமதிப் பத்திரம் இல்லாமல் வாகனங்களை வீதியில் ஓட்ட முடியாது. ஆனால் பந்தயக்கார்களுக்கு இவை தேவையில்லை.

அது மட்டுமல்ல பணம் செலுத்தி மேற்கொள்ளப்படும் சகல களியாட்டங்களுக்கும் வரி செலுத்தப்பட வேண்டும். ஆனால் கொழும்பு நகரில் நடந்த கார்ப் பந்தயத்திற்கு களியாட்டு வரிக்கான விலக்கு அளிக்கப்பட்டது.

இந்த கார்ப்பந்தயத்திற்கான அனுமதிச் சீட்டுக்கள் ஆயிரம் முதல் 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செயய்ப்பட்டன. ஆனால் அதற்கு வரி விலக்கு வழங்கப்பட்டது என்றார். (அ-2)

# இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராக அதிகமுறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் பொலிஸாருக்கு எதிராகவே அதிகளவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டில் 7 ஆயிரத்து 765 முறைப்பாடுகள் ஆணைக் குழுவிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இவற்றில் 80 வீதமான முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்தி பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன.

அவற்றில் முறைப்பாடுகளை விசாரணை செய்யாமை, துன்புறுத்தல்கள, சட்டவிரோத கைது, தடுத்து வைத்தல்கள் போன்றன. தொடர்பில் அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அதற்கு அடுத்தபடியாக கல்வித்துறையைச் சார்ந்தவர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறிப்பாக கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்கு எதிராக இவ்வாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன. (அ-2)


# விருது வழங்கி கௌரவம்

இரணைமடு கனகாம்பிகை அம்மன் பெருங்கோயிலில் பத்து நாட்கள் திருவெண்பாவை பூசையும் திருவாதவூர் அடிகள் புராண படன உரையும் நடத்தேறின.

இதன்போது பத்துநாட்களும் புராண படன உரை நிகழ்த்திய அப்பாக்குட்டி ஐயம்பிள்ளை என்பவரை வாதவூர் வாருதி என்னும் சிறப்புப்பட்டமளித்து அறங்காவலர் சபை முதன்மையாளரும் கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன லாகா பிரதி பொறியியலாளர் சுதாகரன் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

இவர் கண்டாவளை பெரியகுளம் கண்ணகை அம்மன் ஆலய பரிபாலன சபை தலைவரும் ஓதுவாரும் கவிஞரும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)







வதிரி தமிழ் மன்றத்தின், முன்பள்ளியின் பரிசளிப்பு தினமும் கலை விழாவும் அண்மையில் தமிழ்மன்ற முன்றலில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்தியங்கள் சகிதம் அழைத்துவரப்படுவதையும் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் சிறார்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்: மானிப்பாய் செய்தியாளர்)

# தமிழர்கள் வாழ்வு புத்தொளிபெற புதிய ஆண்டில் கடுமையாக உழைப்போம்

## பொன்விழா நிகழ்வில் சிறிதரன் எம்.பி.உரை

தமிழர்களின் வாழ்வில் 2014 ஆம் ஆண்டு புதிய பாதையைத் திறக்கட்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் பொன் விழா ஆரம்ப நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் இ.தேவசகாயம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்,

இறை மகனாக உதித்த இயேசுவுக்கு இறை அந்தஸ்து வழங்கப்பட்டதன் நோக்கம் மானிடர்களின் விடுதலைக்காக போராடிய முதல் மனித உரிமைப் போராளியாக அவர் பார்க்கப்பட்டிருப்பதுதான்.

மாந்தர்கள் எப்போதும் நினைப்பது நாளைய நாள் சிறப்பாக அமைய வேண்டுமென்று. ஆனாலும் அந்த நாளை நன்றாக ஆக்க வேண்டுமென்பதற்கான எமது முயற்சி சற்றுக் குறைவாகத்தான் இருக்கிறது.

இதற்குச் சிறந்த உதாரணமாக அமெரிக்காவின் பிரபல வழக்குரைஞரும் பிரதம நீதியரசர்களில் ஒருவராக இருந்த ஜிப்றி என்பவர் தமது சுய சரிதையில் அதிர்ஷ்டவசமானது ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் தேடி வரும் என்பதைவிட நாம் அதிர்ஷ்டத்தினை அடையும் பொருட்டு உழைக்க வேண்டும். ஒவ்வொருமுறையும் என் சிவந்த குழி விழுந்த கண்களால் சட்டப்புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கும் பொழுது அதிர்ஷ்டம் என்னைத் தேடி வந்திருக்கிறது என்று கூறுகின்றார்.

அவர் கூறியது போல அதிர்ஷ்டங்களை நாம் தேடிப்போக வேண்டுமே தவிர அதிர்ஷ்டங்கள் எம்மைத் தேடிவரும் என வேறுமனே இருப்பதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை.

இதற்காக நாம் பல இடர்களை, பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி வரலாம். பிரச்சினைகளை எதிர்கொண்டு வாழும் மனப்பாங்கு, பக்குவம், துணிச்சல் ஆகியவற்றை எதிர்கொள்வதற்கான தத்துவங்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மனித உள்ளங்களைத் துல்லியமாக ஆராய்ச்சி செய்த காப்மேயரின் நூல்களை வாசித்தறிவதன் மூலம் உலகை வெற்றி கொள்ளக் கூடிய தத்துவங்களை அறிந்து கொள்ளலாம்.

அதன்படி நாங்கள் இந்த உலகை வெல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். கடந்தகால ஆண்டுகளின் துன்ப துயரங்களை மனதில் வைத்திருப்பதை விட அவற்றை ஒரு பாடமாகக் கொண்டு எதிர்வரும் ஆண்டுகளை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும்.

துன்பங்கள் எமது தலைக்கு மேலாகப் பறக்கின்ற கழுகுகள் போன்றன. அக் கழுகுகள் எமது தலைகளில் கூடு கட்டுவதை நாம் அனுமதிக்க முடியாது.

எமது தமிழினம் இவ்வளவு காலமும் பட்டுவந்த துன்பங்கள், துயரங்களுக்கு 2014 ஆம் ஆண்டு ஒரு வடிகாலாக அமைய வேண்டும். அதற்காக நாம் எல்லோரும் உழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அமெரிக்க மிஷன் சபையைச் சேர்ந்த தேவராஜ் அடிகள், ஜெகதீஸ்வரக் குருக்கள், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் கைலாய பிள்ளை, பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஜஸ்ரின், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் துரைராஜா, பொது மக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (செ-4)

# சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட சிறைக்கைதிகள் தப்பியோட்டம்

மகர சிறைச்சாலையின் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரண்டு கைதிகள் சிறைச்சாலை அதிகாரி ஒருவரின் முச்சக்கர வண்டியை பயன்படுத்தி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

கொழும்பு தெமட்டகொட பிரதேசத்தை சேர்ந்த போதைப் பொருள விற்பனையுடன் சம்பந்தப் பட்ட கைதியும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய கைதியும் இவ்வாறு தப்பிச் சென்றவர்களாவர்.

நீதிமன்றத்தினால் இவர்கள் இருவருக்கும் தண்டனை விதிக்கப்பட்டிருந்து.

தப்பிச் சென்ற போதைப் பொருள் விற்பனையுடன் தொடர்புடைய குற்றவாளி மிகவும் சிரமப்பட்டு கைது செய்யப்பட்டவர் என்பதால், கடும் பாதுகாப்பில் அந்த நபர் வைத்திருக்கபட வேண்டும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருந்தார்.

இந்நிலையில் இந்த கைதிகள் கடந்த 30 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு தப்பிச் சென்றிருந்ததுடன் அவர்கள் தப்பிச் சென்றது குறித்த தகவல் மாலை 4 மணிக்கே அதிகாரிகளுக்கு தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் சிறைச் சாலைகள் ஆணையாளர் சந்திரரத்ன பல்லேகமவின் உத்தரவின் பேரில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படடுள்ளன. (அ-2)

# திருச்சி சிறப்பு முகாமில் ஈழத்தமிழர்கள் போராட்டம்

(திருச்சி)

திருச்சி சிறப்பு முகாமில் அடிப்படை வசதிகள் செய்து தருமாறு கோரி பல அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உள்ளிருப்பு போராட்டம் ஒன்றுமுகாம் வாசிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த போராட்டம் கடந்த 28 ஆம திகதி ஆரம்பிக்கப்பட்டது.

சிறையில் உள் பகுதியில் உள்ள இரும்புக் கதவை மூடிவிட்டு அனைத்து ஈழத்தமிழர்களும் வெயில் என்றும் பாராமல் அங்கேயே அமர்ந்து உள்ளார்கள்.

மாவட்ட ஆட்சியர் நடராஜன் அவர்கள் வந்து பேச்சுவார்த்தை நடத்தி தோல்வியில் முடிந்ததால் ஈழத்தமிழர்கள் தமது கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் நீடிக்கும் என்று அறிவித்துள்ளனர்.

இன்று வரை ஈழத் தமிழர்களின் போராட்டம் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

எனினும் தமிழக அரசு வழக்கம் போல் சிறப்பு முகாம் தமிழர்கள் விடயத்தில் அலட்சியமே காட்டுகிறது. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரும்பு உற்பத்தி என்ற பெயரில் காணிகளை சுவீகரிக்க திட்டம்!

(கொழும்பு)

**கரும்புச் செய்கை என்ற பெயரில் வடக்கில் 71 ஆயிரத்து 716 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இது திட்டமிட்ட சதியாகும். இதனை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் வடக்கு, கிழக்கில் காணிகளை சுவீகரித்து வருகின்றது. இராணுவத் தேவைக்கென ஒரு பக்கமும் அபிவிருத்திக்கென மறுபக்கமும் காணிகள் திட்டமிட்ட வகையில் சுவீகரிக்கப்படுகின்றன. இதனை நாம் கடுமையாக கண்டிக்கின்றோம்.

கரும்பு உற்பத்தி என்ற பெயரில் அரசாங்கம் மேற்கொள்ளும் சுவீகரிப்பு திட்டத்தை உடனடியாக கைவிடவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கரும்பு உற்பத்தியை மேற்கொள்வதற்கென வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் 71 ஆயிரத்து 716 ஏக்கர் காணிகளை சுவீகரிப்பதற்கான அமைச்சரவைப் பத்திரம் இன்று சீனிக்கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் லக்ஷ்மன் செனவிரட்னவினால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்தபோதே சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

வடமாகாணத்தில் வயல் செய்கை நிலங்களும், மேட்டுநிலப்பயிர்செய்கை நிலங்களும்,' காடுகளுமே காணப்படுகின்றன. வடக்கில் 71 ஆயிரத்து 716 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரசாங்கம் சுவீகரிக்க முயல்கின்றது. கரும்பு உற்பத்தி என்ற பெயரில் தன்னிச்சையாக இந்தச் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபடுகின்றது.

வடக்கில் இராணுவத் தேவைக்கென பெருமளவான காணிகள் அபகரிக்கப்பட்டு வருகின்றது. இதேபோல் அரசாங்கமும் அபிவிருத்தி என்ற பெயரில் காணிகளை சுவீகரித்து வருகின்றது. மொத்தத்தில் காணி அபகரிப்பே இங்கு இடம் பெறுகின்றது.

கரும்புச் செய்கைக்கென காணி சுவீகரிப்பது தொடர்பில் வடக்கு மாகாண மக்களின் பிரதிநிதிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடவில்லை. இவ்வாறு கலந்துரையாடாது காணிகளை சுவீகரிக்க முயல்வது முற்றுமுழுதான தவறான செயற்பாடாகும்.

இவ்வாறான சுவீகரிப்பு அரசாங்கத்தின் திட்டமிட்ட காணிக்கொள்ளை முயற்சி யாகும். இங்கு கரும்பு உற்பத்தி செய்வதானால் அதற்குரிய மண்வளம் உள்ளதா? அதற்குப் போதுமான நீர்வளம் உள்ளதா என்பது குறித்து ஆராயவேண்டும். இத்தகைய ஆராய்ச்சிகள் எதனையும் நடத்தாது திட்டமிட்ட வகையில் காணிகளை சுவீகரிக்க முயல்வது அரசாங்கத்தின் நில ஆக்கிரமிப்பேயாகும்.

அரசாங்கத்தின் இந்த சுவீகரிப்பு செயற்பாட்டிற்கு கடும் கண்டனங்களைத் தெரிவிக்கின்றோம். இந்த முயற்சியானது திட்டமிட்ட சதியாகும். இதனை அனுமதிக்க முடியாது என்று தெரிவித்தார்.

இது தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி ஊடகப் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் தெரிவிக்கையில்,

யுத்தம் முடிவடைந்து நான்கு ஆண்டுகளாகியும் இன்று வரையில் வடக்கில் பல்லாயிரககணக்கான மக்கள் இருப்பிடங்களின்றி வாழ்கின்றனர். இராணுவ முகாம்களும் அரசாங்கத்தின் கட்டடங்களுமே இன்று வடக்கில் காணக்கூடியதாக உள்ளன.

இவற்றினை கவனத்தில் கொள்ளாத அரசாங்கம் இன்று கரும்பு உற்பத்தியென்ற பெயரில் பொதுமக்களின் இடங்களை அபகரிக்க நினைக்கின்றது.

அரசாங்கம் உற்பத்திகளையும் அபிவிருத்திகளையும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றதே தவிர இவற்றில் மக்களுக்கு எவ்வித நன்மைகள் கிடைத்ததாகத் தெரியவில்லை. நாட்டில் விலையேற்றமும் பொருளாதாரச் சிக்கல்களும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

பொது மக்களுக்கு காணிகளை வழங்காது தமது அர்த்தமற்ற செயற்பாடுகளுக்காக உற்பத்தியென்ற பெயரில் காணிகளை அபகரிப்பது அரசாங்கத்தின் சுயநலப் போக்கினை வெளிப்படுத்துகின்றது.

போர்க் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் என சர்வதேச விசாரணைகளுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க தயாராகி வருகின்றது.

இந்நிலையில் உள்நாட்டுப் பிரச்சினைகளை தீர்த்து நாட்டில் அமைதியினை ஏற்படுத்த வேண்டும். அதைவிடுத்து அரசாங்கம் தொடர்ந்தும் உள்நாட்டில் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருமானால் அது ஆட்சியினையே பாதிக்கும்.

இது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவிக்கையில்.

வட மாகாணத்தில் கரும்பு உற்பத்தி திட்டத்தினை அரசாங்கம் மேற்கொள்ளவுள்ளதாக குறிப்பிட்டுள்ளது. அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வடக்கில் 71.716 ஹெக்டெயர் காணிகளை அரசாங்கம் பெற்றுக்கொள்ள தீர்மானித்துள்ளது.

வடக்கில் இவ்வாறானதொரு திட்டத்தினை செய்வதாயின் வடக்கு மக்கள் அதிகளவில் உள்ளக்கப்பட வேண்டும். அவர்களின் காணிகளை வாங்கி வேறு பகுதியினர் பயிர்ச்செய்கைகளை செய்யக்கூடாது.

கிழக்கில் முஸ்லிம் மக்களின் நிலங்களில் கரும்பு உற்பத்திகளை மேற்கொண்டு இன்று அவை அரசாங்கத்தின் தரிசு நிலங்களாக மாறிவிட்டன.

சிங்களவர்களை வைத்து விவசாயங்களை மேற்கொண்டனர். இதனால் கிழக்கில் உள்ள பெரும்பாலான முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டதோடு இன்று வரையில் அவர்களுக்கான தீர்வோ அல்லது முஸ்லிம்களின் நிலங்களோ கையளிக்கப்படவில்லை.

இதே நிலைமை வடக்கிலும் ஏற்பட்டு விடக்கூடாது. பல்லாயிரக்கணக்கான நிலப் பரப்புகளில் அரசாங்கம் பயிர்ச்செய்கைகளை செய்வதென்பது அரசாங்கத்தின் திட்டமாக இருக்கலாம்.

ஆனால் அப்பகுதி மக்கள் அந்த நிலங்களை நம்பியே வாழ்கின்றனர் என்பதை அரசாங்கம் மறந்து விடக்கூடாது.

இன்று வடக்கில் ஏராளமான பிரச்சினைகள் காணப்படுகின்றன. முதலில் அவற்றிற்கான தீர்வுகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் இவ்வாறான வேலைத் திட்டங்களை செய்து சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்குமாயின் உடனடியாக அவற்றை தடுத்து நிறுத்த வேணடும். வடக்கு கிழக்கில் மட்டுமே இன்று சிறுபான்மை ஆதிக்கம் காணப்படுகின்றது.

இங்கு மட்டுமே எமது உரிமைகளை செயற்படுத்த குரல் கொடுக்க முடியுமாகவும் உள்ளது. எனவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்திலும் எமது பிரதிநிதித்துவத்தை இழக்கும் வகையில் அரசாங்கம் செற்படக் கூடாது.

இவ்விடயத்தில் வடக்கின் அரசியல் தலைமைகளும் மக்களும் எச்சரிக்கையாக செயற்பட வேண்டும். தமது உடைமைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## இலங்கைக்கு இம்மாதம் முதல் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை



இலங்கைக்கு இந்த மாதம் முதல் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையின் பலன்கள் கிடைக்கும் என கைத்தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியூதீன் தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி முதல் அடுத்த 10 வருடங்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த வரிச் சலுகை இலங்கைக்கு கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

ஜீ.எஸ்.பி வரிச் சலுகையின் புதிய திட்டத்திற்கு அமைய சிறிய மற்றும் நடுதர கைத்தொழில் உற்பத்தி ஏற்றுமதியாளர்கள் பயனடைய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியம் உலகில் மிகப் பெரிய வர்த்தக மற்றும் பொருளாதாரத்தை கொண்டுள்ள பிராந்தியமாகும். 80 க்கு குறையாத நாடுகள் இலங்கையின் வர்த்தக பங்களிகளாக உள்ளன.

இதில் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையின் மிகப் பெரிய வர்த்தக பங்காளியாக இருப்பதுடன், இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு தெளிவான சந்தையாக திகழ்கிறது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ-2)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 3[illegible]
021 5[illegible]552

## அரசு பிரசார நோக்கங்களுக்காக பில்லியன் கணக்கில் செலவு

### எரான் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)


அரசாங்கம் பிரசார நோக்கங்களுக்காக பல பில்லியன் ரூபாவினை செலவிட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ன தெரிவித்துள்ளார்.

எனினும், வளிமண்டலவியல் திணைக்களத்தை மேம்படுத்த இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலநிலை சீர்கேட்டினால் 1.6 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், அரசாங்கம் தனது பிரசாரத்திற்காகவே பணத்தை செலவிட்டு வருவதாகவும், மக்களின் நலனுக்காக பணத்தைச் செலவிடத் தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் ஒரு பில்லியன் ரூபாவை செலவிட



தயக்கம் காட்டி வருகின்றமை வருத்தமளிக்கின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலநிலை மாற்றங்கள் தொடர்பில் துல்லியமான தகவல்களை வழங்குவதன் மூலம் மக்களுக்கு ஏற்படக் கூடிய பாரிய அழிவுகளையும் சேதங்களையும் தவிர்க்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

காலநிலை மாற்றங்களை கண்டறிந்து கொள்ள நவீன இயந்திர சாதனங்கள், கருவிகள் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நான்கு கிராமங்களுக்கு கிராமசேவகர்கள் இல்லை

(பூநகரி)

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் காணப்படுகின்ற கிராமசேவையாளர் வெற்றிடங்களை நிரப்புமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரதேசத்தில் மொத்தமாக 19 கிராம சேவையாளர் பிரிவுகள் காணப்படுகின்றன. இவற்றில் 4 கிராமசேவையாளர் பிரிவுகளில் கிராமசேவையாளர் இன்மையால் மக்கள் அன்றாடம் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மட்டுவில் நாடு மேற்கு, ஞானிமடம், கௌதாரிமுனை ஆகிய பிரிவுகளுக்கு கே-66 கிராம சேவையாளரான ச.தவராசாவும் கொல்லகுறிச்சி, ஆலங்கேணி, நல்லூர் ஆகிய பிரிவுகளுக்கு தி.சுப்பிரமணியம் என்ற கிராமசேவையாளருமாக 2பேர் மாத்திரமே பணியாற்றி வருகின்றனர்.

இதனால் வீட்டுத் திட்டப் பயனாளிகள் வேறு தேவையை நாடி அலுவலகத்திற்கு வருகின்ற மக்கள் சேவையைப் பெற சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் கிராமசேவையாளர் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய ஆவன செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-84)

# குடிநீர் வழங்கப்படாமையை கண்டித்து ஆர்ப்பாட்டம்

(குருமன்காடு)

குடிநீர் வழங்கப்படாமையினை கண்டித்து முசலி பிரதேச சபைக்கு முன்னால் வெளிமலை கிராம மக்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச சபையினால் கடந்த ஐந்து நாட்க ளாக குறித்த பிரதேச மக்களுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், குடிநீர் பிரச்சினை தொடர பாக பலமுறை பிரதேச சபை செயலாளரிடமும் பிரதேச சபை உறுப்பினர்களினதும் கவனத்திற்கு கொண்டு வந்தும் இது தொடர பாக யாரும் கரிசனை கொள்ளாமையினால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் இருந்து அயல் கிராமங்களுக்கு நீர்த்தாங்கிகள் ஊடாக குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. இருந்தும் பிரதேச சபையில் கடமையாற்றும் சில ஊழியர்களின் அசமந்தப் போக்கினால் கிராம மக்களுக்கு நீர் வழங்குவதில் தாமதம் ஏற்படுகிறது என மக்கள் ஆர்ப்பாட்டத்தின் போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

பின்னர் இவ்விடயம் குறித்து பிரதேச சபை தவிசாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து இப்பிரச்சினைக்கான தீர்வை வெகுவிரைவில் பெற்றுத் தருவதாக பிரதேச சபை தவிசாளார் உறுதியளித்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றுள்ளனர். (அ-9-250)

# ஆசிரியர் விடுதிகளை அமைக்குமாறு வெளிமாவட்ட ஆசிரியர்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, துணுக்காய் கல்விக்கோட்டத்திலுள்ள அதிகமான பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் இதுவரை அமைக்கப்படாமையினால் தாங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக வெளிமாவட்ட ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு , துணுக்காய் கல்விக்கோட்டத்தில் பல பாடசாலைகள் உள்ளபோதும் இவற்றில் கூடுதலான பாடசாலைகளில் ஆசிரியர் விடுதிகள் இதுவரை அமைக்கப்படவில்லை.

இதனால் இப்பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அத்தோடு கோட்டைகட்டியகுளம் அ.த.க பாடசாலை, தென்னியன்குளம் அ.த.க.பாடசாலை, உயிலங்குளம் அ.த.க பாடசாலை, ஆலங்குளம் அ.த.க பாடசாலை உள்ளிட்ட பாடசாலைகளுக்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் சீரின்மையாலும் தாங்கள் சிரமங்களை எதிர்கொள்வதாக வெளிமாவட்ட ஆசிரியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்டோர் இதற்கு இவ் விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஆசிரியர்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர். (அ-9-250)

# ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 892 பேர் 2013 ஆம் ஆண்டில் மீள் குடியமர்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து யுத்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்கள், உறவினர் வீடுகளில் 2009 இலிருந்து 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டவர்களின் விபரங்களை மாவட்ட செயலகம் அறிவித்துள்ளது.

இதன்படி 39 ஆயிரத்து 913 குடும்பங்களைச்சேர்ந்த ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 892 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்.

இவர்களில் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகத்தில் 12 ஆயிரத்து 742 குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்து 611 பேரும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் 11 ஆயிரத்து 914 குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 796 பேரும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் 5 ஆயிரத்து 585 குடும்பங் களைச் சேர்ந்த 18 ஆயிரத்து 288 பேரும் துணுக்காய் பிரதேச செயலகத்தில் 3 ஆயிரத்து 630 குடும்பங்களைச் சேர்ந்த 11 ஆயிரத்து 355 பேரும் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் 2 ஆயிரத்து 706 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 653 பேரும் மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்தில் 3 ஆயிரத்து 336 குடும்பங்களைச்சேர்ந்த 11 ஆயிரத்து 189 பேரும் சொந்த இடத்தில் 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். (அ-9-267)

# கடற்தாவரம் நாட்டப்பட்டது



(முல்லைத்தீவு)

தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு மாவட்ட செயலகமும் மாவட்ட விமானப் படையும் இணைந்து வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் அருகாமையிலுள்ள நந்திக்கடலோரமாக கடற்தாவரங்கள் நாட்டப்பட்டுள்ளன.

கொக்கிளாய் கடல் நீரேரியிலிருந்து கொண்டு வரப்பட்ட RHIZOPORA என்ற கடற்தாவரமே நாட்டப்பட்டுள்ளது.

இதனூடாக கடற்கரை பிரதேசம் இயற்கை அழகினைப் பெறுவதுடன் கடல்நீர் கிராமங்களுக்குள் உட்புகாமல் தடுப்பதற்கும் மீனினங்களின் பெருக்கத்தை அதிகரிக்க குறித்த கடற்தாவரம் பயனளிக்குமெனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இப்பகுதியில் 3 ஆயிரம் கடற்தாவரங்கள் நாட்டப்பட்டுள்ளன. (அ-9-267)

# கிளி.மாவட்ட செயலக கட்டடம் மார்ச் மாதம் திறக்கப்படும்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கான புதிய கட்டட நிர்மாணப் பணிகள் நிறைவடையும் கட்டத்தை எட்டியுள்ளன. இக் கட்டடத் தொகுதி எதிர்வரும் மார்ச் மாதமளவில் திறந்து வைக்கப்படும் என் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக அரசினால் 165 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கட்டடத் தொகுதி 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிர்மாணித்து முடிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதும், மார்ச் மாதமளவில் முடிவடையும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

வடமாகாணத்திலுள்ள ஏனைய செயலகங்களை விட கிளிநொச்சி மாவட்ட செயலகம் நவீன வசதிகளுடன் புதிய மாதிரி வடிவத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

யுத்தத்தினால் கிளிநொச்சி மாவட்ட செயலகம் அழிவடைந்த நிலையில், தற்போது புதிய கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-9-259)

# மன்.பெரும்போக விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடல்

(குருமன்காடு)

மன்னார் மாவட்டத்தில் பெரும்போக விவசாய செய்கையினை மேற்கொண்டு வரும் விவசாயிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் அவசர கலந்துரையாடலொன்று கடந்த திங்கட்கிழமை மன்னார் உயிலங்குளம் ம.வி பாடசாலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் எம்.வை.எஸ்.தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மாந்தை மேற்கு, மடு, நானாட்டான், முசலி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பெரும்போக விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

இதில் கலந்துகொண்ட விவசாயிகள் தெரிவிக்கையில், "தற்போது மன்னார் மாவட்டத்தில் மழை பெய்யாததன் காரணத்தினால பெரும்போக விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நீர் இன்றி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

கட்டுக்கரைக் குளத்தை நம்பி தற்போது 4 ஆயிரம் ஏக்கரில் விவசாயிகள் பெரும்போக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு சுமார் இரண்டு மாதங்கள் கடந்த விட்டன.

ஆயினும், நெற்பயிருக்கு உரிய நீர் இல்லாமையினால் ஆயிரம் ஏக்கர் வரை நெற்பயிர்ச் செய்கை அழிவடைந்துள்ளது. தற்போது எஞ்சியுள்ள பயிர்களையாவது காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்" என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு, கட்டுக்கரை குளம் இதுவரை திறந்து விடாததன் காரணத்தினாலேயே இந்த பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய விவசாயிகள் எதிர்வரும் மாதம் நெறகதிர் வருகின்ற காலம் என்பதினால் உடனடியாக நீர் பாய்ச்ச வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

இதுமட்டுமின்றி அப்பகுதிகளில் கால்நடைகள் விவசாய பயிர்ச் செய்கையை பாதிப்படையச் செய்கின்ற வகையில், நடமாடி வருகின்றன.

எனவே இவ்விடயங்கள் தொடர்பில் உரிய அதிகாரி கவனம் செலுத்தி உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் மேலும் கோரிக்கை விடுத்தனர்.

இதற்கு ப்திலளித்து உரையாற்றிய அரசாங்க அதிபர்,விவசாயிகள் எதிர்நோக்குகின்ற இப்பிரச்சினைக்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும். பாதிக்கப்பட்ட விவசாயிகளின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். அதுமட்டுமின்றி எதிர்வரும் 5ஆம் திகதி கட்டுக்கரை குளம் திறந்து விடப்பட்டு விவசாய செய்கைகளுக்கு நீர் சென்றடைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதி அளித்துள்ள அவர்,

திறந்து விடப்படுகின்ற நீர் தேவையற்ற விதத்தில் பயன்படுத்திக்கொள்வதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

குறித்த கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டி மேல், உதவி மாவட்ட செயலாளர எம்.பரமதாஸ், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தேவ ரதன், பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.மயூரன், நீர்ப்பாசன திணைக்கள திட்ட முகாமையாளர் கிருஷ்ணரூபன் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9-250)




# விபத்தில் ஒருவர் பலி

## ஏழு பேர் காயம்

(குருமன்காடு)

வவுனியா மடுகந்தை பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வாகன விபத்தில் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் ஏழு பேர் காயம டைந்துள்ளனர்.

மேற்படி சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. கடற்படை வீரர்கள் பயணித்த ஜீப் வண்டி முச்சக்கர வண்டி ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளானதாகத் தெரியவருகிறது.

இவ் விபத்தில் சமளம்குளத்தைச் சேர்ந்த லனாதீபன் (வயது 30) என்பவர் ஸ்தலத் திலேயே பலியாகியுள்ளார். காயமடைந்த கடற்படை வீரர்கள் ஏழு பேரும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் போறான் குடிகாரன்
எனக்கு ஊத்தடி கள்ளை
~ தமிழ்ப் பழமொழி~

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# விபத்து மரணங்களுக்கு இலஞ்சமே மூலகாரணம்

வட பகுதியில் விபத்துக்களால் ஏற்படும் மரணங்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன.

வீதியில் இறங்கினால் சொந்த வீடு திரும்புவோமா? அல்லது வீடுபேறு அடைவோமா? என்பதை நிறுத்திட்டமாகக் கூறமுடியாத அளவில் விபத்து மரணங்கள் நடந்தேறுகின்றன.

நேற்று முன்தினம் புத்தாண்டு தினத்தில் ஒரு தாயும் சேயும் விபத்தில் சிக்கி பலியான சம்பவம் இதயத்தை கருகச் செய்யும்.

எனினும் விபத்து மரணம் இப்போது எங்கள் மண்ணில் நாளாந்தச் செய்தி என்பதாயிற்று.

புத்தாண்டு தினத்தில் தாயும் பிள்ளையுமாக தேவாலயத்திற்கு வழிபடச் சென்ற வேளையில் வாகனம் மோதி அந்த இடத்திலேயே அவர்கள் இருவரும் துடிதுடித்து பலியாகிப் போன செய்தி கண்டு பொதுமக்கள் பேசாதிருப்பது வியப்புக்குரியதே.

இழப்பு அவர்களுக்கானது; எங்களுக்கல்ல என்ற நினைப்பில் எங்கள் பாட்டை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என்றால், நாளுக்குநாள் விபத்து மரணங்கள் மலியவே செய்யும்.

வீதிப் புனரமைப்புகள், அதன் அகலிப்புகள், போக்குவரத்து குறியீடுகள் என்ற ஒழுங்குமுறைகள் நடைமுறைக்கு வந்த பின்னரே விபத்து மரணங்கள் எங்கள் வடபகுதியில் அதிகரித்துள்ளன எனில், அதற்கான காரணம் என்ன? என்பதை அறிவது கட்டாயமானதாகும்.

விபத்துக்கான காரணங்களை அறிய யாரேனும் முற்பட்டால் அதில் பொலிஸார் பெற்றுக் கொள்ளும் இலஞ்சமே முக்கிய காரணம் என்ற உண்மை தெரியவரும்.

வட மாகாணம் இப்போது பொலிஸாரின் இலஞ்ச உழைப்புக்கான இடமாகிப் போயிற்று. எல்லாப் பொலிஸாரும் இலஞ்சம் பெறுவதில்லை என்பது உண்மையாயினும், வட பகுதியில் போக்குவரத்து கடமையில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான பொலிஸார் இலஞ்சம் வாங்குவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர். இதற்காக அவர்கள் சில இடங்களைத் தெரிவு செய்து அங்கு கடமையில் ஈடுபடுகின்றனர்.

வாகனப் போக்குவரத்து நெருக்கடி உள்ள இடங்களில் நின்று வாகனங்களை ஒழுங்குபடுத்துவதில் பொலிஸாரைக் காணமுடியாது.

ஆனால் குச்சொழுங்கையில்– வாகன நெருக்கடி குறைந்த இடங்களில் பொலிஸார் தங்கள் கடமையை ஆற்றுகின்றனர்.

தேவையான இடத்தில் இல்லாத பொலிஸார் தேவையற்ற இடத்தில் கடமைபுரிவது கடமைமீது கொண்ட பற்றா? அல்லது இலஞ்சத்தின் மீது கொண்ட பற்றா? என்பதைப் பொலிஸ் பொறுப்பதிகாரிகள்தான் இனங்கண்டு கொள்ளவேண்டும். அதேநேரம் நம்மவர்களும் போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதை விட இலஞ்சம் கொடுத்து தப்பிக் கொள்வதிலேயே திருப்தி அடைகின்றனர்.

எதுவாயினும் பொலிஸார் இலஞ்சம் பெறுவதிலேயே அதிக அக்கறை கொண்டபின், எங்கள் மண்ணில் போக்குவரத்தில் சீரமைப்பு ஏற்படும் என எவ்வகையிலும் நம்ப முடியாது.

எனவே, இந்த விடயத்தில் நீதித்துறை மற்றும் இலஞ்ச ஒழிப்புத்துறை என்பன கவனம் செலுத்தினாலன்றி வட பகுதியில் விபத்தால் ஏற்படும் மரணங்களைத் தவிர்க்கவும் தடுக்கவும் முடியவே முடியாது.

# கொக்குத்தொடுவாயில் அரச ஆதரவுடன் காணி அபகரிப்பு

(கொக்குத்தொடுவாய்)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் அரச ஆதரவுடன் இடம்பெற்ற அப்பட்டமான நில அபகரிப்பை, வட மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனுடன் சென்ற மக்கள் இடைநிறுத்தியுள்ளனர் எனத்தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது. மேற்குறிப்பிடப்பட்ட பகுதிக்கு நேற்று முன்தினம் சென்ற தமிழ்மக்களை திருப்பி அனுப்பிய சிங்களவர்கள், நேற்று மக்களுடன் வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரனும் வருவதை அறிந்து கனரக இயந்திரத்தை காட்டுக்குள் மறைத்து வைத்து விட்டு தப்பி ஓடியுள்ளனர்.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயில் ஏற்கெனவே தமிழ்மக்களுக்கு சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் தற்போது மேலும் 345 ஏக்கர் தமிழர் நிலம், அரச ஆதரவுடன் அபகரிக்கப்படுகிறது.

கொக்குத்தொடுவாய் மக்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் உள்ள கோட்டைக்கேணி, குஞ்சுக்குளம், அம்பட்டம்வாய்க்கால், கொத்தியகாடு, வெளிதொட்டக்கண்டக்குளம், வெள்ளக்கல்லடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 345 ஏக்கர் பரப்பளவுள்ள தமிழர் நிலமே இவ்வாறு புதிதாக அபகரிக்கப்படுவதாக வடமாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவித்தார்.

தகவலறிந்த அக்காணிகளுக்குச் சொந்தமான தமிழ் மக்கள் நேற்று முன்தினம் சம்பவ இடத்திற்கு சென்று அவதானித்துள்ளனர். எனினும் குறித்த இடத்தில் காடழிப்பை செய்து கொண்டிருந்த சிங்களவர்கள், அக் காணிகள் ஆளுக்கு 50 ஏக்கர் வீதம் 7 பேருக்கு இலங்கை அமைச்சர் ஒருவரால் ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும் அங்கு சென்ற மக்களையும் திருப்பி அனுப்பியுள்ளனர்.

உழவு இயந்திரத்தில் மக்கள் ரவிகரனுடன் வருவதை அறிந்து கொண்ட சிங்களவர்கள், தாங்கள் பயன்படுத்திய இரண்டு கனரக இயந்திரங்களையும் காடுகளுக்குள் உரு மறைப்புச் செய்து விட்டு தப்பி ஓடியுள்ளனர். இதையடுத்து அங்கு சென்ற ரவிகரன் குறித்த நிலப்பகுதியை முழுமையாக ஆய்வு செய்தார். இரு கனரக இயந்திரங்களும் இலக்கத் தகடு இல்லாமலிருந்ததை நேரில் அவதானித்தார்.

அந்நிலப்பகுதியில் சுமார் 63 ஏக்கர் தமிழருக்குரிய அனுமதிப்பத்திரக் காணிகள் என்றும் மிகுதி நிலப்பகுதிகள் தமிழரின் அறுதி உறுதிக் காணிகள் என்றும் தமது காணிப்பத்திரங்களை தமிழ் மக்கள் தனக்கு காட்டினார்கள் என்றும் ரவிகரன் மேலும் தெரிவித்தார். (அ-கு)

# யூரோக்களை கடத்தி வந்தவர் விமான நிலையத்தில் கைது

(கொழும்பு)

14 ஆயிரம் யூரோக்களை உடலில் மறைத்து வைத்து கடத்தி வந்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று கைது செய்யப்பட்டார்

உடலின் பின்புறம் மறைத்து வைத்து இந்த வெளிநாட்டுப் பணத்தை எடுத்து வந்த அவர் உடனடியாக விமான நிலையத்தை விட்டு வெளியேற முயற்சித்த போது போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் தடுக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதனையடுத்து அவர் வெளிநாட்டுப் பணத்தை கடத்தி வந்தது கண்டறியப்பட்டுள்ளது.

கல்முனை பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் இருந்து கைப்பற்றிய 14 ஆயிரம் யூரோக்களின் பெறுமதி இலங்கை நாணய மதிப்பில் சுமார் 25 லட்சம் ரூபாய் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-11)

# மேலதிக பாடம் பயிலும் ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் மேலதிக மொழிப் பாடநெறியைப் பயிலும் (சிங்களம்/ஆங்கிலம்) ஆசிரியர்களுக்கான இறுதிப் பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளதால் இதில் பயிலும் அனைவரும் 05.01.2014 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு மத்திய கல்லூரியின் பிரதி அதிபரைப் பாடசாலையில் சந்திக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### நம்பிக்கையாளரின் அடையாளங்கள்

இறைவன் கூறுகிறான்: நம்பிக்கையாளர்கள் யார் என்றால் அல்லாஹ்வைப் பற்றி (அவர்கள் முன்) கூறப்பட்டால், அவர்களுடைய இதயங்கள் பயந்து நடுங்கிவிடும். அவனுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக்காண்பிக்கப்பட்டால், அவை அவர்களுக்கு ஈமானை இறைவனையே அவர்கள் சார்ந்திருப்பார்கள். அவர்கள் தொழுகையை நிலை நிறுத்துவார்கள். அவர்களுக்கு சாம் அளித்த (செல்வத்)திலிருந்து செலவு செய்வார்கள்.

(திருக்குர் ஆன்: 8: 2,3)




## வெள்ளி நற்சிந்தனை

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

நிலைபேறுடைய இறைவனைப் பற்றிப் பலர் பாடியுள்ளனர். தமக்கு முன்னே வாழ்ந்தவர்கள் இறைவனைப் பற்றிக்கூறிய கருத்துகள் பிற்காலத்தால் அவரவர் மனப்பக்குவத்திற்கேற்ப பாடல்களிலே மீள்பதிவு செய்யப்பட்டுள்ளன. மணிவாசகர் பாடல்களில் இக்கருத்துக்கள் தெளிவான நடைமுறையிலே அமைந்துள்ளன. இறைவனைப் பற்றி அவர் வருமாறு பாடியுள்ளார்.

மன்னவனே! உயர்வுடைய அறிவு நூலாகிய வேதத்தையும் தத்துவ நூலாகிய ஆகமத்தையும் சொல்லியருளியவனே! சொற்களால் இப்படிப்பட்டவன் என்று சொல்லமுடியாத நிலைக்கு அப்பாற்பட்டவனே! எக்காலத்திலும் நின்னைவிட்டு நீங்காத அணுக்கத் தொண்டர்க்கு முன்னின்று அருள் செய்பவனே அதுமட்டுமன்றி இவ்வுலகங்கள் முழுவதையும் தோற்றுவித்து அவை முழுவதிலும் கலந்திருப்பவனே.

வேதநூல் என்பது பொதுவாகிய அறிவுநூல். மெய்ந்நூல் என்பது சிறப்பாகிய தத்துவநூல். இவற்றை எல்லாம் சொன்னவன் என மணிவாசகர் பாடியதற்கு ஒரு விளக்கம் உண்டு. வாய்மொழியாகவே இவை இறைவனால் அருளப்பட்டவையாகும். வடமொழியில் சொல்லுதலை உபதேசித்தல் என்பர். மணிவாசகர் பாடிய கீர்த்தித் திருவகலிலும் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் என முன்னொரு கால் உமையம்மைக்குச் சொன்னதைக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இறைவனை நாம் சொற்களால் இத்தன்மையன் என வரையறை செய்து கூறமுடியாது.

சொற் பதங்கடந்த அப்பன் எனப் பிறிதோரிடத்தும் மணிவாசகர் பாடியுள்ளார். இறைவன் தன் நினைவோடு இருப்பவருக்கு விரைந்து வந்து அருள் புரிவான். கழியாத் தொழும்பர் என மணிவாசகர் குறிப்பிடுவது இத்தகையவர்களையே.

தன்னிலையைக் கூறும்போது நின்னோடு கலக்கும் நெறியறியாத சிறியேன் என்கிறார். சிறியேன் என்பது மனம் பக்குவப்படாத சிறுமை எனப் பொருள் தருகிறது. அதனால் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட போது ஏற்பட்ட மகிழ்ச்சி இறைவனைப் பிரிந்த போது மின்னல் தோன்றி மறைவது போல இருந்ததென்கிறார். மகிழ்ச்சி நீங்கினமட்டில் சற்றுத் துன்பமும் அதில் உள்ளதால் மின்னலை உவமையாகக் கூறினார். மின் தோன்றி மறையும் போது நமது கண்களில் முன்புள்ள சிற்றொளியும் குன்றி இருளாதல் இயல்பு. அந்த அனுபவத்தை மணிவாசகர் சிறிய மகிழ்ச்சியாகக் கருதியமை தன்னுடைய சிற்றறிவால் ஏற்பட்டதென்கிறார். மெய்யடியாராகத் தான் வாழவில்லை என்பதையும் இறைவனிடம் விளக்கமாக எடுத்துரைக்கிறார். தன்னுடைய இந்தக் குறைபாட்டினால் இறைவன் தன்னைக் கைவிட்டுவிடக்கூடாதே என அஞ்சுகிறார்.

மணிவாசகர் இறைவன் பெருமைகளை மீள எண்ணிப்பார்க்கும் போது தான் தன்னை இறைவன் வலிய வந்து ஆட்கொண்டருளியதன் உயர்வை உணர்கிறார். தனது மனப்பக்குவத்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

தைக் கைவிட்டதற்காக வருந்துகிறார். நிலையான இறை வாழ்வியலை விட்டு நிலையற்ற உலகியல் வாழ்வைச் சேர்ந்த அறியாமையை நன்கு உணர்கிறார்.

இது இன்றைய உலகத்தவர்க்கும் பொருந்தும். இறைவன் பற்றிய தெளிவான கருத்து நிலைகளை அறிந்தும் அதைச் செயற்படுத்தாத பலர் உள்ளர்.

மன்னவனே ஒன்றுமாற றியாச்
சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே விட்டிடுதி கண்டாய்
மிக்கவேத மெய்ந்நூல்
சொன்னவனே சொற்கழிந்தவனே
கழியாத் தொழும்பர்
முன்னவனே பின்னுமானவனே
இம் முழுவதையுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பாந்தறை வி.கழக கிரிக்கெட் போட்டி; முத்துத்தம்பி மத்திய வி.கழகம் சம்பியன்

கொம்பாந்தறை விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் இறுதிப் போட்டியில் காமாட்சி அணியை வீழ்த்தி முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழகம் சம்பியன் பட்டத்தை பெற்றுள்ளது.

இப் போட்டியானது கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய காமாட்சி அணியானது 3 இலக்குகளை இழந்து 83 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் காமாட்சி அணி சார்பாக ஜெயரூபன் 32 ஓட்டங்களையும் சிந்து 37 ஓட்டங்களையும் பெற்று கொடுத்தனர்.



கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சம்பியன் பட்டம் வென்ற முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழக அணி

பந்து வீச்சில் முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழகம் சார்பாக கிஷோ, சுரேந்திரன், பிரபவன் ஆகியோர் தலா 1 இலக்குகளை கைப்பற்றி இருந்தனர்.

84 என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய முத்துத்தம்பி விளையாட்டுக் கழகம் ஒரு கட்டத்தில் 3 இலக்குகளை இழந்து 25 ஓட்டங்களை பெற்று இருந்தது எனினும் விதுன், கிஷோ அவர்களின் அதிரடி ஆட்டம் கைகொடுக்க 7.3 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 89 ஓட்டங்களை பெற்று வெற்றி அடைந்தது.

துடுப்பாட்டத்தில் முத்துத்தம்பி மத்திய விளையாட்டுக் கழகம் சார்பாக விதுன் 31 ஓட்டங்களையும் கிஷோ 21 ஓட்டங்களையும் லவன் 16, ராஜ் 6, முரளி 6 ஓட்டங்களையும் பெற்று கொடுத்தனர்.

பந்து வீச்சில் காமாட்சி அணி சார்பாக மோகனதீபன் 3 இலக்குகளை கைப்பற்றி இருந்தார்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக முத்துத்தம்பி வி.கழக அணி வீரர் விதுன் தெரிவானார். தொடர் நாயகனாக முத்துத் தம்பி வி.கழகத்தின் சுரேந்திரன் தெரிவானார். (சு)

## மத்தியஸ்தர்களுக்கான விசேட கூட்டம்

வலிகாம லீக்கிற்குட்பட்ட மத்தியஸ்தர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று எதிர் வரும் 4 ஆம் திகதி காலை 10 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிதாக இணைய விரும்பும் மத்தியஸ்தர்களையும் ஏனைய காற்பந்தாட்ட மத்தியஸ்தர்களையும் குறித்த கூட்டத்திற்கு தவறாது சமூகமளிக்குமாறு வலிகாமம் காற்பந்தாட்ட லீக்கின் செயலாளர் இ.யுகராஜ் அறிவித்துள்ளார். (சு-23)

## தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்தும் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு இளவாலை வருததப்படாத வாலிபர் சங்கம் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

வட மாகாண ரீதியில் மாபெரும் கபடி சுற்று போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலாம் இடம் பெறும் அணிக்கு 10ஆயிரம் ரூபாவும் இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 5 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும்.

ஆண்களுக்கான மரதன் ஓட்ட போட்டி திறந்த போட்டியாக இடம்பெறவுள்ளது.

இதில் முதலாம் இடம் பெறுபவருக்கு 5ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் இரண்டாம் இடம் பெறுபவருக்கு 3 ஆயிரம் ரூபா பணப் பரிசிலும் வழங்கப்படும். பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்.

மாபெரும் பட்டமேற்று போட்டியும் இடம் பெறவுள்ளது.

இதன் முதலாம் இடம் 2 ஆயிரத்து 500 ரூபா பரிசிலும். 2 ஆம் இடம் ஆயிரத்து 500 ரூபா பரிசிலும் வழங்கப்படும்.

பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யவும்.

அத்துடன் சறுக்கு மரம் ஏறல் போட்டி. தயிர் முட்டி அடிக்கும் போட்டி .தலைகணை சண்டை. திருமணமான . திருமணமாகதவர்களுக்கான கயிறுமுத்தல் போட்டி போன்றனவும் இடம்பெறவுள்ளன.

இவையாவும் திறந்த போட்டிகளாகவும் எப்பிரதேசத்தவரும் கலந்து கொள்ளும் போட்டிகளாகும் .

பங்கு கொள்ள விரும்பும் அனைவரும் மேற் குறிப்பிட்ட காலங்களுக்கு முன்னதாக 0773992478 அல்லது 0750416493 என்னும் இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (சு-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## காற்பந்து சுற்றுப் போட்டி; வதிரி பொம்மர்ஸ் சம்பியன்



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையில் பருத்தித்துறை வை.எம்.சீ.ஏ யினால் நடத்தப்பட்ட அணிக்கு 7 பேர் கொண்ட காற்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

12 அணிகள் பங்கு கொண்ட இச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக அணியும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியும் மோதின.

ஆரம்பம் முதலே விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் கோல் போடுவதற்கு இரு அணிகளும் முயற்சித்த போதும் பொம்மர்ஸ் அணியின் வீரன் சாரங்கன் போட்டியின் 25ஆவது நிமிடத்தில் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கோலொன்றினைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு இரு அணிகளும் கோல் போடுவதற்கு முயற்சித்த போதும் கோலெதனையும் பெற முடியவில்லை.இதனால் வதிரி பொம்மர்ஸ் அணி 1:0 என்னும் கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது. போட்டியின் சிறப்பாட்டக்காரனாக நவஜீவன்ஸ் அணியின் கோல் காப்பாளர நிரூஷாந் தெரிவானார்.

போட்டியின் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலக நிர்வாக உறுப்பினர் வீ.கே.சண்முகநாதன். பருத்தித்துறை லீக் காற்பந்தாட்ட செயலர் ட.வரதராசன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றிக்கிண்ணங்களை வழங்கி வைத்தனர். (சு-23)

## டிவிலியர்ஸிற்கு சத்திரசிகிச்சை




தென்னாபிரிக்க ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் தலைவரும். அவ்வணியின் சிரேஷ்ட துடுப்பாட்ட வீரருமான ஏபி டி விலியர்ஸிற்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. அவரது கையிலேயே இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

2011ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் போது ஏபி டிவிலியர்ஸிற்கு கையில் உபாதை ஏற்பட்டிருந்தது. இதற்காக அவரது கையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டதோடு. அவரது கையில் தகடொன்று பொருத்தப்பட்டிருந்தது.

ஆனால் அவருக்குப் பொருத்தப்பட்ட தகடு அண்மைக்காலத்தில் அவருக்கு வலியை ஏற்படுத்தி வருவதால் அந்தத் தகடு சத்திரசிகிச்சை மூலம் நீக்கப்படவுள்ளது. இவ்வாரத்தில் இது நீக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதன் காரணமாக தென்னாபிரிக்காவின் உள்ளூர் இருபது -20 தொடரில் ஏபி டிவிலியர்ஸ் பங்குபற்ற மாட்டார் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும். பெப்ரவரி மாதத்தில் இடம்பெறவுள்ள தென்னாபிரிக்க. அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான தொடரில் அவர் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்க. இந்திய அணிகளுக்கிடையிலான தொடர் சுருக்கப்பட்டதன் காரணமாக தென்னாபிரிக்க அணி இம்மாதத்தில் எந்தவொரு சர்வதேசப் போட்டியிலும் பங்குபற்றாது என்பது குறிப்பிடத்தக்கது. (சு)

## நியூஸ்ரார்ஸ் இருபது -20 போட்டி; யாழ்.சென்றல் வெற்றி



நியூஸ்ரார்ஸ் இருபது - 20 போட்டியில் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

யாழ்.நியூஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் லீக் முறையிலான இருபது-20 துடுப்பாட்டப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்து கல்லூரி மைதானத்தில இடம்பெற்ற பேட்டியொனறில் யாழ். சென்றல் விளையாட்டுக கழக அணியினை எதிர்த்து தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென்றல் விளையாட்டுக் கழகம் 20 பந்துபரி மாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் ரஜீவ்குமார் 85. றொசான் 42 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் கிறாஸ் கொப்பர் அணி சார்பாக அஜித் 2 (30) இலக்குகளைக் கைப்பற்றினார்.

151என்ற வெற்றியிலக்கை நோககி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக்கள மிறங்கிய கிறாஸ் கொப்பர் அணி வெற்றிக்காக கடுமையாகப் போராடியது.

எனினும் சென்றல் அணியின் பந்து வீச்சாளர்களின் துல்லியமான பந்து வீச்சினால் இறுதி நேரத்தில் 2 ஓட்டங்களால் கிறாஸ் கொப்பர் அணியின் வெற்றி பறிபோனது.


இறுதியில் 20 பந்துபரிமாற்றங்களை முழுமையாக எதிர்கொண்டு 8 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக கபிலன் 56. நிலோசன் 34. ரகீம் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்றல் விளையாட்டுக் கழக அணி சார்பாக ரஜீவ் குமார் 3 (24). றொசான் 3 (30). ஜெசிந்தன் 2 (21) இலக்குகளையும் கைப்பற்றினர். (சு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடுகின்றது இலங்கை



இலங்கை அணிக் கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்றைய 3-வது நாள் ஆட்டநேர இறுதியில் வீழ்த்தப் பட்ட இலங்கையின் பெறுமதி மிக்க விக்கெட்டுக்களால் பாகிஸ்தான் அணி வலுவான நிலையில் உள்ளது.

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் முதல் டெஸ்ட் அபுதாபியில் கடந்த 31-ம் திகதி ஆரம்பமாகியது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் இன்னிங்ஸுக்காக 65 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் 2-ம் நாள் ஆட்டநேர முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 327 ஓட்டங்களை எடுத்திருந்தது.


நேற்றைய 3-ம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 383 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 179 ஓட்டங்களால் முன்னிலை பெற்றது.

துடுப்பாட்டத்தில் யுனிஸ் கான், மிஸ்பா உல் ஹக் ஆகியோர் முறையே 136,135 ஓட்டங்களை எடுத்தனர்.

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்ப்பதற்கு 179 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் தமது 2-வது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை அணி, ஆரம்பத்தில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போதிலும் போட்டியின் இறுதிநேர ஓவர்களில் விக்கெட்டுக்களை பறிகொடுத்ததன் காரணமாக தடுமாற்றத்துக்குள்ளாகியுள்ளது.

ஆட்டநேர முடிவில் 61.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 186 ஓட்டங்களை எடுத்தது.

இன்று போட்டியின் 4-ம் நாள் ஆட்டமாகும். இந்நாளில் 6 விக்கெட்டுக்கள் கைவசமிருக்கும் நிலையில் இலங்கை அணி 7 ஓட்டங்களால் முன்னிலை வகிக்கிறது.(க)



## எரிபொருள்...

டமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்யக் கூடாது என அமெரிக்கா இலங்கைக்கு அறிவுறுத்தியுள்ளதாக பெற்றோலிய வள அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதி தொடர்பில் அமெரிக்காவுடன் இலங்கை பல சுற்று பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

ஈரானுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை தளர்த்துவதற்கு உலகத் தலைவர்கள் அண்மையில் இணக்கம் வெளியிட்டிருந்தனர்.

எனினும், மசகு எண்ணெய் ஏற்றுமதி செய்ய ஈரானுக்கு இன்னமும் அனுமதி வழங்கப்படவில்லை.

ஈரானிய மசகு எண்ணெயை சுத்திகரிக்கும் நோக்கிலேயே சபுகஸ் கந்த சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டதாகவும், தற்போது ஈரானிடமிருந்து மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய தடை விதிக்கப் பட்டுள்ளமை வருத்தமளிப்பதாகவும் பெற்றோலிய வள அமைச்சர் அனுரபிரியதர்சனயாப்பா தெரிவித்துள்ளார்.

மேலும் ஆறு மாதங்களுக்கு மசகு எண்ணெய் இறக்குமதி செய்ய இலங்கைக்கு கடந்த நவம்பர் மாதம் அமெரிக்கா சலுகை அளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(எ-11)

# நியூசிலாந்து அணியின் உலக சாதனை

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில், நியூசிலாந்து வீரர் கோரி அண்டர்சன் 36 பந்தில் சதம் அடித்து உலக சாதனை படைத்தார்.

நியூசிலாந்து சென்றுள்ள மேற்கிந்திய தீவுகள் அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வென்றது. இரண்டாவது போட்டி மழையால் ரத்தானது. இரு அணிகள் மோதும் மூன்றாவது போட்டி குயிண்ஸ்டவுனில் நடந்தது. மழை குறுக்கிட்ட காரணத்தினால் போட்டி, 21 ஓவர்களாக குறைக்க ப்பட்டது. இந்த போட்டியில் நியூசிலாந்து அணியின் வீரர் அண்டர்சன் 36 பந்தில் சதம அடித்து உலக சாதனை படைத்தார். அதிவேக சதம் மட்டுமின்றி மேலும் சில சாதனைகளையும் நியூசிலா ந்து படைத்துள்ளது.

**அதிக சிக்சர்**

ஆண்டர்சன் 14 சிக்சர் அடித்ததன் மூலம், ஒரே போட்டியில் அதிக சிக்சர் அடித்த வீரர்கள் வரிசையில் 3-ம் இடத்தை பிடித்தார். முதல் இடத்தில் இந்தியாவின் ரோகித் சர்மாவும்(16 சிக்சர்), இரண்டாம் இடத்தில் அவுஸ்திரேலியாவின் வோட்சனும் (15சிக்சர்) உள்ளனர்.

**மற்றொரு உலக சாதனை**

அண்டர்சன் 14, ரைடர் 5,மெக்கலம் 3 என நியூசிலாந்து அணி அன்றைய போட்டியில் மட்டும் 22 சிக்சர் விளாசியுள்ளது. ஒரே போட்டியில் ஒரு அணி அடித்த அதிகபட்ச சிக்சர் இதுவே. இதுவும் ஒரு உலக சாதனைதான். இதற்கு முன் இந்தியா, கடந்தாண்டு அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 19 சிக்சர் விளாசியது, அது 50 ஓவர். நியூசிலாந்து அடித்திருப்பது வெறும் 21 ஓவரில் என்பது குறிப்பிடத்தக்கது.(க)



# இறுதி ஆஷஸ் இன்று ஆரம்பம்

அவுஸ்திரேலியாவிற்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆஷஸ் போட்டிகளில் பங்குபற்றிவரும் இங்கிலாந்து அணிக்கும், அவுஸ்திரேலிய அணிக்குமிடையிலான 5ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ள இப்போட்டி இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 5 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

4 போட்டிகளின் நிறைவில் இத்தொடரை அவுஸ்திரேலிய அணி 4-0 என்ற கணக்கில் ஏற்கெனவே கைப்பற்றியுள்ள நிலையில், ஆஷஸ் கிண்ணம் அவுஸ்திரேலியா வசமாவது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொடர் 5-0 என்ற கணக்கில் முடிவடையுமா, 4-0 என்ற கணக்கிலா அல்லது 4-1 என்ற கணக்கில் முடிவடையுமா என்பதுவே தற்போதுள்ள வினாவாக உள்ளது.

**அணி விபரம்**

அவுஸ்திரேலியா: கிறிஸ் றோஜர்ஸ், டேவிட் வோர்ணர், ஷேன் வொற்சன், மைக்கல் கிளார்க், ஸ்டீவன் ஸ்மித், ஜோர்ஜ் பெய்லி, பிரட் ஹடின், மிற்சல் ஜோன்சன், பீற்றர் சிடில், றியன் ஹரிஸ், நேதன லயன்

இங்கிலாந்து: அலஸ்ரெயர்குக், ஜோறூட், இயன் பெல், கெவின் பீற்றர்சன், கரி பலன்ஸ், பென் ஸ்ரோக்ஸ், ஜோனி பெயர்ஸ்ரோ, ஸ்கொட் போர்த்விக், ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜேம்ஸ் அன்டர்சன், போய்ட் றாங்கின்(க)

## சிறப்பாக...

மாகாண சபை சிறப்பாக செயற்பட ஆளுநரின் ஒத்துழைப்பு அவசியம். அந்த வகையில் எனது ஒத்துழைப்பு மாகாண சபைக்கு பூரணமாக கிடைக்கும்.

முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடன் இணைந்து இங்குள்ள அதிகாரிகள் செயற்பட வேண்டும்.

இந்த மாகாணத்தை சகல துறைகளிலும் முன்னேற்றி செல்வதற்கு மாகாண சபைக்கு அரச அதிகாரிகளின் ஒத்துழைப்பும் அவசியம்.

எனவே பிரதம செயலாளர் உட்பட மாகாண சபைக்குள் வரும் சகல அரச அதிகாரிகளும் ஒத்துழைப்பு வழங்கி மாகாண சபையுடன் இணைந்து செயற்பட வேண்டும என நேரடியாக உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த காலங்களில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக வடக்கு மாகாணத்தில் பல அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது எனவும் இவ்வாறான அபிவிருத்தி திட்டங்கள் வட க்கில் தொடர்ந்து இடம் பெறும் எனவும் தெரிவித்தார்.

மேலும் மக்களால் தெரிவு செய் யப்பட்ட இந்த மாகாணத்தின் முத லமைச்சர் மற்றும் அமைச்சர்கள் உறுப்பினர்களுடன் இணைந்து செயற்பட்டால் மட்டுமே மாகாணத்தை முன்னேற்றிச் செல்ல முடியும் எனவு ம் அவர்மேலும் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு மாகாணத்திற்கு புதிதாக 93 சாரதிகளும் இணைத்துக் கொள்ளப்பட்டதோடு இவர்களுக்கான நியமனத்தையும் ஆளுநர் வழங்கியிருந்தார்.

மேலும் இந்த நிகழ்வுகளுக்கு மாகாண சபையின் முதலமைச்சரோ அமைச்சர்களோ உறுப்பினர்களே எவரும் கலந்து கொள்ள வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## மேஜர் ஜெனரல்...

57-வது படைப் பிரிவின் கட்டளை தளபதியாக இருந்த ஜகத் டயஸ் இறுதிக்கட்ட போரின் போது மனிதாபிமான சட்டங்களை மீறிய மைக்கான பங்களிப்பை செய்தார என்ற குற்றச்சாட்டில் கடந்த வருடம் வெளிநாட்டு இராணுவ பயிற்சித் திட்டங்கள் அவருக்கு நிராகரிக்கப்பட்டன.போர் குற்றங்களில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டு காரண மாக அமெரிக்கா வில் ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இராணுவப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக விசா விண்ணப்பத்தை அமெரி க்க நிராகரித்தது.அதேபோல் அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக அங்கு செல்வதற்கான விசா விண்ணப்பமும் நிராகரிக்கப் பட்டது. (செ-11)

## ஜனாதிபதி...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக னேஸ் ர வனிற் கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது இருவரும் புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

வடமாகாண சபையின் நிர்வாக பிரச்சினைகள் தொடர்பில் முதலமைச்சர் விக்னேஸ வரன், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்ததுடன், வடமாகாண சபையின் எதிர்கால நிர்வாக செயற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடியதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சந்திப்பின் போது ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, அமைச்சரவை செயலாளர் சுமித் அபேசிங்க, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் உடனிருந்தனர்.

இது ஒரு திட்டமிடப்பட்ட சந்திப்பு எனவும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L DAY CLASS அரசியல்

DCM யாழ். நகர் | அஸ்மின் சண்டிலிப்பாய் | SUBRA சித்தன்கேணி

A/L 2014 : இலங்கை அரசியல்

A/L 2015 : அலகு 4

* புதிய பிரிவுகள் ஆரம்பம் : 05.01.2014

BY : K. சுகாஷ்

(5211)



விஸ்டம்

தொழில்நுட்பக் கல்லூரி

இல. 475, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணார் பண்ணை சிவன் கோவிலடி)

A/L தொழில்நுட்பப் பிரிவு

Engineering Technology
- K. Ravikumar M.A.Dip. in Tech (Technology), N.C.T, PGDE
- C. Ranjithkumar NCT (Electrical & Electronic Engineering)
- P. Kirubakaran NCT (Civil Engineering)

Bio Systems Technology
- M. Vishnudevan B.Sc. (Agric..)

Science for Technology
- A. Aravinthan B.Sc (Hons) Spl in Chem
- P. Vimalanathan B.Sc
- R.S. Mayooran NDT (Maths) Eng.
- S. Maurathasan M.I.T. SCJP

ICT
- S. Maurathasan M.I.T. SCJP

Business Studies
- S. Sivarajah M.Com

Accounting
- S. Sivarajah M.Com
- L. Tharu B.B.A (Hons) ACC Spl., PGDM

Economics
- B.Kamal B.Com (Spl.in ACC) PG Dip (Per. Mgt & Ind.Rel) M.A (Int. Dev &Coop)

Agriculture & Science
- M. Vishnudevan B.Sc. (Agric..)

Geography
- M. Tharmaseelan M.A, PGDE

General English
- B. Kamal

தொழில்நுட்பப் பிரிவிற்கு தனித்துவமான ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்

A/L 2016 வகுப்புக்கள் நடைபெறுகின்றன!

(5213)


## அவுஸ்திரேலியா...

ரேலிய அரசாங்கம் இலங்கை அகதிகளை கேள் விகள் இன்றி நாடுகடத்தி வருவதாக அவர் குற்றம் சுமத்தினார்.

அத்துடன் அகதி அந்தஸ்து கோருகின்றவர்கள் சட்டத்தரணிகளை சந்திப்பதற்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை.

இது ஒரு மிக்பெரிய மனித உரிமை மீறல் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-11)


BEACON

- யாழ் நகர் -

A/L 2016

ஆரம்பம் (05-01-2014 (Sun 9.00AM)

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| பொருளியல் | : K. பிரதீபன் (B.B.A) |
| கணக்கீடு | : R. சுகிர்தன் (B.Com) |
| வணிகக்கல்வி | : P. கோகிலன் (HNDA) |

கலைப் பிரிவு

| | |
|---|---|
| தமிழ் | : R. ஜீவானந்தன், கௌரி |
| அளவையியல் | : S.S. மனோகரன் |
| இந்து நாகரிகம் | : N. ராஜா |
| அரசியல் | : S.S.மனோகரன் |
| வரலாறு | : S. தாஸ் |
| நாட. அரங்கியல் | : M. சுதன் |

(C-6072)



NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. | இரு இடத்திலும் | மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.

A/L 2016

கலை, வர்த்தக, கணித, உயிரியல், தொழில்நுட்ப பிரிவுகள்

ஆரம்பம் Jan 05 9.00Am

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.



மிகப்பிந்திய அதிரடி

சிங்கப்பூரில் படிக்க
பகுதி நேரமாக 70,000/-
வரை உழைக்க
அரியவாய்ப்பு.

2 மாதங்களில் பறக்கலாம்.

9 பேருக்கு மட்டுமே, சட்ட ஆலோசனைக்கு

திசைகாட்டி பிறைவேற் லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 221 9016, 021 568 9090

www.thisaivisa.com

(C-6076)


## புலிகளுக்கு...

டங்களை ஒடுக்கும் நடவடிக்கைகளில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

இவர் எதிர்வரும் யூலை மாதத்துக்குப் பின்னர் இந்திய படைத்தரப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)


NEW SCIENCE WORLD

VICTORY MUST

Navalar road junction , Brown road , Jaffna.
Web : www.physicsocean.com Email : info@physicsocean.com

துறைசார் வளவாளர்களால் கற்பிக்கப்படும்.

நேரம் : சனி, ஞாயிறு
2.30 - 5.30 pm

ஆரம்பம் : 05-01-2014

மேலதிக விபரம் அலுவலகத்தில்

A/L 2016

TECHNOLOGY STREAM
தொழில்நுட்பவியல் துறை

SCIENCE OF TECHNOLOGY
தொழில்நுட்பத்துக்கான விஞ்ஞானம்

BIO TECHNOLOGY
உயிர்முறை தொழில்நுட்பவியல்

ENGINEERING TECHNOLOGY
பொறியியற் தொழில்நுட்பவியல்

(C-6077)



முதல் முறையாக ஆபரண மலிவு விற்பனைச் சந்தை யாழ்ப்பாணத்தில்

தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், கிளசிக் பேர்ல்ஸ், ரேடியம் முலாம் பூசப்பட்ட கொரியன் கல் பதித்த ஆபரணங்கள் முதலியனவற்றை கொள்வனவு செய்வதற்கு இலங்கை மகளிருக்கு ஓர் பொன்னான சந்தர்ப்பம்.

10 இலட்சத்திற்கும் மேற்பட்ட டிசைன்களிலிருந்து தெரிவு செய்து வாங்குவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

ரூபா 200/- மற்றும், ரூபாய் 400/- மட்டுமே.

இடம் : வீரசிங்கம் மண்டபம்
12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

4 நாட்கள் மட்டும்3, 4, 5, 6ம் திகதி ஜனவரி 2014

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் திங்கள்கிழமை (நேரம் - காலை 10மணி முதல் மாலை 8மணி வரை)

ஒவ்வொன்றும் ரூபாய் 2000 முதல் ரூபாய் 4000 வரையான ஏற்றுமதி விலை கொண்ட ஆபரணங்கள் ரூபாய் 200 முதல் ரூபாய் 400 வரை மட்டும் விற்க்கபடவுள்ளன.

இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாமையால் சில மட்டும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ ........ Rs.200/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான ப்ரேஸ்லட் ........ Rs.200/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் மோதிரம் ........ Rs.200/- மட்டும்
- வெஸ்டன் ஸ்டைல் தோடு ........ Rs.200/- மட்டும்
- தங்கம் முலாம் பூசப்பட்ட ஆண்களுக்கான மோதிரம் ........ Rs.200/- மட்டும்
- கொரியன் ஸ்டோன் தோடு ........ Rs.200/- மட்டும்
- வெள்ளி முலாம் பூசப்பட்ட கால் கொலுசு ........ Rs.200/- மட்டும்
- ஓசன் ப்ளூ டயமண்ட் மோதிரம் ........ Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் நெக்லஸ் செட் ........ Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட வளையல் செட் ........ Rs.400/- மட்டும்
- தங்க முலாம் பூசப்பட்ட சங்கிலி ........ Rs.400/- மட்டும்
- அவுஸ்திரேலியன் டயமண்ட் சேலை பின் ........ Rs.400/- மட்டும்
- கிளசிக் பேர்ள் நெக்லஸ் செட் ........ Rs.400/- மட்டும்
- சுஹாகன் மங்கல் சூத்ரா. ........ Rs.400/- மட்டும்

விசேட சலுகை : திருமணம் மற்றும் விசேட வைபவங்களுக்கான ஆபரணங்கள் ரூபாய் 500/= முதல் ரூபாய் 16000/= வரையான விலைகளில் விற்கப்படும்.

Entry Free | CONTACT : 0774032706 | Sunday Open

Presented by : S&G International Agencies (Pvt) Ltd (5210)



After O/L...

எதிர்கால சவால்களை வெல்லும் வெற்றிகரமான உயர்கல்விக்கான உங்கள் முதற் படி...

LADDER
Helping Your Fast Climb in Your Career

— Workroom Based 5 days crash course... —



இம் முறை O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எதிர்கால உயர்கல்வி முன்னேற்றத்தினை இலகு படுத்துவதற்கென விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறி.

பங்கு பற்றும் அனைத்து மாணவர்களுக்குமான பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Course Content
- English & Communication
- IT Skills
- Leadership & Teamwork
- Memory Skills & Learning techniques

முற்றிலும் இலவச பாடநெறி

மேலதிக விபரங்களுக்கு
0777102131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA
16, Point pedro Road, Jaffna, Sri Lanka.
Hotline : 021 2219910

15 YEARS of Trust & Excellence in Higher Education

BCAS CAMPUS THE NATIONS NO.1 HIGHER EDUCATION PROVIDER IN SRI LANKA LMD

ISO 9001:2008 CERTIFIED

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

(C-6079)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.01.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org